பக்கங்கள்: 14

Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்
நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஞூ சித்திரை மீ 22 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 09 (05—05—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 13

# தமிழ்ப் பகுதிக்கு தனியான பொலீஸ் பயிற்சி பாடசாலை!

## புதிதாகத் தெரிவு செய்யப்படும் பொலீஸாருக்கு அங்கேயே பயிற்சி

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு - கிழக்கில் பணிபுரிவதற்கெனத் தெரிவு செய்யப்படும் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிப்பதற்குத் தனியான பொலீஸ் பயிற்சிப் பாடசாலை ஒன்று விரைவில் உருவாக்கப்படலாம்.

இது குறித்து இப்போது பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் பணிபுரிவதற்கென முதற்கட்டமாக ஏழாயிரம் தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகளை றிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர்களாக நியமிக்க முடிவாகியுள்ளது தெரிந்ததே.

அதன் பொருட்டு தமிழ் மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுத் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் அலுவல்கள் முடிந்து விட்டன.

தெரிவு செய்யப்பட்டவர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 1,190 தமிழர் தெரிவு!

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து றிசேர்வ் பொலீஸ் படைக்கு ஆயிரத்து 190 தமிழர்கள் தெரிவுசெய்யப்படுள்ளனர்.

சென்றமாதம் 20ஆம் திகதி முதல் யாழ். பொலீஸ் நிலையத்தில் நடைபெற்று வந்த றிசேர்வ் பொலீஸ் படைக்கு ஆட்சேர்க்கும் நேர்முகப்பரீட்சைகள் நேற்றுடன் முடிவடைந்தன.

இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் ஆயிரம்பேர் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்களாகவும் 100 பேர் றிசேர்வ் உதவிப்பொலீஸ்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## வேலை நிறுத்தம் சமரசமாக தீர்ந்தது

யாழ்ப்பாணம், மே 5

யாழ் மாநகரசபையின் நகர சுத்திகரிப்பு சிற்றூழியர்கள் நேற்றுக் காலை மேற்கொண்ட வேலை நிறுத்தம் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

சக ஊழியர் ஒருவர் வேலையில் இருந்து இடை நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

மாநகரசபை ஆணையாளர் சிற்றூழியர்களுடன் பேசி சமரசம் கண்டதை அடுத்து அவர்கள் வேலைக்குத் திரும்பினர். [ஒ-3]

## சுபநேரம்

05-05- 1990

சனிக்கிழமை சித்திரை 22

சுபநேரம்:

02-56 முதல் 04-26 வரை

இராகுகாலம்

08-56 முதல் 10-26 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## றிசேர்வ் பொலீஸுக்கு மேலும் வெற்றிடங்கள்

### டி.ஐ.ஜிக்கு விண்ணப்பிக்கலாம்

வடக்கு – கிழக்கு றிசேர்வ் பொலீஸ் படைக்கு மேலும் வெற்றிடங்கள் உள்ளன.

இனி விண்ணப்பிக் கவிரும்புவோர் திருகோணமலையில் இயங்கும் வடக்கு – கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மாஅதிபர் (டி. ஐ. ஜி.) அலுவலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம்.

இத்தகவலை பொலீஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் மேற்படி விண்ணப்பங்கள் ஏற்பது நிறுத்தப்பட்டு விட்டது தெரிந்ததே. (ஒ-3)

## வெடிமருந்து மீட்பு!

சென்னை, மே 5

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளிக்கு அருகில் 250 கிலோகிறாம் வெடிமருந்துப் பொருள்களைப் பொலீஸார் நேற்றுக்கைப்பற்றினர்.

கண்டுபிடிக்கப்பட்ட வெடிமருந்துப்பொருள்கள் பிளாஸ்டிக் பைகளில் சீல் செய்யப்பட்டு கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்தன. (ஒ-எ)

## நெல்லியடியில் நாளை நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 5

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது.

பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்:–

கரணவாய் மேற்கு, கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் கிழக்கு, கரணவாய் மத்தி.

துன்னாலை மேற்கு, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு, கப்புது. (ஒ)

## திருமலையில் தொலைபேசி சேவை ஸ்தம்பிதம்!

திருகோணமலை, மே 5

திருகோணமலையிலிருந்து நாட்டின் இதர பகுதிகளுக்கான தொலைபேசிச் சேவை கடந்த ஒரு வார காலமாகச் சீர்கெட்டுள்ளது.

அத்துடன் திருகோணமலைக்குள்ளேயே பல இணைப்புகள் பழுதடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-தி)

## செய்திச் சாரம்

### சூறாவளியால் 100 வீடுகள் சேதம்!

கொழும்பு, மே. 5

பொலநறுவைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை சூறாவளி வீசியது.

சுமார் ஒரு மணித்தியாலம் வீசிய சூறாவளி காரணமாக நூறு வீடுகள் வரையில் சேதமடைந்தன. (ஒ)

### ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், மே 5

விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு யாழ். கனகரத்தினம். மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற இருந்த சேவைக்காலப் பயிற்சி பின் போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 வரை இந்தப் பயிற்சி நடைபெற இருந்தது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்று தெரிவித்தார். (ஒ)

### முச்சந்தியில் பாயும் புலிகள்

வல்வெட்டித்துறை, மே 5

வல்வெட்டித்துறை சந்தைக் கருகாமையில் உள்ள முச்சந்தியில் மூன்று பாயும் புலிகளின் சிலை வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

இப்புலிகளில் ஒன்று பருத்தித்துறை வீதியையும் மற்றொன்று யாழ்ப்பாண வீதியையும் இன்னொன்று காங்கேசன்துறை வீதியையும் நோக்கியபடி காட்சி அளிக்கின்றன. (ஒ-160)

### வீதிகள் புனரமைப்பைப் பார்வையிட

## வெளிநாட்டு அதிகாரிகள் குழு நாளை வவுனியா வருகிறது

வவுனியா, மே 5

வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம், ஒக்ஸ்பாம் (OXFAM) ஆகிய இரண்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்டத்தில் புனரமைக்கப்படவுள்ள புளியங்குளம் — நெடுங்கேணி வீதியைப் பார்வையிடுவதற்காக அதிகாரிகள் குழு ஒன்று நாளை ஆறாம் திகதி வவுனியா வரவுள்ளது.

இந்த நிறுவனங்களைச் சேர்ந்த திரு. கிரையன் பெண்கோ, திரு. சாம் ஹென்றிக் ஆகிய இரு அதிகாரிகளும் இந்தக் குழுவின் முக்கியஸ்தர்களாவார்கள்.

இவர்கள் வவுனியா மாவட்டத்துடன் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்கள்.

இந்த நிறுவனங்களின் நிதியுதவியின் மூலம் நெளுக்குளம் — நேரியகுளம் ஆறு மைல் நீளமான வவுனியா—ஹொரவப்பத்தானை வீதி ஆகியவையும் புனரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார். (ஒ-164)

## செஞ்சிலுவை சர்வதேச குழு அலுவலகம் யாழ். நகரில்

யாழ்ப்பாணம், மே 5

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசகுழு யாழ்ப்பாணத்தில் இம்மாத நடுப்பகுதியில் அலுவலகம் ஒன்றைத் திறக்கவிருக்கிறது.

கடந்த இருமாதங்களுக்கு மேலாக இந்தக்குழு யாழ் மாவட்டத்தில் பல்வேறு பட்ட ஆய்வுகளை மேற்கொண்டுவந்தது.

சுகாதாரப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவே இந்த அலுவலகம் திறக்கப்படுகிறது.

இதற்கான வேலைகளை அந்தக்குழுவின் அதிகாரியான திரு ரூவ்றேகர் இங்கு தங்கிஇருந்து கவனித்துவருகிறார். (ஒ-3)

### விபத்தில் ஒருவர் பலி:

## தப்பிச் சென்ற கார் மடக்கிப் பிடிக்கப்பட்டது

### மாங்குளம் பகுதியில் சம்பவம்

வவுனியா, மே 5

மாங்குளத்தைச் சேர்ந்த மன்னகுளம் என்னுமிடத்தில் கடந்த புதனிரவு 7.30 மணியளவில் இடம் பெற்ற கார் – மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்து மாங்குளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவர் கனகராயன் குளத்தைச் சேர்ந்த மோகன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்களை மோதிய கார் நிறுத்தப்படாமல் ஓடிச் சென்றதாகவும் ஓமந்தையில் வைத்து அது மறிக்கப்பட்ட

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## வவுனியாவில் தமிழ்ப் பெண் ஒரு வாரமாக உண்ணாவிரதம்!

### மகன், மருமகனை விடுவிக்கக் கோரி

வவுனியா, மே 5

வவுனியா, செட்டிக்குளம் குடியிருப்பைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் கடந்த 28 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இலங்கை ராணுவத்தால் கைது செய்யப்பட்ட தனது மகனையும், மருமகனையும் விடுதலை செய்யக் கோரியே இவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

உண்ணாவிரதம் இருந்து வரும் அந்த பெண்ணின் பெயர் சந்தாம்பிள்ளை திரேசம்மா. வயது அறுபது.

கடந்த 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட அந்தப் பெண்ணின் மகனின் பெயர் ச. இருதயராசா; மருமகன் பெயர் பி. அந்தோனிப்பிள்ளை.

கடந்த சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் கைதான இவர்கள் பற்றிய தகவல்

[5 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதியில் வீணாகிப்போகும் மழை நீரைத் தேக்கத் திட்டம்!

### குறிகட்டுவானில் பரீட்சார்த்த முயற்சி

யாழ்ப்பாணம் மே 5

தீவுப்பகுதியில் வீணாகும் மழைநீரைச் சேமித்து இப்பகுதியை சோலைமயமாக்கும் முயற்சியில் நீர்பாசனத் திணைக்களம் ஈடுபட்டிருக்கிறது. இதற்கான ஆய்வு வேலைகள் தற்போது தீவுப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

மழைகாலத்தில் மட்டும் தீவுப்பிரதேசம் சோலைமயமாகக் காட்சியளிக்கும். பின் கோடை காலத்தில் அது பாலைவனமாவதுடன் அங்கு குடிதண்ணீர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இந்த நிலையை போக்கும் வகையில் பரீட்சார்த்த ஆய்வு ஒன்றை நீர்பாசனத் திணைக்களம் தற்சமயம் மேற்கொண்டுள்ளது.

தீவுப்பகுதியில் பொழியும் மழை எவ்வாறு கடலுக்குள் போகின்றது? கடல் நீர் எவ்வாறு தீவுப்பகுதிக்குள் வருகின்றது? இதை தடுக்க என்ன வழி? போன்ற விடயங்கள் பற்றியே தற்போது ஆராயப் பட்டுவருகிறது.

குறிக்கட்டுவான் பகுதியில் ஒரு மைல் சுற்றாடலில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதி நிலத்தைச் சுற்றி கடல் மட்டத்திலிருந்து ஒன்றரை அடி உயரம் முதல் கடல் மட்டத்துக்குக் கீழ் ஒன்றரை அடி ஆழம் வரை மொத்தம் மூன்று அடி உயரத்துக்கு, சுற்றிவர பொலித்தின் பதிக்கப்பட்டுள்ளது.

இந்த பொலித்தீன் ஊடாக அல்லது 3 அடிக்கு கீழாக கடலுடன் மழைநீர் சேர்கிறதா என்று தற்போது ஆராயப்படுகிறது.

இந்தப்பரீட்சார்த்த திட்டம் வெற்றியளித்தால் அதன் பின் சகல தீவுகளிலும் மழை நீரைத் தேக்கி வைக்க வசதியாக சுற்றவர சுவர்கள் கட்டப்படும் என்று தெரிவிக்கப்படுள்ளது.

இத்திட்டம் மூலம் மழை நீரை தேக்கி வைப்பதால் விவசாயம் விருத்தியடைவதுடன், குடி தண்ணீர் பிரச்சனைக்கும் தீர்வு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஷார்ஜா கிரிக்கெட்:

## பாகிஸ்தான் சாம்பியன்!

ஷார்ஜா, மே 5

ஒஸ்ரோலேசியா தங்க கிண்ணத்தைபாகிஸ்தான் மீண்டும் சுவீகரித்தது.

ஷார்ஜாவில் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று நடந்தது.

பாகிஸ்தானும் ஆஸ்திரேலியாவும் மோதின.

பாகிஸ்தான் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 266 ஓட்டங்களை எடுத்தது. ஆஸ்திரேலியா எல்லா விக்கட்டுக்களையும் இழந்து 46.5 ஓவர்களில் 230 ஓட்டங்ளை எடுத்தது. (உ-எ)

### பாதிக்கப்பட்டோருக்கு உதவ

## வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் உதயம்

யாழ்ப்பாணம், மே 5


கடந்தகால இன்னல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குஉதவுவதற்காக வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு கழகம்என்றஅமைப்புதோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு துரிதமாகவும், திறமையாகவும் செயலாற்ற பொதுமக்கள் ,பொது ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் என்பவற்றிடமிருந்து உதவிகள்ஆலோசனைகள், பொருள்கள், நிதிகள் கோரப்பட்டுள்ளன.

பிரஸ்தாப அமைப்பு வெளியிட்டுள்ளபத்திரிகை அறிக்கை ஒன்றிலேயேஇந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதுடன் சேதமாக்கப்பட்ட. எமது பகுதிகளை புனர் நிர்மாணம் செய்ய வேண்டியது அவசியம். இந்த வேலைகளை ஒற்சனவே பல ஸ்தாபனங்

(5 ஆம் பக்கம் பார்க்க]




ரயிலுக்குக் கல் வீசுவது இன்னும் நிறுத்தப்படவில்லை. கோண்டாவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் ரயிலுக்குக் கல் வீசப்பட்டதில் காயமுற்ற சிறுவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். — செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிங்கர் தையல் மெஷின் விற்பனைக்குஉண்டுதொடர்பு இல - 15. சென்ற் பீற்றர்ஸ் லேன், யாழ்ப்பாணம். (அடைக்கலமாதாகோயிலுக்கு சமீபமாக) (C/4496)

அல்சேசன் குட்டிகள் 7 கிழமை பூச்சி அகற்றப்பட்டது. டொபமான் பின்சர் X நிட்சப் ஆண்குட்டி 6 மாதம், பன்றம் இரண்டரை மாதக் குஞ்சுகள் என்பன விற்பனைக்கு உண்டு தொடர்பு: 249, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (13016)

ஒரு வருடம் பாவித்த 49 C. C ெகாண்டா புத்தம் புதிய (Brand new) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (3413)

நவீனரக Honda மூன்று சக்கரம் கொண்டதும் கூடாரத்துடன் கூடியதுமான புத்தம் புதிய இதுவரை இலங்கையில் பாவிக்கப்படாத மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு மல்லிகா சொப்பிங் சென்ரர், மத்திய சந்தையடி, மானிப்பாய் (3425)

1500W Honda ஜெனரேட்டர் (பெற்றோல்) நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ மோட்டர் வேக்ஸ் 672/2, K. K. S. Road, புனாரிலேன், யாழ்ப்பாணம். (3427)

ஒரு வயது ஒரு சோடி (F) பொமேறியன் நாய்க்குட்டிகள் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல-4, நாயன்மார் வீதி, ..ல்லூர்' யாழ்ப்பாணம். (13015)

## காணிவிற்பனைக்கு

நல்லூர் பண்டாரக்குள பிள்ளையார் கோவில் வீதிக்கு அண்மையில் குடிநீர் கிணற்றுடன் 15 நிலப்பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம். (3428)

உடுப்பிட்டிக்கு கிட்ட கெருடாவிலில் 24 பரப்புக் காணி கிணற்றுடன், பனை, தென்னை, மா, வடலி இவற்றுடன் 2 பக்க வாசல் உடையதாய் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் வசதி இடைத்தரகர்கள் வேண்டாம். நேரடியாக தொடர்பு கொள்ளவும். திருமதி ஞானரத்தினம்மாள் சின்னத்தம்பி, 117/2, அரசடி வீதி, யாழ்ப்பாணம், (3273)

## சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (3235)

## வாங்கலாம் விற்கலாம்

பழைய ஆனந்தவிகடன், குமுதம், கல்கி, கலைமகள் O/L விஞ்ஞானம், கணித புத்தகங்கள் விற்பனைக்குண்டு. பழைய புத்தகங்கள் வாங்கப்படும். Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கிக்கு முன்) யாழ்ப்பாணம். (3423)

## தேவை

2 இஞ்சி வாட்டர் பம்பிளான பக்கிங் மொடல் மோட்டர் இல்லாமல் உடனடியாகத் தேவை. ஜெயா வைண்டிங் வேக்ஸ், 54 மணிக் கூட்டு வீதி யாழ்ப்பாணம். (13024)

சகல விதமான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் சம்பந்தமாக நல்ல அனுபவமுள்ள ஒருவர் தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் தா. கங்காதரன் 50, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (13026)

## தேவை

தமிழ், ஆங்கில எழுத்துக் கோப்பாளர் (கொம்போசிங்) பயிற்சியாளர் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்தில் பயிலுநர் வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும் செட்டியார் அச்சகம் 430, K.K.S. Road, யாழ்ப்பாணம். (சி-4380)

பாவித்த சிறு Electric Organ, Vespa Bravo Bike. motor bike Helmet, Box, Speakers தொடர்பு P. Sivakandan Uduvil Girl's College, Chunnakam. (3426)

## அச்சுக்கோப்பாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் அனுபவம் வாய்ந்த அச்சுக்கோப்பாளர் உடன் தேவை. நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் திறமை அடிப்படையில்வழங்கப்படும். அதிபர் புனிதவளன் கத்தோலிக்கஅச்சகம், 360 ,பிரா தான வீதி, யாழ்ப்பாணம். (13012)

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/4361)

## Wanted

Production Manager/ Technician for New Soft Drinks Manufactory. Minimum five years experience in Aerated Waters or Cordials making. Retired officers also considered. V. Sivagnanalingan, Ashok Linka Industries, Suthumalai Road, Manipay. (3421)

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் ஆங்கில வகுப்புகள் மாணவ மாணவிகள் ஏற்கனவே கொண்டுள்ள அறிவின் அடிப்படையில் வெவ்வேறு வகுப்புகளாக பிரித்து நடத்தப்படும். விபரங்களுக்கு S. ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (3270)

## TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும். நாடுங்கள் FUDO 39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (C/4362)

## A/L Physics

பல் தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனம் பௌதிக இரசாயனமும் (G.C.E. A/L வகுப்புகளுக்குரியது) by ம. செல்வரத்தினம் B Sc. இராஜேஸ்வரி மகேஸ்வரன் A/L Physics பரீட்சைக்குரிய மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கியது. விலை ரூபா 75/- வெளியிடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4493)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 06- 05- 90 ஞாயிறு மு. ப 10. 30 பி. ப 1. 00/3 30 ஆகிய நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாவிடை விற்பனைக்கு உண்டு புதிய கல்வி நிலையம், கெங்காதரன், ஆஸ்பத்திரி முன்பாக, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (3422)

## பயிற்சிகள்

தொழில்நுட்ப அறிவை பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் குறுகிய காலத்தில சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் பெறுமதியான சான்றிதழும் வழங்கப்படும். Radio T.V. Deck, Airconditioning Refrigeration, வயறிங் வெல்டிங், வைண்டிங் SpokenEnglish Typing ஆரம்பமாகின்றன. Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. (13006)

## வெளிவந்து விட்டது!

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly; By Nagaratnam, B. Sc. (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு. எந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாக கணிப்பீடு செய்ய உதவும் நூல். (ர/4338)

## சஞ்சிகைகள் ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், போஸ்ட் இந்தியா ருடே, FRONT LINE. SPORT STAR. ஞான பூமி, பொருளியல் நோக்கு மற்றும் எல்லா இந்திய இலங்கை சஞ்சிகைகள் மீண்டும் ஓடர் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, No!165 மின்சாரநிலையவீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம் (C/4343)

# சுன்னாகத்தில் விளையாட்டுப் போட்டி

மயிலணி மே 5

சுன்னாகம் திசன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணியளவில் சுன்னாகம் ஐயனார் கோவிலடி மைதானத்தில் திரு. இ. சதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த விளையாட்டுப் போட்டி சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தின் சார்பில் யாழ் சர்வோதய சிரமதான இயக்கத்தின் உதவியுடன் நடத்தப்படுகிறது,

விழாவில் சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சி. குமாரவேலு பிரதம விருந்தினராகவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சுன்னாகப் பொறுப்பாளர் திரு சிவா சிறப்பு விருந்தினராகவும் சர்வோதய வடபிராந்திய இயக்குனர் திரு. தி. சிவசுப்பிரமணியம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கின்றனர்.

(இ-89)

# வட்டு. இந்துவில் பயிற்சி வகுப்பு

வட்டுக்கோட்டை மே 5

25, 000 பயிலுனர் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் பண்டத்தரிப்புக் கோட்டத்தைச் சேர்ந்த வட்டு இந்துக் கல்லூரியில் நாளையும் நாளை மறுதினமும் விரிவுரைகளும், பயிற்சியும் நடைபெறும்.

இப்பயிற்சிக்கு நிரந்தரப் பொறுப்பாளராகத் திரு. வ. உமாபதிசிவம் கடமையாற்றுவார். விரிவுரையாளர்களாகத் திருவாளர்கள் எஸ். நடராசாவும் கே. சண்முகரட்ணமும் கடமையாற்றுவார்கள். வட்டு இந்துக் கல்லூரி அதிபரும், வட்டு கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பு நிருவாக அதிபருமான திரு. எஸ். டாஸ் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

(க - 161)

# முதலிடம்

கிளிநொச்சி, மே. 5

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. சதா. தனபாலசிங்கம் தலைமையில் பரந்தன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கமும், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. வேலுப்பிள்ளையும் கலந்து கொண்டனர்.

பரந்தன் இளைஞர் வட்டம் முதல் இடத்தையும், வளர்பிறைகழகம் இளந்தாரகை என்பன முறையே 2ம் 3ம் இடங்களையும் பெற்றன.

முடிவில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். [illegible] நன்றியுரை கூறினார். (76)

இலத்திரனியல் நூற்றாண்டின் இளம் சமுதாயமே,

கணனியியல் துறையில் உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

Computer துறையில் முன் அனுபவம் அற்றவர்களுக்காக, திறமையும் தகுதியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களுடன், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பாடத் திட்டத்துடன் யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முன் வருகிறது

**ICC**

## Courses Offered

BASIC d Base III+, Lotus 123, Word Star 5.0
Word Perfect 5.0
Diploma I :- Basic/Lotus/dBase/Ws-5
Diploma II :- Lotus/d Base

★ முழுத் தொகையையும் ஆரம்ப ஆலேயே செலுத்துவோருக்கு 5% கழிவு வழங்கப்படும்
★ முழுத் தொகையையும் செலுத்தும் முதல் 50 பேருக்கு 10% கழிவு வழங்கப்படும்.
★ பதிவு திகதி 09-05-90 அல்லது அதற்கு முன்பாக

மேலும்;

Computer அது தொடர்பான சாதனங்கள் தகுந்த முறையில், எமது திறமை வாய்ந்த தகுதி பெற்ற இலத்திரனியல் தொழில் நுட்பவியலாளர்களால் குறுகிய காலத்தில் Servicing திருத்தியும் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**ICC கிளை**

102, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்:
கொழும்பு.

[சி 4375]

தென் இந்திய திருச்சபை
யாழ்ப்பாணம் ஆதீனம்
மாங்குளம் திருச்சபை

# தொழிற் பயிற்சி நிலையம்

## பதவி வெற்றிடம்

தென் இந்திய திருச்சபையின் மாங்குளம் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தமிழ், ஆங்கிலம் தட்டச்சு. சுருக்கெழுத்து போதிக்கும் ஆசிரியர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

வயது எல்லை கிடையாது.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்குமிட வசதி உண்டு.

விண்ணப்பங்கள்:

முகாமையாளர்,
தொழிற் பயிற்சி நிலையம்,
தென் இந்திய திருச்சபை,
மாங்குளம்.

என்ற விலாசத்திற்கு 10 - 05 - 1990 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.

அருட்திரு. டி. எஸ். தியாகராஜா,
முகாமையாளர்.

தென் இந்திய திருச்சபை,
மாங்குளம்.
1990. 04. 28 (3392)

கிளிநொச்சி, கச்சேரி

# கேள்விகோரும் அறிவித்தல்

கிளிநொச்சி கச்சேரி கேள்விச் சபைத் தலைவரால் கிளிநொச்சிக் கச்சேரி பெண் ஊழியர்களுக்கான விடுதி அமைத்தலுக்கு கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1990 .04 .21ஆம் திகதி பத்திரிகைகள் மூலம் என்னால் கோரப்பட்டன. இவ் வேலைகளுக்கான கேள்விகளின் முடிவு திகதி 1990 ம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென அறியத் தருகிறேன்.

இவ் வேலைக்குரிய கேள்விப்பத்திரப் படிவங்களை மீளப்பெறக்கூடியதும் மீளப்பெற முடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990. 05. 18 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்,
திணைக்கள கேள்விச் சபைத் தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும், அரசாங்க அதிபரும்
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி, கிளிநொச்சி.
[illegible] 1990. (C/4490)

# இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வன் ✱பிரதீபன் சுரேஸ்குமார்✱

05 - 05 - 1990(லண்டன்)

சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார் மாலதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரதீபன் இன்று 5. 5. 90 இல் இரண்டாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை லண்டனில் உள்ள அப்பா, அம்மா, சூராவத்தை தாத்தா, அம்மம்மா, நந்தினி அன்ரா, மோகன் மாமா, (ஜேர்மனி) கிரி அன்ரா, சித்தி அன்ரா, (லண்டன்) பாமா அண்ணா, லண்டனில் உள்ள அப்பம்மா, நாவலர்றோட் ஜெயக்குமார் பெரியப்பா குடும்பத்தினர், லண்டன் கலாமாமி குடும்பத்தினர், லண்டன் ஞானேந்திரன் பெரியப்பா குடும்பத்தினர், லண்டன் தஞ்சிமாமி குடும்பத்தினர், லண்டன் சுதன் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சூராவத்தை,
சுன்னாகம். (C/4365)

# வெற்றிடங்கள்

வவுனியா மாவட்டத்தில் வெளிநாட்டு உதவியுடன் இயங்கிவரும் கிராமிய நீர்வழங்கல் சுகாதாரத் திட்டத்திற்கு (Rural Water Supply and Sanitation) கீழ்க்காணும் தகைமைகள் உள்ள 30 வயதிற்கு மேற்பட்ட பெண் பயிற்சியாளர்கள் தேவை.

1. குழாய்க் கிணறு, கைப்பம்பி (Hand Pump) பாவனையாளர்களைத் தமிழ் மொழி மூலம் பயிற்றுவிப்பதற்குப் பொறியியல், எந்திரவியலில் டிப்ளோமா Diploma in Mech Engineering) பத்திரம் உள்ளவர் அல்லது சமனான தகுதியுள்ள பொறியியல் பயிற்சியாளர் ஒருவர்.
2. நீர் பாவனையாளர் சங்கங்களை அமைத்து அங்கத்தவர்களைத் தமிழ்மொழி மூலம் பயிற்றுவிப்பதற்கு சமூகவியல் பாடங்களுடன் கூடிய இளங்கலைப் (Batchelor of Arts) பட்டம் அல்லது சமனான தகுதியுள்ள சமூகவியலாளர் ஒருவர்.

மேற்கூறப்பட்ட இரு பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்கப் புலமை பெற்றிருப்பது அவசியம்.

விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டும் அனுப்பப்பட வேண்டும். சம்பளம், நேர்முகப் பரீட்சையின்போது கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படும். விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**PROJECT ENGINEER**
**G. T. Z.**
**Kurumankadu, Vavuniya.**

[3375]

## மருந்தாளர் [Pharmacist] தேவை

தகுதியுடைய மருந்தாளர் (Qualified Pharmacist) ஒருவர் உடன் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

லிங் பார்மஸி&குரோசரி
கே. கே. எஸ். றோட்,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

[C/4373]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வல்வை முத்துமாரி அம்மன் வசந்தோற்சவ விழா மலர் ★

(05 - 05 - 1990)

## பிரதம குரு ஆசிச் செய்தி

அகில புவனங்களை எல்லாம் பரிபாலித்து அருள் நல்கும் இறைவன் இறைவியாகிய தயாநிதியான அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாய் ஒரு தனி முதல்வியாய் ஒப்பற்றவளாய் ஆதி மந்தியானந்தறசித சச்சிதானந்த சொருபியாய் பஞ்ச கிருத்திய காரணியாய் பஞ்ச கிருத்தியங்களைச் செய்து வரும் அன்னை பராசக்தியாய் வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் வாரி வழங்கும் ஆயிரம் கண்ணுடையவளாய் வல்வையம் பதியில் கோவில் கொண்டருளி இருக்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தற்போதைய பரம்பரை அறியாத காலத்தில் தமிழ் நாடு கோடியாக் கரையில் இருந்து வயோதிப மாது வடிவில் வல்வைக்கு வந்து இன்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

சக்தி பீடங்கள் அறுபத்தி நான்கு. காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், நயினையில் நாகபூஷணியாகவும் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் சர்வலோக நாயகியான உலக மாதா வல்வையில் ஸ்ரீ முத்துமாரி அம்மனாக வீற்றிருந்து உலகை ரட்சிக்கின்றார்.

வருடந்தோறும் சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவம் வரக் கூடியதான பதினைந்து நாட்களைக் கொண்ட வருடாந்த மகோற்சவ பெருநாளில் பதினோராம் நாள் வசந்தோற்சவம் மிகமிகச் சிறப்பாக அதிகோலாகலமாக நடைபெறுகின்றது. அன்று அம்மன் சயனத் திருக்கோலத்தில் வசந்தோற்சவ மண்டபத்தில் எழுந்தருளி மன்மத ரதி பூஜையையும், சூர்ணோற்சவத்தையும் ஏற்றுக் கொண்டு திருவூஞ்சல் நாயகியாக அகில புவனங்களான சர்வ பிரபஞ்சமும் தனக்குள் அடக்கம் என காட்சி தருகிறார்.

5-5-90 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் வசந்தோற்சவம் கோலாகலமாக அமைய எல்லாம் வல்ல எம் பெருமாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் அருள்பாலிப்பாராக.

**சோ. தண்டபாணி தேசிகர்**
பிரதமகுரு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்,
வல்வெட்டித்துறை.

## நம் பண்பாட்டின் தெய்வீகக் குறியீடு

ஒவ்வொரு பண்பாட்டிலும், அவ்வப் பண்பாட்டு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து தம்மை விடுவித்தும் தாம் விடுபட்டும் நிம்மதி நிறைந்த ஓய்வு பெறுவதற்கான வழிமுறைகள் உள்ளுறுத்தப்பட்டிருக்கும்.



வல்வை முத்துமாரி அம்மன் ஊஞ்சல் திருக்கோலம்

தமிழர் பண்பாட்டில் அத்தகைய நிம்மதி நிரம்பிய 'விடுதலை' நாட்கள் இன்று அவ்வவ்வூர்க் கோயில் திருவிழாக்காலமே எனலாம்.

ஒறுப்பு வாதச் சைவம் திருவிழாக்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதுண்டெனினும், மக்களைப் பொறுத்தவரையில் (கீழ் நிலையினர் முதல் மேலோங்கியோர் வரை) கோயில் திருவிழாக்காலம் தான் வருடத்தின் மனம் நிறைந்த ஒய்வுக் காலமாகும்.

ஊர்க்கோயில் கொடியேறினால் கோயிலில் மாத்திரமல்ல ஊரிலும் விழாத்தான். தேர், தீர்த்தம் பவித்திர உணர்வு நிலைப்பட்ட பண்பாட்டு உச்ச வேளைகள்.

மக்கள் தாம் தமக்கு விரும்புவனவற்றையெல்லாம் தெய்வத்துக்குச் செய்து மகிழும் நாட்கள்.

அந்த அற்புத 'பாவனை'களுள் ஒன்று. 'பூங்காவனத் திருவிழா' என நடைமுறைத் தமிழிற் குறிப்பிடப்பெறும் 'வசந்தோற்சவம்' இன்றைக்குத் தெய்வத்துக்கு நாம் செய்வதை, நாளை தெய்வம் நமக்குத் தரும் என்ற பக்தி நிலைப்பாடுஇதற்குள் உண்டு.

இந்த விடயத்தில் ஒவ்வொரு ஊரும் தனது தனது சமூகப் பண்பாட்டுத் தனித்துவத்திற்கேற்ப இத்திருவிழாக்களைக் கொண்டாடுவதுண்டு.

வல்வையில் இந்தத் திருவிழாப் பண்பாடு தொழிற்படும் முறைமை தனிக் கவர்ச்சியுடையதாகும்.

வல்வையின் பிரதான மக்கள் குழுமையம் அம்மன் கோயில்தான். சாதாரணமாகவே அம்மனைச் சுற்றிய வாழ்க்கை, திருவிழாக்காலத்தில் அம்மனை விட்டகலா வாழ்க்கையாகி விடுகின்றது.

தமிழர் பண்பாட்டில் விழாக்கள் பெறும் இடத்தை கண்கூடாகவிளக்கிக் கொள்ள விரும்பும் எவரும் வல்வை அம்மன் கோயில் திருவிழாக்களுக்கு வருதல் வேண்டும்.

வல்வெட்டித்துறைப் 'பொடியளுக்கு' எல்லாக் காலத்திலும் ஒரு வரலாற்றுக் கவர்ச்சி முக்கியத்துவம் உண்டு.

அம்மன் கோயில் திருவிழாக்களில் வல்வெட்டித்துறைக் க'பொடியள்' நடத்தும் திருவிழா 'பூங்காவனத் திருவிழாவாகும்.

அந்தத் திருவிழாவின் பொலிவும் கவர்ச்சியும் அற்புதமானவை.

வல்வெட்டித்துறையின் இன்றைய 'பொடியள்' அந்தப் பாரம்பரியத்தை இம்முறை மிக்க கவர்ச்சியுடன் அதே வேளையில் பிரக்ஞைப் பொறுப்புடன் நடத்துகின்றனர்.

திருவிழா வரும் சனியன்று நடைபெறவுள்ளது. அன்று அம்மன் எத்தனை பூரிப்புடன் இருக்கின்றார் என்பதை நீங்கள் பார்க்க வேண்டாமா?

மனிதர் தெய்வத்துடனும், தெய்வ உணர்வு மனிதர் சகலரிடத்தும் சங்கமமாகும் இந்த வேளைகள் நமது பண்பாட்டின் முக்கிய கணங்கள். ★

பேராசிரியர்
**கார்த்திகேசு சிவத்தம்பி**

## தர்மகர்த்தா சபை ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் ஒருங்கே வளரும் வல்லையம்பதியில் கோடியாக் கரையிலிருந்து வந்து கோயில் கொண்டருளியிருக்கும் கோல முத்துமாரி அம்மனுக்கு வசந்தோற்சவம்

முத்துமாரி அம்மன் கோயிலின் பதினைந்து மகோற்சவ நாட்களும் வல்வை நகரின் விழாவாக கொண்டாடப்படுகின்றன. பதினொராம் நாளான இன்று அம்பாள் ஊஞ்சலில் சயனித்தவண்ணம் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் அற்புதக் கோலத்தைக் காண ஆயிரம் கண்கள் போதுமா? இப்புனித நன்நாளில் அனுபந்தம் வெளிவருவதையிட்டு எமது தர்மகர்த்தா சபையினர் பெருமகிழ்ச்சி அடைவதோடு, அம்பாள் எல்லா மக்களுக்கும் சகல சௌகரியங்களும்நல்கி அருள்பாலிக்க வேண்டுகிறது.

**த. குழந்தைவடிவேல்**
செயலாளர்
தர்மகர்த்தா சபை

## வசந்தோற்சவ விழா

வல்வை வாழ் மக்களுக்கு முத்துமாரி அம்மன் ஒரு காவல் தெய்வம். நோய், பிணி, துயரம் முதலியவற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் தெய்வம் முத்துமாரியம்மன் என இவர்களுக்கு நிறைய நம்பிக்கையும் பயபக்தியும் உண்டு. மறுபுறம் வீரம், கல்வி, செல்வம், மன நிறைவு, சந்தோசம் என்பவற்றை அளிப்பவளும் மாதரசி என்று வாழ்த்துகின்ற முத்துமாரியம்மன் என்பதில் இவர்களுக்கு அசையாத நம்பிக்கை உண்டு. அம்மன் கோவிலில் திருவிழா என்றால் வல்வை மாநகரே விழாக் கோலம் பூண்டுவிடும். விழாக்களுக்குள் நிகரற்ற பதினொராம் நாள் வசந்தோற்சவ விழாவின்போது மெய்யடியார்கள் அம்பாளைத் தரிசித்து துன்பங்கள்குறைந்திடவும் இன்பங்கள் நிறைந்திடவும் வேண்டி மெய்யுருகி வழிபட்டால் அம்பாளின் அனுக்கிரகம் கிட்டும். இவ்விழாவினை திறம்பட ஒழுங்கு செய்யும் தன்னலம் கருதா இளைஞர் சமுதாயத்தின் பணிகள் இறைவன் திருவருளால் மென்மேலும் வளர்ச்சியுற வேண்டுமென அம்பாளை இறைஞ்சி நிற்கின்றேன்.

**வேலும்மயிலும்**
உதவி அரசாங்க அதிபர்
பருத்தித்துறை

## வசந்தோற்சவ விழா

மங்களகரமான பிரேமதூத ஆண்டில் சித்திரைத் திங்கள் 22 ஆம் நாள் (5 - 5 - 1390) சனிக்கிழமை நடைபெற இருக்கும் வசந்தோற்சவ விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகள்;

✶ பகல் நிகழ்ச்சி

மேளக்கச்சேரி தவில். கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்.

நாதஸ்வரம். [illegible] வல்வெட்டி என். கே. பத்ம[illegible] வினர்.

# சூப்பர் சித்தாரா குழுவினரின் இன்னிசைவிருந்து

வசந்தோற்சவ விழாவில் இலங்கைவானொலி,ரூபவாஹினி புகழ் சூப்பர் சித்தாரா குழுவினரின் இன்னிசை விருந்துநடைபெறும். பாடகர் கணேசராஜ். பாடகி ராணி ஜோசப் முதலியோர் கலந்து கொள்கின்றனர்.


வசந்தோற்சவத் திருநாளில்
வல்வை முத்துமாரி
★ அருளை வேண்டுகிறோம் ★

✶ நம்பிக்கை ✶ நாணயம்
★ நயம் ✶ நல்லபொருள்

நாடுங்கள்:
✶ அருள் ஜுவலர்ஸ் ✶
[த. அருளானந்தம்]
வைரமாளிகைக் கட்டடம்,
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்

() மணியம்ஸ் ()
★ ஜவுளி, ★ பான்சிப் பொருள்கள்
★ மின் தொழில் உபகரணங்கள்
● ஆகியவற்றைப் பெறலாம்
15, ஜுபிலி பசார்.
யாழ்ப்பாணம்,
16, மக்சள் மாதிரி சந்தை,
யாழ்ப்பாணம்-

★ ரி. வி. டெக்,
★ ரேடியோ
★ கசெற் றெக்கோடர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பான்சி பொருள்கள்
★ மின்சார பொருட்கள்
() பெற வாருங்கள் ()
வாலாம்பிகை ரேடர்ஸ்
21/5, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

★
லிங்கம் சில்க் ஹவுஸ்
18, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

வசந்தோற்சவத் திருநாளில்
வல்வை முத்துமாரி அருளை
வேண்டுகிறோம்
பலதரப்பட்ட சிறந்த உணவு வகைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்
★ ஹோட்டல் பரடைஸ் ★
91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அடியார்கள் குறை தீர்த்து அமைதியான
வாழ்வு தர வேண்டுகிறோம்
அருள்மிகு வல்வை முத்துமாரி அம்மனே!
திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி, காஞ்சிபுரம், கூறைச்சேலைகள்,
ஆடவர் ரசனைக்கேற்ற றெடிமேட் சேட், ரவுசர்கள்,
நவநாகரீக நங்கையர்க்கேற்ற றெடிமேட் ஸ்கேட்
பிளவுஸ் வகைகள் மற்றும்
ஜப்பானிய, இந்திய சாறி வகைகளும்,
சிறுவர் ஆடை வகைகளும்
உங்கள் மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள
வல்வை மாநகரில் சிறந்த ஸ்தாபனம்
★ ரிஷி ரெக்ஸ் ★
யாழ். வீதி, வல்வெட்டித்துறை.

வசந்தோற்சவத் திருநாளில்
வல்வை முத்துமாரி
★ அருளை வேண்டுகிறோம் ★

★ ஞானம்ஸ் ★
டெக்ஸ்டைல்ஸ்
18 - A, புது மார்க்கெட்,
யாழ்ப்பாணம்.

ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரியகடை,
"ரகுராமன் கட்டிடம்",
யாழ்ப்பாணம்.

★ ஐயப்பா ★
ரெக்ஸ்ரைல்ஸ்
<> <>
யாழ். வீதி;
வல்வெட்டித்துறை.

சகல விதமான மருந்து வகைகளும், ஊசிமருந்துகளும்
பால் உணவு வகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்.
ஆர். வி. ஜி மெடிக்கல்ஸ்
உங்கள் தேவைக்கான மருந்து வகைகளை
சில்லறையாகவும், மொத்தமாகவும் குறைந்த விலையில்
பெறுவதற்கு இன்றே நாடுங்கள்:
★ ஆர். வி. ஜி மெடிக்கல்ஸ் ★
ஆர். வி. ஜி. மெடிக்கல்ஸ்,
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஆர். வி. ஜி பீடிகள் ★
புகை இன்பப் பிரியர்களுக்கு
ஓர் புதுமைச் செய்தி!
அன்றும் இன்றும் என்றும் புகழ் பெற்ற
ஆர். வி. ஜி பீடிகளையே வாங்கிப் பாவியுங்கள்.
ஆர். வி. ஜி. பீடி நிர்வாகம்,
275, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.
தந்தி: ஆர். வி. ஜி
தொலைபேசி: 22064


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ COMPUTER COURSES ★
DIPLOMA IN BASIC PROGRAMMING
புதிய பிரிவுகள்
12 - 05 - 1990 (Sat & Sun Batch)
16 - 05 - 1990 (Wed & Thu Batch)
நேரம் 9 30 a. m இல் ஆரம்பமாகும்
I. D. P. COMPUTER CENTRE
342, K. K. S. Road, Jaffna
Branch:- 7th MILE POST MALLAKAM
மல்லாகம் கிளையிலும் புதிய பிரிவுகள்
பி. ப. 4. 00 மணிக்கு ஆரம்பமாகும்
(சி/4369)

## மட்டக்களப்பு - அம்பாறையில் தேனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சி

மட்டக்களப்பு, மே 5

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தேனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சிகள் இன்று 5 ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன:

இன்று (5 ஆம் திகதி) கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்திலும் நாளை 6 ம் திகதி அக்கரைப்பற்று தர்ம ஆ சங்கரி மைதானத்திலும் — 8 ஆம் திகதி ஆரையம்பதி ம. வி. மைதானத்திலும் — 9 ஆம் திகதி ஓட்டமாவடி ம. வி. மைதானத்திலும் இந் நிகழ்ச்சிகள் நடைபெறும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன் தெரிவித்தார்.

(இ - 21)

## மகேசுவரபூஜை

கொழும்புத்துறை, மே 5

அரியாலை அருள்மிகு ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது.

தினமும் அபிஷேக பூசை ஆராதனை இடம் பெறுகிறது. இன்று சனிக்கிழமை மகேசுவரபூஜை நடைபெறும் பதினோராம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தி நடைபெறும்.

(க-30)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
I. A. B., BASIC, Spoken English
புதிய வகுப்புகள் 14 - 05 - 90 அன்று ஆரம்பமாகின்றன. விண்ணப்பிக்கவும்
Further Education of Uduvil
Girls' College - Uduvil
[சி-4378]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவ நிலையமொன்றிற்கு அனுபவமுள்ள தாதிகள், MLT, வரவேற்பாளர்கள் தேவை

விளம்பர இல 125
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(13009)



## மகா கும்பாபிஷேகம்

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 06-05-1990 ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு நடைபெறும். 50 - 05 - 1990 சனிக்கிழமை (இன்று) பக்தர்கள் அம்பிகைக்கு எண்ணை சாத்துதல் இடம்பெறும். சிவ ஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் தலைமையில் பிரதம குரு ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் பிரதம குரு சா.மணிக்குருக்கள் பூஜைகளை நடத்தி வைப்பார்கள்.

இப்படிக்கு:
தர்மகர்த்தா,
சா. மணிக் குருக்கள்

(13032)



## பதவி வெற்றிடம்

புலோலி ப. நோ. கூ. சங்க தொழிற் பரப்பிற்குள்ளிருந்து சமயோசித தட்டெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம்) பதவியொன்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகமை: க. பொ. த.ப. பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
தட்டெழுத்து வேகம் தமிழ் நிமிடத்திற்கு 15 சொற்கள்.
ஆங்கிலம் நிமிடத்திற்கு 20 சொற்கள்.

வயது: 21க்கும் 55க்கும் உட்பட்டவராதல்.

பிணை: மாதாந்தச் சம்பளத்தின் 5மடங்கு ரொக்கம்

சம்பளம்: வேலை செய்யும் நாளொன்றுக்கு கூ. வே. ஆ. குழு விதிகளுக்கிணங்க

விண்ணப்ப முடிவு திகதி; 10-05-90ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், புலோலி ப. நோ. கூ. சங்கம், புலோலி என்ற முகவரிக்கு சகல விண்ணப்பங்களும் அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்

புலோலி ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை. [சி-4497]



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி உமையம்மா பொன்னம்பலம்

தோற்றம்: 1919 - 04 - 05
மறைவு: 1990 - 04 - 06

அன்னாரின் இறுதிக் கிரியைகளிற் கலந்துகொண்ட அனைவரையும் 05 - 05 - 1990 ல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் பின்னர், 06 - 05 - 1990 ல் நடைபெறும் சபிண்டிக் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், வளர்ப்பு மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பன்றி கட்டான்,
கண்டாவளை. [3506]



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் காசிப்பிள்ளை சதாசிவம்

தோற்றம்: 22 - 11 - 1917
மறைவு: 16 - 04 - 1989

திதி: 05 — 05 — 1990

எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மகன், மருமகள்,
பேரன், பேத்தி, சகோதரங்கள்

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. [13031]


## இன்று

யாழ்ப்பாணம், மே 5

நாவாந்துறை, வசந்தபுரத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியில் இருந்து குடிதண்ணீர் விநியோகம் இன்று காலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். [ஓ-3]

## தமிழ்ப் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அடுத்தமாத நடுப்பகுதியிலிருந்து பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போது பொலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பாடசாலைகள் களுத்துறை, கட்டானை, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக தமிழ் மாவட்டம் ஒன்றில் புதிதாகப் பொலீஸ் பயிற்சிப் பாடசாலையை நிறுவுவது குறித்து பொலீஸ் திணைக்கள உயர் வட்டாரங்கள் ஆலோசித்து வருகின்றன.

தமிழ் மாவட்டம் ஒன்றில் புதிய பொலீஸ் பயிற்சிப் பாடசாலை நிறுவுவதன் அவசியம் குறித்து பொலீஸ் உயர் வட்டாரங்கள் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளன. இது குறித்து அமைச்சுத் தீவிரமாகவும் சாதகமாகவும் ஆராய்ந்து வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியவந்துள்ளது. (அ-உ)

## தப்பிச் சென்ற---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் கூறப்படுகிறது.

கார்ச்சாரதியும் இன்னும் ஒருவரும் விடுதலைப் புலிகளினால் ஓமந்தையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி காரின் பின்னால் வவுனியா நோக்கி வந்த லொறி ஒன்றில் வந்தவர்கள் மூலம் விபத்துப் பற்றிக் கிடைத்த தகவலையடுத்தே புலிகள் இவர்களைப் பிடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள கார் வவுனியாவைச் சேர்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ - 164)

## வடக்கு-கிழக்கு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேற்கொண்டுள்ளன, ஆயினும் துரித கதியில் பிரஸ்தாப வேலைகளை மேற்கொள்ளவும் உதவி தேவைப்படும் சகலருக்கும் உதவிகள் விரைவாகச் சென்றடையவுமே இந்தக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

உதவிகளை வழங்க முன்வருவோர் 157/1 ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிரஸ்தாப கழக அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமது பங்களிப்பை செய்ய முடியும் என்றும் அந்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## 1, 190 - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதகர்களாகவும், 90 பேர் றிசேர்வ் பெண்பொலீஸ் கான்ஸ்டபிள்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பொலீஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இவர்கள் விரைவில் பயிற்சிக்கு அழைக்கப்படவுள்ளனர். (ஒ-3)

## வவுனியா . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏதும்இதுவரை கிடைக்கவில்லை. உயிருடன் இருக்கிறார்களா என்பதுகூடத் தெரியாது.

இந்த நிலையில் கடந்த 22ஆம்திகதி இந்த பெண்மணி வவுனியா சிவில் நிர்வாக இணைப்பதிகாரியைச் சந்தித்தார்.

அப்போது அவர்கள் இறந்திருக்கலாம் என தெரியவந்த[illegible]பின்னரும் கூட- அதனை நம்ப மறுத்து-அந்தபெண்மணி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கியுள்ளார்.

இது விடயத்தை அறிந்த விடுதலைப் புலிகள் அவரை நேரில் சந்தித்து, தமக்கு இது விடயம் குறித்து அறிவதற்காக கால அவகாசம் தேவை எனவும்-

உண்ணாவிரதத்தை கைவிடும்படியும் கோரியுள்ள போதிலும் அவர் பிடிவாதமாக நீராகாரம் கூட அருந்தாத நிலையில் உண்ணாவிரதமிருந்து வருகிறார். (ஓ-164)

# போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்தால் நடவடிக்கை!

## மாநகர ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 5

யாழ் மாநகரசபை எல்லைக்குள் வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு திருத்தப்படுவதும், பாரிய மரங்களை வீதியோரங்களில்போடுவதும், வீடு கட்டும் பொருள்களை வீதியோரங்களில்போடுவதும் தடை செய்யப்பட்டுள்ளன. மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

—இப்படி அறிவித்துள்ளார் யாழ் மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம்.

அவர் பொதுமக்களுக்கு விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

'கராஜ்' உரிமையாளர்கள் பழுதடைந்த வாகனங்களை தமது கராஜ் முன்பாக வீதியோரங்களில் நிறுத்தி அவற்றைத் திருத்துவதனாலும் —

மரக்காலை உரிமையாளர்கள் சிலர் பெரிய மரங்களை வீதியோரத்தில் போடுவதனாலும் —

பொதுமக்கள் சிலர் தமது கட்டடப் பொருள்களை வீதியோரத்தில் பறித்து நீண்டகாலம் தேங்கிக் கிடக்க விடுவதனாலும் —

வீதிப் போக்குவரத்துக்கள் சீர்குலைவதுடன், வீதி விபத்துக்கள் ஏற்படவும் அவை காரணமாகின்றன.

இந்த விடயத்தில் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் — இப்படி அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## இன்று ஓவிய கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஓவியக் கண்காட்சி இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இந்தக் கண்காட்சியில் தெரிவு செய்யப்படும் சிறப்பு ஓவியங்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

✶ கார்த்திக் ✶ ரேவதி ✶ ஜனகராஜ்
### இதய தாமரை
(ஒறிஜினல்)

✶ ஜெமினி ✶ சாவித்திரி ✶ தங்கவேலு
### "குணசுந்தரி"
(ஒறிஜினல்)

★ A. V.M. ராஜன் ✶ புஷ்பலதா
### "புகுந்த வீடு"
(ஒறிஜினல்)

KVC கனம் வீடியோ சென்ரர்.
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

C/4384



## POST OF ACCOUNTS CLERK

Applications are invited for the post of Accounts Clerk with experience in office management and typing, in the Youth Training Centre, Paranthan. Age preferably above 35 years with a minimum experience of 10 years. Retired persons may also apply. Salary negotiable.

Closing date 19th May 1990.

Application forms are available from the Youth Training Centre, Paranthan.

DIRECTOR
YMCA Youth Training Centre
Paranthan

[C-4488]



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் வினாசித்தம்பி சிவபாதம்

பிறப்பு: 19 - 01 - 1946
இறப்பு: 22 - 03 - 1990

இன்று (5 ஆம் திகதி) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளும்படி அழைக்கிறோம்.

மேற்கு ஜேர்மனியில் கடந்த 06 - 04 - 90 இல் அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டோருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

32, முருகேசர் லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்
மற்றும் உறவினர்கள்.

(13101)





# பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்



பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



போட்டி விதிகள்

1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ

2ம் பரிசு - க்வசாக்கி பஜாஜ் கே.பி.KB 100

ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

## றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்

69, அயிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி : 549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற் நீல சோப்
அன்றும் இன்றும் இதுவே
சிறந்தது சிக்கனமானது
நூலிழைகளில் ஊடுருவி
அழுக்கை அகற்றும்
சக்திகொண்ட நுரைவளம்மிக்கது.
மேலுறைகளிலிருந்து திருக்குறள் 1000 அனுப்பி ஒரு சிறந்த பெட்சீட் டைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

05—05—1990 சனிக்கிழமை

நீமியா உரம்
மண்வளம் பெருக்கிப் பூச்சிகள் ஒழித்து அமோக விளைச்சல் தருவது. யூரியாவுடன் கலந்து பாவிக்க அதிசிறந்த பலன்
ஒரு கிலோ பக்கெட் விலை ரூ. 5/-
வியாபாரிகளுக்கும் தொகையாக வாங்குபவர்களுக்கும் விசேட கழிவு.
மில்க்வைற்யாழ்ப்பாணம்.

## மனைவியின் நாக்கைக் கடித்து துண்டாக்கிய கணவன்!

பட்றாஸ் மே 5

மனைவியின் நாக்கைக் கடித்துத் துண்டாக்கிய கணவன் சிறையில் வைக்கப்பட்டார்.

இச் சம்பவம் கிரீஸ் நாட்டில் இடம் பெற்றது.

29 வயதான இத்தாலிப் பிரசை கியோகியோ பஸ்லெனெல்லோ தனது மனைவியுடன் டாக்ஸியில் சென்று கொண்டிருந்தார்.

டாக்ஸியின் பின் ஆசனத்தில் மனைவி அக்ரோஸாவை இவர் முத்தமிட்டுக்கொண்டிருந்தார். திடீரென்று மனைவி சத்தமிட்டார்.

ஏன் சத்தமிட்டார்?

டாக்ஸி சாரதி பொலிஸில் தெரிவித்தாவது;

பெண்ணின் சத்தம் கேட்டு நான் பின் ஆசனத்தைத் திரும்பிப் பார்த்தேன்.

கணவன்-மனைவி இருவரின் வாய்களும் இரத்த மயமாகக் காட்சியளித்தன.

எனக்கு இத்தாலி மொழி தெரியாது. உடனே நான் அவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து விட்டு, பொலிஸில் முறையிட்டேன். பெண்ணின் நாக்கு இரண்டு துண்டாகியிருந்ததைக் கண்டேன் என்றார்.

மருத்துவ மனையில் துண்டாகிய நாக்கை டாக்டர்கள் தைத்து விட்டனர். (உ-எ)

### வன்செயலில் உயிரிழந்த

## ஆசிரியர்களின் சம்பளம் குடும்பத்துக்கு வழங்கப்படும்

யாழ்ப்பாணம் மே 5

வன்செயல், இராணுவ நடவடிக்கைகள், இனககலவரம் போன்றவற்றில் இறந்த யாழ் மாவட்ட ஆசிரியர், அதிபர்களின் மாதாந்தச் சம்பளம் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இறந்தவர் 55 வயதிற்குட்பட்டவராக இருந்தால் மாதாந்தச் சம்பளமும் 55 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் அவருக்குரிய ஓய்வூதியமும் அவரது 'குடும்பத்தினருக்கு வழங்கப்படும்.

இது சம்பந்தமான கடிதம், இறந்தவர்களின் மனைவிமார் அல்லது பிள்ளைகளுக்கு மே 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தவறினால் அது குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ரீ. மகாசிவம் கேட்டுக் கொண்டுள்ளார். (உ 7)

### கல்வித் திணைக்களத்திலிருந்து வந்த

## ஆங்கிலப் படிவங்களை நிரப்பத் தேவையில்லை!

### தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் மே 5

கல்வித்திணைக்களத்திலிருந்து தமிழ் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டாமென இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கபொதுச் செயலாளர் திரு. ரீ. மகாசிவம் கேட்டுள்ளார்.

ஆசிரியர்கள் மாகாண சேவையிலா அல்லது மத்திய அரசு சேவையிலா கடமையாற்ற விரும்புகின்றார்கள் எனக்கோரும் விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டதைக் கண்டித்து விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் விரும்பினால் அப்படிவங்களை நிரப்பாது கல்வித் திணைக்களங்களுக்கே திருப்பி அனுப்பலாமெனவும், இது தொடர்பாக கல்வி அமைச்சர் அத்துலத்முதலி கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு தமிழில் மேற்படி விண்ணப்பங்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தாம் கேட்டுள்ளதாகவும் அவ் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். [உ-7]

### தமிழ் இளைஞர்கள் மூவர் கைது

கொழும்பு, மே 5

கொழும்பு வியாபாரி ஒருவருக்குச் சொந்தமானலொறி ஒன்று கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று தமிழ் இளைஞர்களை பொலீஸார் கைது செய்தனர்.

கடத்தல் சம்பவம் கடந்த புதன்கிழமை சிலாபத்தில் இடம் பெற்றது. (உ-எ)

எமது இன்றைய புதிய வெளியீடுகள் :
கார்த்திக் — ரேவதி — ஜனகராஜ் நடித்த
இதய தாமரை (ஒறிஜினல்)
கார்த்திக் — சித்தாரா — S. S. சந்திரன் நடித்த
மிஸ்டர் கார்த்திக் (ஒறிஜினல்)
வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (13103)

## வசதிக்கட்டண, தொண்டர் ஆசிரியர்கள்

சகல வசதிக்கட்டண, தொண்டர் ஆசிரியர்களும் சேவை விபரம், கல்வித்தராதரம், அடையாள அட்டை மற்றும் விண்ணப்பித்த அத்தாட்சிப் பத்திரங்களுடனும், யாழ் நல்லூர் கந்தன் ஆலயத்தில் 6 - 5 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன். கொழும்பு சென்ற விபரமும் அறிவிக்கப்படும்.

எல். வீ. விக்கிரமசிங்கம்,
(தலைவர், யாழ். பிராந்தியம்)
(3559) மானிப்பாய் இந்துக்கல்லூரி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 10கோடி ரூபா மின் கட்டணம் விலக்கு அளிக்க கோரிக்கை

கொழும்பு மே 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து 1989 இறுதி வரை இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்துக்கு விலக்கு அளிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணசபை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சந்திரா பண்டார இத் தகவலை கொழும்பில் வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து சுமார் 10 கோடி ரூபா மின்சாரசபைக்கு வரவேண்டியுள்ளது.

1990 ஜனவரியில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து மின்சாரக்கட்டணம் ஒழுங்காகக் கிடைத்து வருகிறது என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

### பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 5

நாளை 6 ஆம் திகதி நடைபெறவிருந்த கிரிக்கெட் மத்தியஸ்தருக்கான பரீட்சை பின் போடப்பட்டுள்ளது.

பரீட்சைநடைபெறும் திகதி பின் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்ற இருப்போர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் சமூகம் அளிக்கும்படி கோரப்படுகின்றனர். (இ)

### ★ பரிசு பெற்ற ஊர்திகள்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மாவட்ட மேதின ஊர்வலத்தில் பங்குபற்றிய ஊர்திகளுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற ஊர்திகள் பற்றிய விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது

முதல் 5 இடங்களை பெற்ற ஊர்திகளுக்கு பரிசில்களும் அடுத்த 5 இடங்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

பரிசு பெறும் ஊர்திகள் வருமாறு:-

1. வலிகாமம் பகுதி விடுதலைப்புலிகளின் மாணவர் ஒன்றிய ஊர்தி.
2. மலையகம் - ஊர்காவற்றுறை.
3. சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்க ஊர்தி.
4. நாவாந்துறை கடற்தொழிலாளர் சங்க ஊர்தி.
5. துறையூர் கடற்தொழிலாளர் சங்க ஊர்தி.

சான்றிதழ் பெறும் ஊர்திகள் வருமாறு:-

1. கோணாவளை செல்வநாயகபுரம் கிராம முன்னேற்றச் சங்க ஊர்தி.
2. அச்சுவேலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊர்தி
3. வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்துச் சங்க ஊர்தி
4. பாஷையூர் மக்களின் ஊர்தி.
5. உரும்பிராய் மக்களின் ஊர்தி (உ-9)

### 60 வயதுக்கு மேல் கல்தா

கொழும்பு மே 5

கல்வித் திணைக்களத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோர் இனிமேல் சேவையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் தற்போது தேவைப்படும் இடங்களில் 60 வயதுக்கு மேற்பட்டோரை ஒப்பந்த அடிப்படையில் கல்வித் திணைக்களம் பதவிக்கு அமர்த்தி வருவது தெரிந்ததே.

60 வயதைத் தாண்டிய ஊழியர்கள்சேவையில்இருந்து நீக்கப்படுவர் என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி தற்போது அறிவித்துள்ளார். (உ-எ)

### தமிழ் மொழித் தினம்:

## போட்டிகள் முடிந்தாலும் விழா கொண்டாடப் பணிப்பு

யாழ்ப்பாணம், மே 5

தமிழ் மொழித் தினப் போட்டிகள் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடைபெற்று முடிந்துவிட்டன. ஆயினும் இம்மாதம் 8 ஆம் திகதியை தமிழ் மொழி தினமாக கொண்டாடும்படி சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்திலும், கொத்தணி மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் தமிழ் மொழித் தினப் போட்டிகள் நடைபெற்று முடிந்துவிட்டன-

எனினும் தமிழ் மொழித் தினம் என்பதை சகல பாடசாலைகளும் மே 8 ஆம் திகதி பாடசாலை மட்டத்தில் மாணவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்தும் வண்ணம் கொண்டாட வேண்டும் என்று கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் கிடைத்துள்ளமையால் சகல பாடசாலை அதிபர்களும் அதற்கான ஆயத்தங்களைச் செய்து முடியுமான அளவு இதனைக் கொண்டாட வேண்டும்-

தமிழ் மொழித் தின விழாவில் வாசிப்பு, எழுத்து, ஆக்கம், நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யலாம், பெரியார்களை அழைத்து தமிழ் மொழி பற்றி கருத்துரை வழங்கலாம்-

தமிழ் தின விழா 8 ஆம் திகதி என்பது பற்றிய அறிவித்தல் இப்போதே கிடைத்தது. எனவே இந்த அறிவித்தலை, சுற்றுநிருபமாக ஏற்று சகல பாடசாலை அதிபர்களும் செயலாற்றும்படி கேட்கப்படுகின்றீர்கள். இவைகள் கொண்டாடப்பட்டமைக்கான பதிவேடுகளை வைத்திருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது- என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது, [அ-9]

### திருமலையில் திருட்டு!

திருகோணமலை, மே 5

திருகோணமலை உவர் மலை வீதியில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் பட்டப் பகலில் பெரும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

கடந்த புதனன்று காலை 10 மணியளவில் வீட்டின் பின் பக்கத்தால் நுழைந்த திருடர்கள் டெக், மற்றும் பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள நகைகள் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் நடந்த நேரத்தில் வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (உ-தி)

## கிராமங்கள் தோறும் முதலுதவி நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கிராமங்கள் தோறும் முதலுதவி சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

கிராமப்புற மக்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்க வசதியாகவே இந்த நிலையங்களை அமைக்க யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு முன்வந்துள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்த நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. (ஒ-3)

### இன்று

யாழ்ப்பாணம், மே 5

மன நோயாளர் நலனைப் பாதுகாக்கும் வகையில் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் மன நோயாளர் நிலைய நண்பர்கள் சங்கப் புனரமைப்புக் கூட்டம் இன்று சனிக்கிழமைமாலை 4மணிக்கு நடைபெற இருக்கிறது. (ஒ-68)

### ★ வீடு திருத்த நிவாரணப் பணம்

## நாளை பிரதான வீதி வங்கியில்

யாழ்ப்பாணம், மே 5

மக்கள்வங்கி, யாழ். பிரதானவீதிக் கிளையில் நாளை ஞாயிற்றுக்கிழமை தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணமும், வீடு திருத்துவதற்கான நன்கொடைப் பணமும் வழங்கப்பட இருக்கிறது-

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு நாளை தொழில் முயற்சிக்கான நன்கொடை வழங்கப்படும்.

வீடு திருத்துவதற்கான நன்கொடை வழங்கப்படவுள்ள உதவிஅரச அதிபர் பிரிவுகள் வருமாறு:-

★ சாவகச்சேரி — 53.
★ பருத்தித்துறை — 169.
★ கரவெட்டி 114.

### ஐ. தே. க வின் செயற் குழு 12 இல் கூடுகிறது

கொழும்பு, மே 5

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இம் மாதம் பன்னிரண்டாம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் நடைபெற உள்ளது.

முக்கிய விஷயங்கள் இக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படவிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சுமார் 2 ஆயிரத்து 200 பிரதிநிதிகள் [illegible] கூட்டத்தில் பங்குபற்ற [illegible] னர். (அ-எ)

## தமிழ்ப் பகுதி அபிவிருத்தி குறித்து ஜப்பானியப் பிரதமர்

### பிரட்மன் நேற்றுத் தகவல்

கொழும்பு, மே. 5

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் குறித்து ஜப்பான் பிரதமர் கைபு திருப்தி தெரிவித்துள்ளார்.

இத்தகவலை ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் நேற்று நடத்திய [illegible] வெளியிட்டார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுவது பெரிதாக்கிக் காட்டும் செயலாகும் என்று ஜப்பான் பிரதமர் அபிப்பிராயப்பட்டார் என்றும் திரு. வீரக்கூன் தெரிவித்தார்.

நாட்டின் தெற்குப்பகுதியில் அமைதியை ஏற்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளையும் ஜப்பான் பிரதமர் பாராட்டினார் என்று திரு. பிரட்மன் வீரக்கூன் சொன்னார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆநந்தர் - செல்லம்மா

யாழ்ப்பாணம் கந்தர்மட வாசியாகிய ஆநந்தர் செல்லம்மா 3-5-1990 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற செல்லப்பா ஆநந்தரின் [R. M. P] அன்பு மனைவியும், இந்திராணி, இந்திரசேனன் (U K), மீனலோஜனி, இரவீந்திரன் [U K], நகுலேந்திரன் [U K] ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபை, மாதவாம்பிகை, அமிர்தலிங்கம், சாரதாதேவி, யோகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன், நிர்மலா, கமலநாதன், சிவநாதன், செல்வநாதன், உஷா, ஆநந்தசேனன், நதிரா, தேவசேனன், மாலினி, லதா, அருணன், கீதா, ரீனா, டானியல், யோகான் ஆகியோரின் பேத்தியும், நிவேதிதாவின் பூட்டியும், இராசம்மாவின் சகோதரியும், கதிரவேலுவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-5-1990 ஞாயிற்றுக்கிழமை No 8, South Way ,North Harrow Middlesex, HA 2 6 Fp. England இல் நடைபெறும்.

தகவல்:
செ. அமிர்தலிங்கம்

69, பழம்றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (12996)

### திருமதி தில்லையம்பலம் பாக்கியலட்சுமி

திருமதி தில்லையம்பலம் பாக்கியலட்சுமி காலமானார். இவர் முன்னாள் அரியாலை உபதபாலதிபர் வை. தில்லையம்பலத்தின் பாரியாரும் லோகபவானி, கோகிலபவானி, கணேசமோகன், ஜகன்மோகன், கிரிதரமோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr. உருத்திரேஸ்வரன், சண்முகம், துஷ்யந்தி, சசிலா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருபன், தர்மினி, யதுநந்தன், சுவேந்தினி, யவிந்திரன், குயிலி, சர்மிலா, தர்சன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (6-5-90) காலை 9 மணிக்கு 344, கண்டி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
Dr. வை. உருத்திரேஸ்வரன்

344, கண்டி வீதி,
அரியாலை. (13030)

### செல்லையா சிவகாமிப்பிள்ளை

செல்லையா சிவகாமிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையாச்சாமியாரின் (இணுவில்) அன்பு மனைவியும், சுப்பிரமணியம் (சின்னத்துரை அன் பிறதேர்ஸ், யாழ்ப்பாணம்) மீனாட்சி அவர்களின் தாயாரும், சிவலிங்கம் (சின்னத்துரை அன் பிறதேர்ஸ்) புனிதவதி அவர்களின் அன்பு மாமியாரும், துளசிதாஸ், விஷ்ணுதாஸ். ரமணாதாஸ், ராமதாஸ், மீரா, கோபிகா, ரதிகலா, சிவாஜிதுரை, சிவராமன், சிவகாந்தன், கலைமதி, சிவகுமார் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
S. P. நடராசா
(உரிமையாளர், அண்ணா இன்டஸ்றீஸ்)

இணுவில் தெற்கு,
இணுவில். [13033]

### திருமதி கந்தையா இலட்சுமி

பளை, வீமன்காமம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி கந்தையா இலட்சுமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் திரு.V. கந்தையா அவர்களின் மனைவியும், சிவநாதன் (மாவட்ட தந்திப் பரிசோதகர்), சிவஇன்பநாயகி, சபாநாதன் (அதிபர், யா / தையிட்டி கணேச வித்தியாலயம்) ஆகியோரின் தாயாரும், திருஞானசுந்தரி, பரராஜசிங்கம் (சவுதி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-05-1990) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. சபாநாதன்

புகையிரத நிலையத்தடி,
மாவிட்டபுரம். [13102]

### இளையதம்பி குருநாதன்

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர் இளையதம்பி குருநாதன் கடந்த 01-05-1990 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் றோசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விவேகானந்தன், திருமதி சகுந்தலா இராமச்சந்திரன் (டுபாய்), திருமதி அருந்ததி இராஜ்சந்திரன் (அவுஸ்திரேலியா), செல்வி மேனகா (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மு. இராமச்சந்திரன் (டுபாய்), திரு. மு. இராஜ்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், செல்விகள் கவிதா, சங்கீதா, வாமினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் 05-05-1990 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மு. இராமச்சந்திரன்

37, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [12995]

நாவலர் சித்தன்கேணி

கலை, வர்த்தகம்

வார இறுதி வகுப்புக்கள்

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
அளவையியல் — திரு. கேசவன்
கணக்கியல் — திரு.ஸ்ரீகாந்தன்
தமிழ் — திரு.கணேஷ்
இ.நாகரிகம் — திருமதி அருள்நங்கை



சஞ்சீவி சஞ்சிகை

05 - 05 - 1990 சனிக்கிழமை



நாவலர்-சித்தன்கேணி

ஆண்டு 9, 10 & O/L வகுப்புக்கள்

கணிதம் — திரு. குணம்
விஞ்ஞானம் — திரு. G. ஈசன்
திரு. J. R. சூரி
ஆங்கிலம் — திரு. தெய்வர்
தமிழ் — திரு. கணேஷ்
ச. கல்வி — திரு. சண்


# இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் திறனாய்வுக் கலையின் வரலாறு

## பேராசிரியர் கைலாசபதியின் வரவு ஒரு மைல்கல்

இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனம் என்றார் மத்யூ ஆர்னல்ட்.

இலக்கியத்தை வாழ்க்கையின் விமர்சனமாகப் பார்க்கிறவரை எந்தச் சிக்கலும் இல்லை.

ஆனால் விமர்சனத்துக்கு ஒரு விமர்சனம் என்ற வகையில் இலக்கியத்திற்கு ஒரு விமர்சனம் என்று பார்க்கும் போதுதான் சிக்கலே தொடங்குகிறது.

'விமர்சனம்' என்ற வடசொல்லுக்கு 'நன்கு ஒன்றைத் தொடுவது' என்பது பொருள்.

தமிழில் படைப்பாசிரியரின் திறனை ஆய்வு செய்தல், அதாவது மதிப்பீடு செய்தல் என்ற அளவில் 'திறனாய்வு' என்ற சொல் பொருள் நிறைந்ததாகவே படுகிறது.

### மேலைநாடுகளில்

அறிவியல் நோக்கில் அமைந்த, மேலைநாடுகளில் காணப்படுவது போன்ற 'திறனாய்வு' தமிழில் கிடையாது.

மேலை நாட்டாரும் அத்தகைய திறனாய்வுப் பார்வையைக் குறுகிய காலத்தில் பெற்றுவிடவில்லை.

புதிய கருவிகள் கண்டுபிடிப்பு, உற்பத்தி, விநியோகம், பொருளாதார அரசியல் வளர்சிதை மாற்றங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப இலக்கியத்தின் வடிவமும் உள்ளடக்கும் மாற, அதற்கேற்பத் திறனாய்வுப் போக்கும் மாறிற்று.

ஆங்கிலேயர் ஆட்சி, ஆங்கிலக் கல்வி, புதிய நாகரிகத்தின் வரவு ஆகியவற்றின் காரணமாகத்தான் நாம் புதிய இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, புதுக்கவிதை, உரைநடை போன்றவற்றைப் பெற்றோம்.

மேலைநாட்டுச் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை சார்ள்ஸ் டார்வின் (பரிணாமக் கொள்கை), சிக்மண்ட் பிராய்ட் (உளவியற் கோட்பாடுகள்), கால்மார்க்ஸ் (பொருளியல் கோட்பாடு) ஆகிய மூவருக்கும் உண்டு.

இம்மூவரின் சிந்தனையின் தாக்கம் பிற்காலத்தில் மேலைநாட்டு இலக்கியங்களிலும் அதனடிப்படையாகப் பிறந்த இலக்கியத் திறனாய்விலும் பதிந்தது.

ஆனால், புதிய இலக்கிய வடிவங்களும், புதிய திறனாய்வுப் போக்குகளும் நம் நாட்டை வந்தடையப் போதுமான கால இடைவெளி தேவைப்பட்டது.

அப்படியானால் நவீன காலத்துக்கு முன் தமிழ் நாட்டில் திறனாய்வுச் சிந்தனை இருந்தது இல்லையா? இருந்தது.

### விதிமுறைத் திறனாய்வு

தமிழில் கிடைத்துள்ள திறனாய்வு நூல் 'தொல்காப்பியம்' (விதிமுறைத் திறனாய்வு).

கிரேக்கத்து அரிஸ்டோட்டலின் 'கவிதை இயல்' நூல் இத்துடன் ஒப்பிடத்தக்கது.

இதற்குப் பிறகு, குறிப்பிட்ட காலக் கட்டம்வரை பண்டைய இலக்கண, இலக்கியங்களைத் திறனாய்வு செய்து வந்தவர்களை 'உரையாசிரியர்' என்கிறோம். இவர்களுடைய நோக்கம் 'ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம்' காண்பதுதான்.

இலக்கியத்தின் உள்ளடக்கத்தைப் பகுத்துரைப்பதும், அதில் பொதிந்துள்ள நயம் பாராட்டுவதும் இவர்களுடைய திறனாய்வுப் பார்வை எனலாம்.

இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் என இவ் வரிசை நீளும்.

இவர்களுடைய திறனாய்வு விதிமுறை சார்ந்தது.

பேராசிரியர் க. கைலாசபதி கூறுவது போல, 'பண்டை உரையாசிரியர்களும் தொகுப்பாசிரியர்களும் அவர் போன்ற பிறரும் சிற்சில இலக்கண, இலக்கிய 'விதிகள்', பிரமாணங்கள்', 'முறைகள்' ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றின் ஏற்புடைமை கருதியே ஒரு நூலை அங்கீகரித்தனர். அவர்களைப் பொறுத்தமட்டும் 'விதிகள்' முக்கியமானவையாக விளங்கின. மரபில் இருந்து வழுவாமை மதிக்கப்பட்டது' என்பது உண்மையாகும்.

### பண்பாட்டுத் திறனாய்வு

சுவையின் அடிப்படையில் இலக்கியங்கள், காப்பியங்கள் திறனாய்வு செய்யப்பட்ட காலம் ஒன்றிருந்தது.

டி. கே. சிதம்பரநாத முதலியார் இத்தகைய திறனாய்வு நெறி வளர்ந்திட வழி செய்தார்.

கவிதையின் அழகு, சுவை, ஓசைநயம் இலக்கியம் காட்டும் பண்பாடு ஆகியன இவர் போன்றோரால் நினைந்து போற்றப்பட்டன.

கல்வித்துறை சாராத இவர்களால் இத்தகை திறனாய்வு பெரிதும் பேணப்பட்டது.

இவர்கள் பார்வையில் கம்பராமாயணம், சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம், பிரபந்தங்கள் போன்ற பண்டைய இலக்கியங்களும் அவை காட்டும் பண்பாடும் மட்டுமே வியந்து பாராட்டப்பட்டன.

தற்கால இலக்கியம் மதிக்கப்படவில்லை.

'Culture' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக 'பண்பாடு' என்ற சொல்லைப் படைத்தவர் டி. கே. சி. தான்.

### பகுத்தறிவுத் திறனாய்வு

மேற்கூறிய காலகட்டத்திலேயே இன்னொரு திறனாய்வு வளர்ந்துகொண்டு இருந்தது. பெரியார் ஈவெரா பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் புராண, இதிகாச மறுப்புப் பிரசாரத்தை தொடக்கிவிட்டிருந்தனர்.

### வரலாற்றில் திறனாய்வு

கல்வித்துறை சார்ந்த அறிஞர்களுக்கு இடையே எழுத்து மூலமாகவே ஒரு திறனாய்வுப் போர் நடந்து கொண்டிருந்தது.

எஸ். வையாபுரிப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்றோர் சட்டம் பயின்றுவிட்டுத் தமிழ்த் துறைக்கு வந்தவர்கள். இவர்களுடைய கருத்து முறையாகப் பயின்று தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் இலக்கியங்களின் காலத்தையும் கட்டிக்காத்து வந்த தமிழறிஞர்களுக்கு முற்றிலும் முரணாகப்பட்டது.

குறிப்பாக வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் மூலம் வடமொழி நூல்கள் என்று கூறியதும், தொல்காப்பியரின் காலம் கி. பி. 300க்கும் பிற்பட்டது என்றும், திருவள்ளுவரின் காலம் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கூடியதும் இவருக்குக் கடுமையான எதிர்ப்பை உண்டாக்கியது.

இவருடைய கருத்துக்கு எதிராக பல கட்டுரைகள் வெளியாயின என்றாலும்; அவை காரணகாரியத்தோடு மறுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பிற்காலத்தில் க. கைலாசபதி, வையாபுரிப்பிள்ளையின் கருத்துக்கள் பலவற்றையும் தம்முடைய திறனாய்வுக் கட்டுரைகளில் மேற்கோளாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

### மார்க்சிய நோக்குத் திறனாய்வு

இதனைக் கார்ல்மார்க்ஸின் கோட்பாடுகளின் அடிப்படையில் இலக்கியத்தைத் திறனாய்வு செய்தல் எனலாம்.

வர்க்கப்பார்வையும் யதார்த்த நோக்கும் இத்திறனாய்வில் முதலிடம் வகிக்கிறது.

மார்க்ஸிய நோக்குத் திறனாய்வாளருக்கும் தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு இருந்து வந்திருக்கிறது.

'கலை கலைக்காகவே' என்போருக்கும், 'கலை மக்களுக்காகவே' என்று நம்புவோருக்கும் இடையே நடக்கும் மோதல் இது.

ரகுநாதன், வானமாமலை, மார்க்ஸிய போக்குத் திறனாய்வைத் தீவிரப்படுத்தியவர்கள்.

தற்கால இலக்கியத் திறனாய்வில் நினைவில்கொள்ள வேண்டியவர் திரு. சி. கனகசபாபதி, பேராசிரியர் க. கைலாசபதியால் அடிக்கடி சுட்டிக்காட்டப்படுவார்.

இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் கைலாசபதியின் வரவு தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் ஒரு மைல் கல் எனலாம். [தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்] ஒப்பியல் இலக்கியம் இவருடைய சிறப்புக்கூறு எனலாம்.

தமிழ் நாட்டில் எழுதப்பட்ட ஒரு சிறிய இலக்கியத் துணுக்குக்கூட இவர் பார்வையில் இருந்து தப்பியது இல்லை.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஜனாப் எம். ஏ. நுஃமான் போன்றோர் கைலாசபதியின் வழிநிற்பவர்களே.

'கலை கலைக்காகவே' குழுவில் சிட்டி என்று அழைக்கப்படும் பெ. கோ. சுந்தரராஜன், கு. ப. ராஜகோபாலன், க. நா. சுப்பிரமணியம், சி. சு. செல்லப்பா, இலங்கையின் மு. தளையசிங்கம், ஒரு காலத்தில் மார்க்ஸியத்தில் பற்றுக் கொண்டிருந்த சுந்தரராமசாமி, வெங்கடசாமிநாதன் எனப் பலரைக் குறிப்பிடலாம்.

மார்க்ஸீய எதிர்ப்புத் திறனாய்வாளர்பற்றிச் கைலாசபதி எழுதிய 'திறனாய்வுப் பிரச்சினை' அவர்களுக்கு எதிரான மிகப்பெரிய சுடல் எனலாம்.

### ஒப்பியல் நோக்குத் திறனாய்வு

பிரெஞ்சு நாட்டில் தோன்றிய இத்திறனாய்வுப்போக்கு மேலை நாடுகளில் எல்லாம் பரவி, நம் நாட்டிற்கும் வந்துள்ளது.

பயனுள்ள திறனாய்வுகளில் முதலிடம் பெறுவது இது. ஒரே நாட்டில் தோன்றிய இலக்கிய வகைகளோடு நம்நாட்டு இலக்கிய வகைகளை ஒப்பீடுசெய்வது, பல்வேறு நாட்டைச் சேர்ந்த இலக்கிய வகைகளோடு நம் நாட்டு இலக்கியவகைகளை ஒப்பீடு செய்வது போன்ற திறனாய்வுப் போக்கினால் பல உண்மைகள் தெரிய வந்திருக்கின்றன.

சங்க இலக்கியத்தையும் கிரேக்க இலக்கியத்தையும் ஒப்பிட்டுச் செய்துள்ள க. கைலாசபதியின் The Tamil Heroic Poetry நல்ல வரவேற்பைப் பெற்றது. இம்முறையில் பலரும் தொடர்ந்து திறனாய்வு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

திறனாய்வுக் கலை ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளப் பயன்படும் கருவி அன்று. இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பது; வழிகாட்டுவது.

திறனாய்வாளன் வெறும் இலக்கியம் பயின்றவனாய் இருந்தால் மட்டும்போதாது. அதனோடு ஒட்டிய பல கவின்கலைகளைப்பற்றி 'வன் அறிந்திருத்தல் வாசகரைப் புதியபரந்த அறிவுலகை நோக்கி அழைத்துச் செல்லப்பயன்படும்.

(திறனாய்வுக்கலை; நோக்கும் போக்கும் என்ற தலைப்பில் 'தமிழ்மணி'யில் வெளியான கட்டுரையில் இருந்து)

★

- டாக்டர் அ. சிவக்கண்ணன் -

---

## கருத்துக் கலசம்

மயூரா

### வாழ்க்கையைக் காப்பாற்றுதல்

மனிதனின் வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும். அவனது கௌரவத்தையும் பேண வேண்டும். இதுவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இவ்வருடத்திற்கான கோட்பாடாக அமைந்திருக்கிறது.

உலகில் எங்கு பார்த்தாலும் கருத்து வேற்றுமை. கருத்து மோதலின் பிரதிபலனாக மக்கள் மோதிக் கொள்கிறார்கள்.

கருத்து மோதல் அறிவுபூர்வமானதாக, ஆழமாகத் தொடர்ந்து ஒரு நல்ல முடிவைத் தருவதாக இருந்தால் அதனை எல்லோரும் வரவேற்பார்கள்.

ஆனால் இப்போதெல்லாம் கருத்து மோதல் ஆளுக்கு ஆள் மோதலாக முடிகிறது; மக்களுக்கு மக்கள் மோதலாக விரிகிறது; நாட்டுக்கு நாடு மோதலாகப் பரவுகிறது.

இந்த மோதல்களின் போது, சண்டை சச்சரவுகளின்போது, யுத்தங்களின் போது மனித வாழ்க்கை பற்றியும், கௌரவம் பற்றியும் சிந்திக்கப்படுவதில்லை.

மனிதன் பிறக்கும் போதே மரணமும் நிச்சயம் என நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. ஆனால் அவன் இந்த மண்ணில் வாழ வேண்டியவன். அதே போன்று அவனுக்கென ஒரு மனித கௌரவம்; அதுவும் பேணப்பட வேண்டும்.

மனிதனின் வாழ்க்கை பேணப்படுதல் வேண்டும். அது சீரழியாது பார்க்கும் பொறுப்பு ஒவ்வொரு அடுத்த மனிதனுக்கும் உண்டு. ஆனால் அடுத்தவன் வாழ்க்கையை சீர்கெடுக்க அல்லது இல்லாதொழிக்க எவருக்கும் உரிமை இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழும் உரிமை உண்டு என்பதே உண்மை.

இந்த மகத்தான உண்மை உணரப்பட வேண்டும். ரயில் விபத்தில் சிக்கிக் காயமடைந்தவனுக்குத் தீ விபத்தில் அகப்பட்டுக் கருகி உயிருக்குப் போராடும் ஒருவனுக்கும்; கண் தெரியாமல் கஷ்டப்படும் ஒருவனுக்கும் வாழ்க்கை கொடுக்க வேண்டும்; அவனது வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டும். இந்த எண்ணம் எல்லோருக்கும் உதித்தால் மனித வாழ்வைக் காப்பாற்ற வேண்டும் என்ற இலக்கை, இலட்சியத்தை அடையலாம். அடுத்தவனுக்கு உதவும் எண்ணம், காருண்யம், இரக்கம் வளர்க்கப்பட்டுவிட்டால் அடுத்தவன் வாழ்க்கையை சீர்கெடுக்கும் எண்ணமும் செயலும் மேலோங்கி நிற்கமாட்டா.

இதேவேளை மனித கௌரவமும் சமூக வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். ஒரு மனிதன் கௌரவம் பார்த்து மற்றவர்களை கீழாகப் பார்ப்பது ஒவ்வாதது. ஆனால் அடுத்தவனுக்கு கௌரவமும் மதிப்பும் கொடுக்கப் பழகுவது ஒரு சமூகத் தேவை. அடுத்தவனின் கௌரவத்தைப் பாதிக்காமல் ஒவ்வொருவரும் நடந்தால் அதுவே கௌரவத்தைப் பேணுவதாகும்.

மனித வாழ்க்கையையும், கௌரவத்தையும் பாதுகாக்கும் தன்மை இன்றைய சமுதாயத்தில் பரவவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் அவற்றின் அவசியத்தை உணர்ந்து நடந்தால் இலக்கை அடைவது கடினமானதல்ல. ★

---

# விண்ணில் குமுறும் எரிமலைகள்!

வியாழன் கிரகத்துக்கு ஐயோ (Io) என்று துணைக் கோள் இருக்கிறது.

அதன் மேற்பரப்பு சிவப்பும் மஞ்சளும் கலந்து கந்தகச் சமவெளியாகத் தோன்றுகின்றது.

அங்கு எரிமலைகள் குமுறிக் கொண்டிருக்கின்றன.

அதன் நிலநடுக்கோட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டுமன்றி அதன் தென் துருவமுனைக்கு அருகிலும் ஒரு எரிமலைப்பரப்பு இருப்பதாக அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக அதன் உள் கட்டமைப்புப்பற்றி இதுவரை விஞ்ஞானிகள் கொண்டிருந்த கருத்துக்களை எல்லாம் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

### வொயேஜர் விண்கலம்

1986 ஆம் ஆண்டில் முதலாம் வொயோஜர் விண்கலம் துணைக்கோள் 'ஐயோ' வை ஒட்டிப் பறந்தபோது அதில் எட்டு எரிமலைகள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு படம் பிடித்தது.

பல மாதங்கள் கழித்து இரண்டாவது வொயேஜர் விண்கலம் 'ஐயோ'வைச் சுற்றிச் சென்றபோது, அவற்றில் ஆறு எரிமலைகள் எரிந்து கொண்டிருந்தன.

அவை 'ஐயோ'வின் நிலநடுக்கோட்டைச் சுற்றியிருக்கிற விசாலமான, தட்டையான, எரிமலைக் குழம்பு பரவிய சமவெளிகளில் அமைந்திருக்கின்றன.

### மலை முகடுகள்

துருவப் பகுதிகள் கரடுமுரடாயும், மலைப்பாங்காகவும் அமைந்துள்ளன. சில மலை முகடுகள் எட்டு கிலோ மீற்றர் உயரம் கூட இருக்கின்றன.

'ஐயோ'வின் தரைப்பரப்பு இவ்வளவு வேற்றுமைகளுடன் இருப்பது வானியல் வல்லுநர்களுக்குப் புதிராக இருக்கிறது. அதற்கும் அதனின் உட்புறக் கட்டமைப்புக்கும் அதனில் உள்ள எரிமலைக்குமுறல்களுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ என்று கண்டுபிடிக்கவும் முயன்று வருகின்றார்கள்.

### பதினாறு சந்திரன்கள்

வியாழனுக்கு 16 சந்திரன்கள் இருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கலிலியோ தனது தொலைநோக்கியின் மூலம் கண்டுபிடித்த நான்கு சந்திரன்களில் 'ஐயோ'வும் ஒன்று.

அந்த நான்கு சந்திரன்களும் கிட்டத்தட்ட சிறிய கோள்களின் அளவுக்குப்பெரியவை.

'ஐயோ' வியாழனுக்கு நெருக்கமாக உள்ளது. 'ஐயோ' வில் எரிமலைக் குமுறல்கள் இடைவிடாது நடக்கின்றன.

'ஐயோ' வில் நிறையீர்ப்பு விசை குறைவு. அதன் காரணமாக எரிமலைகள் துப்பும் பாறைச்குழம்பு 280 கிலோ மீற்றர் உயரத்திற்குக் கூட ஏகிறுகின்றன.

திறம்மிக்க தொலைநோக்கிகளின் மூலம் இந்த எகிறல்களைப் பூமியில் இருந்தே பார்க்க முடிகிறது.

பாறைக்குழம்பும் கந்தகச் சாம்பலும் பீறிட்டெழுந்து 'ஐயோ' வின் மேற்பரப்பிலும் விண்வெளியிலும் சிதறிப் பரவுகின்றன.

'ஐயோ' வின் மர்மங்களை அறிவதற்காக அமெரிக்க நாஸா நிறுவனம் கலிலியோ விண்கலத்தை அனுப்பிவைத்துள்ளது. அதன் பிறகே உண்மையான நிலவரம் தெரியவரும். ★

---

அறிஞர் கார்ல்மார்க்ஸ் 05 - 05 - 1818 இல் பிறந்தார். 14 - 03 - 1883 இல் மரணமானார். இன்று அவரின் 172 ஆவது பிறந்ததினமாகும்.

# காலத்தால் அழியாத கார்ல்மார்க்ஸ் சிந்தனைகள்

- சார்ள்ஸ் -

மார்க்ஸீயம், 19 ஆம் நூற்றாண்டின் மாபெரும் கண்டுபிடிப்பாகும்.

தத்துவஞானம், அரசியல், பொருளாதாரம், வரலாற்று விஞ்ஞானம் மற்றும் சோஷலிச சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியில், மார்க்ஸீய சித்தாந்தம் மகத்தான ஒரு கண்டுபிடிப்பாக அமைந்துவிட்டது.

வாழ்கின்ற படைப்பாற்றல் உடைய, தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்துகொண்டு இருக்கும் தத்துவமாக, மார்க்ஸீயம் அமைந்துள்ளது.

இது வாழ்க்கையில் இருந்து, சமூக நடைமுறையிலிருந்து தனது பலத்தைப் பெறுகின்றது.

மனிதகுல சிந்தனையில் தோன்றிய புதிய சாதனைகள் அனைத்தையும் விமர்சன ரீதியில் பகுத்தாய்ந்த புரட்சிகர இயக்கமாக மார்க்ஸீயம் அமைகின்றது.

இயற்கை, சமூகம், மனித சிந்தனையின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற பொதுவிதிகளைப்பற்றிய இயக்கவியல், வரலாற்றுப்பொருள் முதல்வாதம் மூலம் உலகத்தை சிறப்பாக அறிந்துகொள்ள உதவியவர் கார்ல்மார்க்ஸ்.

இந்த அடிப்படையில் உலகத்தை புரட்சிகரமாக மாற்றி அமைப்பதற்கும் கார்ல் மார்க்ஸ் வழிகாட்டினார். அதன் காரணமாக கார்ல் மார்க்ஸ் வரலாற்று நாயகராகிவிட்டார்.

கார்ல் மார்க்ஸின் வாழ்வு, பாட்டாளி மக்களின் துயரங்களோடு பின்னிப் பிணைந்து இருந்தது.

வழக்குரைஞர் குடும்பத்திலே கார்ல்மார்க்ஸ் பிறந்தாலும் ஏழ்மை அவரை வாட்டியது.

அந்தக்காலத்தில்தான் வரலாற்றுப் புகழ்மிக்க 'மூலதனம்' என்ற நூலை மூன்று தொகுதிகளாக அவர் தொகுத்தளித்தார்.

ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்தில் இருந்தும் மனிதகுலத்தை இந்தப் புரட்சிகரமாற்றம் விடுவிக்கும் என்பதை ஏங்கெல்சுடன் சேர்ந்து கார்ல்மார்க்ஸ் எடுத்துக்காட்டினார்.

கார்ல்மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' நூலின் முதல்தொகுதி 1867 இல் வெளிவந்தது. இரண்டாவது தொகுதி அவர் மரணித்த பின்னரே 1885இல் வெளியானது. 1894 இல் மூன்றாவது தொகுதி வெளியானது.

கார்ல்மார்க்ஸ் வாழ்ந்து, போராடிய காலத்தையும் நம்மையும் பிரிக்கின்ற வருடங்களைப் பின்நோக்கிப் பார்த்தால், அவரது போதனையின் தாக்கம், புரட்சிகர வர்க்கப்போராட்ட நிகழ்வுப்போக்கில் உழைக்கும் மக்கள் மத்தியில் எப்படி வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதைத் தெளிவாக அவதானிக்கமுடிகிறது.

கார்ல்மார்க்ஸ் மரணித்த பின்னரும் அவரது சித்தாந்தம் பாட்டாளி மக்களின் ஒளிமிக்க ஆயுதங்களாக இன்னும் திகழ்கின்றன.

கார்ல்மார்க்ஸின் சிந்தனைகள் காலத்தால் அழியாதவையாகும். ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன உறுதி



திருமணமாகி ஒருவருடம் கழிந்து முதன்முதல் மனைவியைப் பிரிந்து தனியே படுக்கையில் படுத்திருந்த நௌசார் அவளை நினைத்தபடியே கடவுளையும் மனமாரப் பிரார்த்தித்துக் கொண்டான்.

முதன்முதல் அவளை ஏழு ஆண்டுகட்குமுன் கல்முனை பொதுநூலகத்தில் சந்தித்தான். அப்பொழுதுதான் பாத்திமாக்கல்லூரியில் ஆசிரியையாக மாற்றலாகி வந்திருந்தாள்.

அவன் பொதுநூலகத்தில் நூலகனாகக் கடமை புரிந்தான். புத்தகம் பெறுவதற்காக அவள் வருவது வழக்கம்.

இயற்கையாகவே புத்தக உலகில் ஈடுபாடு கொண்ட இருவரும் புத்தகங்கள் பற்றிக் கதைக்க ஆரம்பித்தனர். புத்தகங்கள் இரவல் எடுத்தும் கொடுத்துங் கொண்டனர்.

கவிதா பேரழகி என்றில்லை. ஆயினும் அடக்கமான அழகு கொண்டவள். மன அழகில் அவளுக்கு இணை அவளேதான்.

பாடசாலை மாணவர்களுக்கு வேண்டிய விளக்கங்களை அவள் தரும்போது உண்மையான ஆசானாகவே விளங்குவாள்.

இதனால் கல்லூரி ஆசிரியர் குழாத்திடையேயும் நல் மாணவர்களிடையேயும் நல்ல மதிப்புப் பெற்றவளாக அவள் இருந்தாள்.

வாசிப்பு மட்டும் தான் மனிதனை பூரணத்துவப்படுத்துகின்றது என்பதனை அவர்கட்கு விளக்குவாள்.

ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் நல்ல நூல்களைப் படிக்கும்படி மாணவர்களைத் தூண்டுவாள்.

சமயப்பற்று மிக்கவளாக இருந்தாள்.

ஆனால் அவளிடம் சமயக் காழ்ப்புக்கிஞ்சித்தும் இல்லை. சைவசமயத்தவளான அவள் மற்றும் சூழ்நிலையிலும் தன் பணியை நன்கு தொடர்ந்தாள்.

சமயம் என்பது வாழ்க்கை நெறி—வாழ்க்கைக்கு அன்புதான் அடிப்படை. அன்புதான் சமயத்தின் ஆணிவேர். எனவே சமய வாழ்வு ஒன்றினால் மட்டுமே மனிதன் மனிதனாக வாழ முடியும். அது எச்சமயமாக இருந்தால் என்ன?

ஒருநாள் நூலகத்தில் அவள் தன்னிடம் கூறிய கருத்துக்களை அவன் நினைவு கூர்ந்தான். இச்சந்திப்பின் பின் தான் அவனுக்கு அவளிடமிருந்த ஈடுபாடு வலுவடைந்தது. சமயக்கருத்துக்களில் அவளும் தன் போக்கில் இருப்பதனைக்கண்டு பெருமை அடைந்தான்.

'கவிதா உனது சமயப் பற்றினை நான் மதிக்கிறேன். நானும் சமயச்சிந்தனை வயப்பட்டவன்தான். எமது ஆண்டவர் அல்லாவின் போதனைகளை என்னால் முடிந்தவரை அடியொற்றவே விழைகின்றேன். உண்மையானதொரு இஸ்லாமியனாகவே வாழ முனைகின்றேன்'

'கடவுள் எதற்கும் மேலானவன். அவனுக்கு எம்மால் உருவம் கற்பிக்க முடியாது என்பது தான் எம்மார்க்க அடிப்படை. நீங்களோ பிள்ளையார், முருகன், சிவன், இலக்குமி, காளி என்றெல்லாம்உருவம்கொடுத்துவணங்குகின்றீர்கள். இவற்றில் எத்தனையோ தத்துவார்த்தங்கள் அடங்கி இருக்கலாம். ஆனால் இவற்றை எத்தனை சைவசமயத்தவர்கள் தெரிந்து உணர்ந்து உள்ளார்கள்'

'ஆம் நௌசார், நானும் இதுபற்றி யோசித்தது உண்டு. சமயவாழ்வு ஒன்று தான் எம்மைக் காத்திடக் கூடியது. எம்மிலும் மேலான ஒரு இயக்கம் தான் எமை இயக்கி நிற்கின்றது என்பது எச்சமயத்தாரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. ஆதி மனிதன் இயற்கையைத்தான் தன் கடவுளாகக் கொண்டான். அதன் இயக்கத்தைத் தன்னுள் வியந்தான்,

மனிதனுக்கு உணவாகக் கூடிய மீனினங்கள் உள்ள அதே கடலில்தானே மனிதனை உணவாக்கக்கூடிய திமிங்கிலங்களும் ஏராளமாக இருக்கின்றன. இதுதான் உலகியல்.

ஒரு நாள் நூலகத்துக்கு வந்த கவிதா—

'நௌசார் இன்று எனக்கு வீட்டில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. அதனை நீங்களும் படிக்க வேண்டும் அல்லவா' என்று கடிதத்தினைக் கொடுத்தாள்.

அன்புமிக்க கவிதாவுக்கு!

நலம். நலமாகுக. நான் சிறுவயதிலேயே தகப்பனை இழந்த உன்னை நல்லபடி படிக்க வைத்துப் புனிதமான ஆசிரியத் தொழிலுக்கு அனுப்பியதே நல்ல சேவையைச் சமுதாயத்துக்குச் செய்து உன் வாழ்க்கையை நல்லபடி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். எனக்கு ஒரேயொரு பிள்ளையாக வாய்த்த உன்னை எவரும் என்னிடமிருந்து பிரிக்க அனுமதிக்க மாட்டேன். ஊரோடு நல்ல சீதனங் கொடுத்துக் கலியாணம் செய்து வைக்கவே நான் எண்ணியிருக்கின்றேன். நீயோ யாரோ ஒரு முஸ்லிம் பெடியன் ஒருவனுடன் காதல் கொண்டலைவதாக உமது கல்லூரியாசிரியை என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒருவரின் கடிதமூலம் அறிந்து மிகவும் வேதனைப்படுகின்றேன். கடிதம் கிடைத்ததும் ஒருமுறை இங்கு வந்து போகவும். ஏனையவை நேரில்.

உனது அம்மா
கமலாம்பிகை

**- கவிதா அரசு -**

கடிதம் படித்துக்கொண்டிருந்த என் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த கவிதா,

'நௌசார் நான் உங்களையே விரும்புகின்றேன். நீங்களும் என்னையே நேசிக்கின்றீர்கள். நீங்கள் இஸ்லாமியர் நான் சைவசமயத்தவள். எனது தாய் நான் சமயப் புனிதத்துவத்தைப் புதைத்துவிட்டேன் என்று தான் எண்ணுவாள். இதனை நான் எதிர்பார்த்தவள் தான். உங்கள் குடும்பத்திடமிருந்தும் இத்தன்மையான எதிர்ப்புத்தான் கட்டாயம் வரும் என்பதும் எமக்குத் தெரியும்தானே. காரணம் அவர்களின் கண்ணோட்டத்தில் நான் தமிழிச்சியே. அவர்கள் பேசும் மொழியும் தமிழ்தான். ஆனால் அவர்கள் தங்களைத் தமிழர்கள் என்று எண்ண மறுக்கின்றார்களே. என்ன செய்வது சில பெற்றோர்களின் அதிகமான அன்பும், பிடிவாதமும் தான் அவர்களுடைய பிள்ளைகளின் ஒளிபொருந்திய எதிர்காலத்தையே இருளடையச் செய்துவிடுகிறது'.— என்று அறிஞர் கார்லி கூறியதுதான் என் ஞாபகத்தில் வருகிறது என்று கலங்கினாள்.

'கவிதா குழந்தைத் தனமாக அழாதே. எதற்கும் பயப்படாதே! நானும் உன்னுடன் யாழ்ப்பாணம் வருகிறேன் எமது நூலகத்துக்கு வேண்டிய சில புத்தகங்களை அங்கு வாங்கவேண்டும். இந்தச் சாட்டுடன் நான் வருகிறேன். நாளைய தினமே புறப்படுவோம். இப்படியான சந்தர்ப்பத்தில் உன் அண்மையிலேயே நான் இருக்க வேண்டும்' என்று கூறி மறுநாளே இருவரும் யாழ் நோக்கிப் பயணமானோம்.

நான் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கினேன். கவிதா மறுநாள் பிற்பகல் என்னைச் சந்திப்பதாகக் கூறி தன் வீட்டுக்குச் சென்றாள். கூறியபடி இருவரும் சந்தித்தோம். யாழ் சுப்பிரமணியம் பூங்காவுக்குட் சென்று அமர்ந்தோம்.

★ ★ ★

'நௌசார் அம்மா இறுதி வரை எமது தொடர்பினை வெறுக்கவே செய்கிறாள். நானோ திருமணம் என்று ஒன்று நடந்தால் அது அவருடன்தான் இல்லையேல் காலமெல்லாம் கன்னியாகவே வாழ்வேன். எமது வாழ்வு உள்ளத்தளவில்லாவது தொடரும் என்று கூறி விட்டேன்'— இப்படி உறுதியுடன் கூறிய கவிதா இன்று மாலையே நாம் திரும்பவும் கல்முனைக்குச் செல்வோம் என்றாள்.

மனதில் நிலைக்கும்படியான நிரந்தரமான சந்திப்புக்கள் எல்லாம் மகிழ்ச்சியில் தொடங்கி ஏக்கத்தில்தான் முடியும்போலும் என நினைத்தவனாகச் சரி என்றேன். பஸ்நிலையத்துக்கு வந்து கல்முனைக்குச் செல்லும் பஸ்வண்டிக்காக இரண்டு ஆசனங்களையும் பதிவுசெய்துகொண்டோம்.

மாலையில் பஸ் நிலையத்தில் சந்திப்பதாகக் கூறிய கவிதா தன் வீட்டுக்குச் சென்றாள். திட்டமிட்டபடி எம் பிரயாணமும் தொடர்ந்தது.

★ ★ ★

எதிர்பார்க்கும் எதிர்பாராத திருப்பங்களின் சேர்வுதானே வாழ்க்கை.

எனது பெற்றோரும் என் திருமணத்துக்கு முயன்றனர். என் காதல் விவகாரமும் அவர்கட்குத் தெரிந்துவிட்டது.

'இப்ப பையன்கள் அப்படித்தானே காலப்போக்கில் சரியாய்விடும்' என்று எண்ணிக்கொண்டனர் போலும்.

தனிவீடு, தனிக்கார், நெல்வயல், ரொக்கப்பணம் ஆகியவற்றுடன், வீட்டுக்கு ஒரே பெண்ணாகப் பிறந்த ஒருத்தியை பெண்பார்த்தனர்.

விடயத்தை அறிந்த நான் அவளின் பெற்றோருக்கு விபரமாக ஒரு கடிதம் எழுதினேன்.

வீட்டில் பெரும் பூகம்பம் எழுந்தது. நான் விட்டுக் கொடுக்கவில்லை. திருமணம் என்று ஒன்று நடந்தால் அது அவளுடன்தான் நடக்கும் இல்லையேல் இப்படியே தான் வாழ்வேன் என்றேன்.

'ஏன் அவளைக் கூட்டிக் கொண்டு போகவேண்டியது தானே'— என்று என் தங்கை என்னை இளக்காரமாகவே கேட்டாள்.

'கூட்டிக்கொண்டு போகவோ, கூடிக்கொண்டு போகவோ நான் இல்லை. உம்மா, வாப்பா விருப்பத்துடன் தான் அவளைச் செய்வேன் அல்லது வாழ் நாள் முழுவதும் இப்படியே தான் இருப்பேன்' என்றேன்.

'ஓ அவள் உன்னைச் சந்நியாசி ஆக்கிவிட்டாளோ'... என்றாள் என் உம்மா.

இதற்குமேல் நான் ஒன்றுமே கூறவில்லை

'புரியாதவர்கட்கு எதனையும் புரியவைக்கலாம். ஆனால் புரியமறுப்போர்க்கு எதனைத்தான் புரியவைக்க முடியும்' என என்னுள் நினைத்துக்கொண்டு கடற்கரைப்பக்கம் சென்றேன்.

'வாழ்க்கை என்பதே ஒரு கணக்குத்தான். இறைவன் அக்கணக்கைச் செய்யச் சொன்னான் வழியை அவனே சொல்லித்தந்தான். விழியை அதில் வைத்துச் செய்வோம். பெருக்கல் வரும், பின்னம்வரும், பெரிய எண்கள் பின்னால் வரும், குறுக்கல் வரும், கூட்டல் வரும், குத்தல் புள்ளி இடையேவரும், வகுத்தல் வரும், வாங்கல்வரும், வாய்ப்பாடுகள் சேர்ந்து வரும், வழியைவிட்டு விலகாவிடின் விரும்பும் விடைவிரைவில் வரும்' என்று அன்றொரு நாள் இக்கடற்கரையில் அவள் என்னிடம் கூறியது என் மனக்கண்மீது நிழலாடியது.

ஐந்து ஆண்டுகள் உருண்டோடின. நாமும் அன்றாடம் சந்தித்தோம், பேசினோம், புத்தக உலகில் உலாவினோம் எம்மிடை கவித்துவம் வளர்ந்தது. கவிதைகள் யாத்தோம் கவிஞன் மனதில் பூத்த புதுமலராக அவள் பொலிவுகொண்டாள்.

எம் வாழ்க்கையமைவைக் கண்ட என் பெற்றோர் இதயம் இளகியது போலும், கவிதாவின் தாயுடன் தொடர்புகொண்டு அவளையும் சம்மதிக்கவைத்து நீங்கள் இருவரும் சேர்ந்து வாழுங்கள் என்று மனமார ஆசி கூறினர்.

எமது திருமணமும் எமது நூலகமண்டபத்திலேயே இனிது நடந்தேறியது. வாழ்வு இனித்தது.

★ ★ ★

கவிதா தாய்மை அடைந்தாள்.

ஒருநாள், 'அத்தான் எனக்கு என்ன பிள்ளை பிறக்கும் தெரியுமா? உங்களைப் போல் அழகான ஆண்பிள்ளைதான் பிறக்கும் அதற்கு இஸ்மத் என்றே பெயரிடுவோம்' என்றாள்.

நானோ அவளை அணைத்தபடி 'எமக்குப் பெண்பிள்ளைதான் பிறக்கும். கல்பனா என்று பெயரிடுவோம்' என்றேன்.

இவை எல்லாம் என் சிந்தனையில் சிறகடித்தபோது தான் கவிதாவைப் பிரசவத்துக்காகக் கல்முனை வைத்தியசாலையில் விட்டுவிட்டது நினைவுக்கு வந்தது. நேரம் ஐந்தரையைத் தாண்டிவிட்டது. எழுந்து குளித்துவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றேன்.

வைத்தியசாலை வாசலிலேயே எனக்காகக் காத்து நின்ற எனதுதாய்,

'மகனே எனக்கு இரண்டு பேரப்பிள்ளைகள் பிறந்திருக்குதடா ஒன்று ஆண் மற்றையது பெண்' என்று சொல்லிச்சிரித்தாள்.

எனக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி தான்.

உடனேயே வார்ட்டுக்கு ஓடியநான் கவிதாவின் பக்கம் சென்றேன். அவளது அம்மாவும் மகிழ்ச்சியுடன் 'மருமேன் இரண்டு பிள்ளைகள் பிறந்திருக்கு' என்று கூறியவாறே வெளிப்பக்கம் சென்றாள்.

'கவிதா, நல்லாக் கஷ்டப்பட்டுவிட்டியா அம்மா, என்னசெய்வது. இப்ப சந்தோசமா கவிதா'?

'நல்லசுகம் அத்தான். எமது காதல் வாழ்வின் பரிசுதானே இஸ்மத்தும், கல்பனாவும்' என்று கூறியபடியே என்கரங்களைப் பற்றிக்கொண்டாள். ★

(யாவும் கற்பனை)

சஞ்சீவி சிறுகதை

## பொது அறிவுப்போட்டி இல. 39

1. மின்சாரத்தின் வேகம் வினாடிக்கு எத்தனை மைல்...? 27மைல் / 50மைல்
2. கூட்டுறவுச் சின்னம் எது...? ... ... ... ... கைகுலுக்குவது / சோடிப்புறா
3. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' எனப் புகழ்வது எது...? பாரதம் / மணிமேகலை.
4. உலகில் பரப்பளவில் பெரிய நாடு எது...? ... ... ...ரஷ்யா / அமெரிக்கா
5. ''பாலைவனக் கப்பல்'' என்று இதைச் சொல்வர்...? ... கழுதை / ஒட்டகம்
6. முதல் முதலில் திருச்சபையை நிறுவியவர் யார்...? ஆதாம் / யேசுநாதர்
7. மனிதனைச் செயற்படத்தூண்டும் சக்தி எது ? ... ... பெண் / எண்ணம்
8. ''வானம் பொழியுது பூமி விளையுது உனக்கேன் கப்பம்'' என்றவர் யார்...? ... ... ... ...கட்டபொம்மன் / பாரதியார்
9. இதுவும் தேன் தரும்...? ... ... ... .. ... ... ... கரும்பு / பூ
10. ' சிறுகதை மன்னன்'' எனப் புகழ்பெற்றவர் யார்.. ? ... ... ... ..புதுமைப்பித்தன் / ஜெயகாந்தன்
11. தாஜ்மஹால் எந்த ஆற்றங்கரையில் உள்ளது...? ... ... யமுனை / கங்கை
12. உலக சுகாதார ஸ்தாபனம் எங்குள்ளது...? ... ... ... ஜெனீவா / பாரிஸ்

பெயர்:- ..............................................
விலாசம்:- ..............................................
..............................................

பொது அறிவுப்போட்டி இல: 39
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——————— இங்கே வெட்டுக ———————

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 16 - 05 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# உடலில் உள்ள நோய்களை காட்டிக் கொடுக்கும் கைகள்!

சில மருத்துவர்கள் தம்மிடம் வரும் நோயாளர்களிடம் பேசிக்கொண்டே அவர்களுடைய கைகளைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

கைகள், உடலில் உள்ள கோளாறுகளைக் காட்டும் கண்ணாடிகள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

நோயாளியின் உடல் நிலையை மட்டுமின்றி மன நிலையையும் கைகள் பிரதிபலிக்கின்றன.

ஒரு மனிதன் பேசும் போது சொல்லுவதை விட அவனது கைகள் மூலம் அதிக அளவு விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

### விரல்களின் தோற்றம்

மனிதன் தனது மன இறுக்கத்தைக் கைகளைப் பிசைவதன் மூலம் வெளிப்படுத்துகிறான்.

பெண்கள் தமது அகம் பாவத்தையும் தற்பெருமையையும் கைகளில் அணிந்துள்ள நகைகள்மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

ஒருவர் அரைகுறையான சம்மதத்துடன், 'சரி; அப்படியே செய்கின்றேன்' — என்று வாயால் சொல்லும் போது, அவர் அப்படிச் செய்யப் போவதில்லை என்பதை அவருடைய கைகள் காட்டி விடும். பெரும்பாலான விபத்துக்களில் கைகள்தான் சேதப்படுகின்றன.

கைகள், கைவிரல் நகங்களின் தோற்றத்தில் இருந்து உடல் நிலை ... விஷயங்களைக் கண்டுபிடிக்க முடியும்.

> கைகள், உடலில் உள்ள கோளாறுகளைக் காட்டக் கூடியவை.
>
> ஒருவருக்கு நுரையீரல் கோளாறு உள்ளதைக் கைவிரல் நுனிகளை வைத்துக் கண்டுபிடித்தார் ஒரு டாக்டர். மற்றொரு டாக்டர், ஒரு பெண்ணுக்கு மூட்டுவாதம் உள்ளதைக் கைகளை வைத்தே கண்டு பிடித்தார்.

### நோயைக் காட்டிய விரல்கள்

ஒரு நோயாளி ஒரு மருத்துவரிடம் சென்று தனக்குள்ள வியாதிகளைப் பற்றி விளக்கத் தொடங்கினான்.

'அதெல்லாம் கிடக்கட்டும். முதலில் உங்கள் நுரையீரலில் கோளாறு இருக்கிறது. உடனே ஒரு நுரையீரல் நிபுணரிடம் செல்லுங்கள்'— என்று மருத்துவர் சொல்லி விட்டார்.

அவருக்கு அது எப்படித் தெரிந்தது?

அந்த நோயாளியின் கைவிரல் முனைகள் ஒரு குமிழைப்போல் பெருத்திருந்தன. அதை குண்டாந்தடி விரல் (Club Finger) என்பார்கள். நகங்களில் மங்கலான நீல நிறமும் காணப்பட்டது.

அதுபோலக் குழந்தைகளுக்கு இருந்தால் அவற்றின் இருதயத்தில் பிறவிக் கோளாறு என்று ஊகித்து விடலாம்.

பெரியவர்களுக்கு அப்படியிருந்தால் நுரையீரலில் எம்பிசீமா (Emphysema) போன்ற ஒரு தீவிரமான கோளாறு அல்லது சில சமயங்களில் புற்றுநோய் இருப்பதாக அர்த்தம். இவ்வித அறிகுறிகள் மூலம் அந்த நோயாளிக்கு நுரையீரல் புற்றுநோய் என்று கண்டறியப்பட்டுள்ளது.

உடலின் எல்லா உறுப்புக்களுமே ஏதாவது ஒரு சமயத்தில் மற்ற உறுப்புக்களில் உள்ள கோளாறுகளைச் சுட்டிக்காட்டவே செய்கின்றன.

ஆனால், கைகளில் இருந்து அதிக அளவிலான விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

கையில் மேற்பரப்பு, கீழ்ப்பரப்பு, தோல், நகங்கள், தோல் மடிப்புகள், ரேகைகள், 27 எலும்புகள், மூட்டுகள், கொழுப்புத் திசுக்கள், தசைகள், இணைக்கும் இழைத்திசுக்கள், இரத்தக் குழாய்கள், நரம்புகள், நிணநீர் அமைப்பு (Bymphatic System) ஆகிய பல பகுதிகள் உள்ளன.

இவற்றில் எதுவும் உடலின் கோளாறுகளைச் சுட்டிக் காட்டமுடியும்.

கைகளின் நிறம் மாறுவது ஒரு முக்கியமான அறிகுறி.

உள்ளங்கைகளில் அசாதாரணமான மஞ்சள்நிறம் காணப்பட்டால், இரத்தத்தில் கொலஸ்ட்ரோலும் ட்ரைகிளிசரைடுகளும அதிக அளவில் சேர்ந்து இருதய இரத்தக் குழாய்க் கோளாறுகளுக்கு அடிகோலும்.

உடலின் மறு கோடியில் உள்ள உறுப்புக்களில் உள்ள கோளாறுகளைக் கூட கைகள் தெரிவிக்கும்.

ஒரு நோயாளியின் கைகள் அளவுக்கு மீறிச் சிவந்து இருந்தால் பல்மார் எரிதிமா (Pulmar Erythema) என்ற கோளாறு இருக்கலாம் என்று மருத்துவர் சந்தேகப்படுவார்.

கருவுற்ற பெண்களுக்கு உள்ளங்கை சிவந்திருப்பதுண்டு. ஆனால், மற்றப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் உள்ளங்கை அளவுக்கு மீறிச் சிவப்பாக இருந்தால் ஈரலில் சிரோஸிஸ் (Cirhosis) என்ற கோளாறு இருப்பதாக ஊகிக்கலாம்.

ஒரு மருத்துவர் ஒரு பெண்ணின் கையைக் குலுக்கிய போதே அவளுக்கு மூட்டுவாதம் (Rheumatosd Arthritis) தொடக்க நிலையிலிருப்பதாகக் கண்டு பிடித்தார். அவளுடைய பிடி வலுவில்லாமலிருந்ததையும், உள்ளங்கை லேசமாக ஈரமாகவும், மெல்லிய தோல் உள்ளதாகவும், கதகதப்பாயுமிருந்ததை வைத்து அவர் அதைக் கண்டு பிடித்தார்.

### வெள்ளைப் புள்ளிகள்

விரல் நகங்களில் வெள்ளைப் புள்ளிகள் இருந்தால் இரத்தத்தில் ஏதோ குறை. நகம் வெளுத்திருந்தால் இரத்தச் சோகை. இவ்வாறு விட்டமின் அல்லது ஹோர்மோன் பற்றாக்குறையில் இருந்து தீவிரமான இதயம் மற்றும் சிறுநீரகக் கோளாறுகள் வரை கைகளில் தமது பாதிப்பைக் காட்டுகின்றன.

கைநகங்களில் ஏற்படும் உருமாற்றங்களைக் கொண்டே பல நோய்களைக் கண்டு பிடிக்கமுடியும்.

### ஆயுள் ரேகையா?

கைரேகைகளே உங்கள் வியாதிகளைப் பற்றித் தெரிவிக்கமுடியும்.

ஒரு மருத்துவர் தனது மகனின் கைவிரல்களைத் தொட்டுப் பார்த்து விட்டு, 'மகனே! சிகரெட் பிடிக்கிறாயா?' —என்று கேட்டார்.

'சத்தியமாக இல்லையப்பா.'

'நீ பொய் சொல்லலாம். உன் விரல்கள் பொய் சொல்லாது. உன் விரல்களில் நிக்கோட்டினால் ஏற்படும் மஞ்சள் கறையில்லாமல் இருக்கலாம். ஆனாலும், உன் கைவிரல் நுனிகள் ஜில் என்று இருக்கின்றன.

புகை பிடிப்பதால் விரல் நுனிகளில் உள்ள இரத்தக் குழாய்கள் அடைபட்டுப் போவதால் அவ்வாறு ஏற்படுகிறது. சிகரெட் உன் உடலைப் பாதிக்கத் தொடங்கி விட்டது. நான் சொல்வதை நீ கேட்காவிட்டாலும், உன் விரல்கள் சொல்வதையாவது கேள்' — என்றார் தந்தை. ★

வைத்திய சஞ்சீவி

## வாழுங்கள் எம்முடன்!

தியாகிகளே!
நீங்கள்
நட்சத்திரங்களாக
வானத்தில் குடியேறி
விட்டீர்களே!
எம்முடன் இறங்கி
வந்து வாழுங்கள்,
வரப்போகும்
சுதந்திர ஈழத்தில்!

- ஆதி -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எட்டுக்கால் 'ரோபோ' மனிதன்

● எட்டுக் கால்கள் கொண்ட 'ரோபோ' இயந்திர மனிதர்களும் நடமாடத் தொடங்கிவிட்டனர்.

அவை மேற் கூரைகளிலும் சுவர்களிலும் நடக்கின்றன.

அவற்றில் நான்கு கால்களால் வேகமாகச் சுவரில் ஏறவும், மற்ற நான்கு கால்களால் முன்னோக்கி நகரவும் செய்கிறது.

இந்த இயந்திர மனிதனை ரஷ்யாவில் உள்ள அறிவியல் கல்லூரி ஒன்று உருவாக்கி உள்ளது.

மிகப் பெரிய எரிகலன்களைச் சோதனை செய்யவும், கப்பலின் உடற்பகுதி மற்றும் அடிப்பாகங்களைச் சுத்தம் செய்யவும் செய்கிறது. வீட்டுக்கு வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளையும் இந்த இயந்திர மனிதன் செய்கிறது. ★

## ஒன்றுக்கும் உதவாதவன்

● ஒன்றுக்கும் உதவாதவன் என்று யாரைச் சொல்லலாம்?

ஜேர்மன் நாட்டுப் பழமொழி ஒன்று இதற்குப் பதில் கூறுகிறது.

'தானும் கட்டளை இடமாட்டான். பிறரின் கட்டளைக்கும் கீழ்ப்படியமாட்டான்.

இவன் தான் ஒன்றுக்கும் உதவாதவன்' ★

## கடவுள் எங்கே இருக்கிறார்?

□ 'கடவுள் எங்கே இருக்கிறார்?' —என்று கேட்டான் நாத்திகன்.

'அவர் உன் நாக்கிலே இருக்கிறார்!' — என்றான் ஆத்திகன்.

'அப்படி என்றால் என் நாக்கை வெட்டிவிடுவேன்!

'உன் கையிலும் இருக்கிறார்.'

'என் கையையும் வெட்டிவிடுவேன்'

'உன் தலையிலும் இருக்கிறார்'

'தலையைக் கழற்றி கீழே வைத்துவிடுவேன்'

'உன் பணப்பெட்டியில் இருக்கிறார்'

'அப்படி என்றால் அவரை நான் பத்திரமாகப் பாதுகாப்பேன்.

— கண்ணதாசனின் குட்டிக் கதைகளிலிருந்து.

## மாய உலகை உணர்த்தும் விபூதி

□ சிவனை வழிபடுபவர்கள் திருநீற்றையும், விஷ்ணுவை வழிபடுபவர்கள் திருமண்ணையும் இட்டுக்கொள்கிறார்கள். அது எதற்காக?

விபூதி – அதாவது திருநீற்றுக்கு செல்வம் என்ற ஒரு பொருளும் உண்டு. லட்சுமி குடிகொண்டிருக்கும் பசுவின் சாணத்தை தீயிலிட்டு பஸ்பமாக்கி விபூதி தயார் செய்யப்படுகிறது.

உடலை மட்டுமன்றி ஆத்மாவையும் சுத்தப்படுத்தவல்லது இது. பரமாத்மாவே மகாபஸ்பம்தானே.

எனவே விபூதியான பஸ்பத்தை அணிவதால் பரமன் அருள் கிட்டும்.

ஞானத்தீயில் கர்மாக்கள் அழிந்தபின் எஞ்சியிருக்கும் நீறைக் குறிப்பது விபூதி.

இறுதியில் எல்லாருமே பிடி சாம்பலாகப் போகிறவர்கள் தான்.

வாழ்க்கையின் மாயத் தன்மையை உணர்த்துகிறது விபூதி. மண்ணிலே தோன்றிய எல்லாமே மண்ணில் தான் மடிகின்றன.

இதை உணர்த்தவே வைணவர்கள் திருமண் அணிவது.

—சந்திரசேகரேந்திர சரஸ்வதி சாமிகள்.

## எவரெஸ்டில் ஏறப்போகும் முதல் நடிகர்

● இங்கிலாந்தைச் சேர்ந்த 53 வயது நடிகர் பிரியான் பிலிஸ்ட்.

உலகத்திலேயே உயரமான எவரெஸ்டு சிகரத்தின் உச்சியில் ஏறி சாதனை புரிவது தான் லட்சியம் என்று அறிவித்து இருக்கிறார் இவர்.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி வெற்றிபெறப்போகும் முதல் நடிகர் நான்தான்''— என்று கூறியுள்ள இவர், தான் சானியா நாட்டில் உள்ள 19 ஆயிரத்து 650 அடி உயர கிலிமாஞ்சாரோ மலை உச்சியை அடைந்து சாதனையை இவர் படைத்துள்ளார். ★

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## நறுமணம் வீசும் சுரங்க ரயில்கள்

● லண்டனில் ஓடும் சுரங்க ரயில்களில் நறுமணம் வீசுகிறது.

இதற்கான ஏற்பாட்டை லண்டன் ரயில்வே நிர்வாகம் செய்துள்ளது.

அங்கு சுரங்க ரயில்களில் ஆண்டு ஒன்றுக்கு அறுபது லட்சம் பயணிகள் செல்கிறார்கள்.

இந்த ரயில்கள் சுரங்கப் பாதைக்குள் செல்லும்போது பயணிகள் துர்நாற்றத்தை அனுபவிக்கும் கட்டாயம் உள்ளது.

எனவே பயணிகளை இந்தச் சங்கடத்தில் இருந்து மீட்டு மகிழ்ச்சி ஏற்படுத்துவதற்காக இந்த ரயில்களில் வாசனைத் திரவியங்களை வைத்து மணம் கமழும் ரயில்களாக மாற்றியிருக்கிறார்கள்.

ரயிலின் ஒவ்வொரு இருக்கையின் பின்னாலும் மணம் கமழும் சென்ட் தெளிக்கப்பட்ட கடதாசி பக்கட் மறைத்துவைக்கப்பட்டுள்ளது. ★

## யார் திருடன்? காந்திஜி பதில்

● யார் திருடர்கள்?

ஒருவருடைய அனுமதியில்லாமல் அவருடையதை எடுத்துக்கொள்வது உண்மையில் திருட்டே.

ஆனால் ஒரு பொருளை இரவலாகக் கொடுப்பவர் விரும்பியதற்கு மாறான காரியத்திற்கு அதை உபயோகிப்பதும் அவருடன் நிர்ணயித்துக்கொண்ட காலத்



திற்கு அதிகமாக அதை உபயோகிப்பதும்கூடத் திருட்டுத்தான்.

உண்மையில் தனக்கு அவசியமான குறைந்த பட்சத்திற்கு அதிகமாய்ப் பயன்படுத்திக்கொள்பவர்களும் திருட்டுக் குற்றத்தைச் செய்பவர்களே ஆவர்.

இப்படிக் கூறியிருப்பவர் அண்ணல் காந்தியைத் தவிர வேறுயாராக இருக்கமுடியும்! ★

## சாப்பிட்'டீ'ர்களா?

● அமெரிக்க நாடுகளில் முதன்முதலாக தேநீர் (டீ) அறிமுகப்படுத்தப்பட்ட போது, அங்கே அனைவரும் தேனீர் சாப்பிட்டார்கள்.

ஆமாம்! அவர்கள் குடிக்கவில்லை.

தேயிலையைக் கொதிக்க வைத்துவிட்டு, பிறகு தண்ணீரை வெளியே கொட்டிவிடுவார்கள்.

பிறகு சக்கையில் சர்க்கரை கலந்து கரண்டியால் எடுத்துச் சாப்பிடுவார்கள்.

அதன்பின்னர் தான் சக்கையை எறிந்துவிட்டு தேநீரைக் குடிக்கத்தொடங்கினார்கள். ★

## 'மெட்டி'யில் உள்ள இரகசியம்!

● மெட்டி அணிவது எதற்கு?

இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

ஆனால் 'அர்த்தமுள்ள நம்பிக்கைகள்' என்ற நூலில் பின்வரும் காரணம் கூறப்பட்டுள்ளது:

'கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் மெட்டி அணிவதால் அவ்விரலின் நுனியில் வந்து முடிவடையும் கருப்பையின் நரம்பு நுனிகள் நடக்கும்போது அமுக்கப்பட்டு கருப்பையின் வளர்ச்சிக்கு உதவுகிறது'. ★

## யாருக்கு கற்பனை அதிகம்?

★ ஆண்களை விட பெண்களுக்குக் கற்பனை அதிகம்.

ஆண்கள் பார்வையைப் பெற்றுள்ளனர். பெண்கள் உள்ளுணர்வைப் பெற்றுள்ளனர்.

ஆணுக்கு மனம் பளிங்கு. பெண்ணுக்கு மனம் மெழுகு. ★

## உலகமே அறியாத பழங்குடியினர்

● 350 ஆண்டுகளாக உலகில் என்ன நடந்தது, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியாத நிலையில் வாழ்ந்துவரும் பழங்குடி ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இப்பழங்குடியைச் சேர்ந்த 250 பேருக்கு அதிகமானோர் சீனாவின் வடமேற்குப் பகுதியில் ஷிஜியான் டேக்கிள் மகன் பாலைவனப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். ★

## ஊனமுற்றோருக்கு உதவும் தொலைபேசி

★ மேற்கு ஜேர்மனியில் ஊனமுற்றோருக்காக பிரத்தியேக தொலைபேசிக் கருவி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்துபவர்கள் ஒரு குச்சி போன்ற சாதனத்தைத் தனது வாயில் பொருத்திக் கொள்ள வேண்டும். பின்னர் அதன் வழியே காற்றை உள்ளுக்குள் இழுத்து, வெளியே விடுவதன் மூலம் தனக்குத் தேவையான எண்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ★

## மனம் தூய்மை பெற பணி செய்க!

□ உடன் வாழும் உயிர்களில் ஏதாவது ஒன்றுக்காவது உன்னால் மன மகிழ்ச்சியைக் கொடுக்கமுடியுமானால் உன் வாழ்க்கையின் லட்சியம் நிறைவேறிவிட்டது என்று பொருள்.

இறைவனை நேசிப்பதில் துன்பம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

சோம்பலினால் உடல் மட்டுமல்ல, மனமும் கெட்டுவிடுகிறது.

ஒருவனால் ஒரு நாளின் இருபத்திநான்கு மணி நேரத்தையும் பிரார்த்தனையில் செலவழிக்கமுடியாது.

எனவே, அவன் மற்ற நேரத்தைப் பணி புரிவதில் செலவிட்டால் அதுவே மனம் தூய்மையடைய வழி வகுக்கிறது.

— ஸ்ரீசாரதாதேவியார்.

## மன அழுத்தம் நீங்க . . .

□ மன அழுத்தத்தினால் அவதிப்படுகிறீர்களா?

ஒருநாள் நித்திரையைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். மன அழுத்தம் போய்விடும் என்று அமெரிக்க உளவியல் நிபுணர்கள் அறிவித்திருக்கின்றனர்.

அமெரிக்க உளவியல் சஞ்சிகையில் இந்த ஆய்வு வெளியாகியுள்ளது.

இந்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளரில் 59 சத வீதமானோர் பலனடைந்தனர்.

கடந்த 21 ஆண்டுகளாக ஆயிரத்து 700க்கு அதிகமானோர் மீது 61 தடவைகள் இந்த ஆய்வு நடத்தப்பட்டதில் இந்த முடிவு தெரிந்தது.

ஒரு நாள் நித்திரைகொள்ளாமல் இருப்பதால் மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். ★

## இஸ்ரவேலுக்கு முதலிடம்

□ அமெரிக்காவிடமிருந்து இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை அதிகமாக பெறும் 10 நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை இஸ்ரவேல் வகிக்கிறது.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் நியூஸ்வீக் சஞ்சிகை இந்த தகவலை வெளியிட்டிருக்கிறது.

அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் பத்து நாடுகளின் பெயர்களும் கிடைக்கும் நிதி (டொலர்) உதவியும் வருமாறு:

இஸ்ரவேல் – 298கோடி
எகிப்து – 237 கோடி
பாகிஸ்தான் – 58 கோடி
துருக்கி – 51 கோடி
பிலிப்பீன்ஸ் – 35 கோடி
கிரீஸ் – 34 கோடி
எல்சல்வடோர் – 32கோடி
ஹொண்டுராஸ் – 21கோடி
பொலிவியா – 13 கோடி
பங்களாதேஷ் – 13 கோடி ★

# கண்ணுக்குத் தெரியாமல் ஓடும் 'சரஸ்வதி' நதி; விஞ்ஞானிகள் கண்டுபிடித்த புதிய தகவல்!

★ கண்ணுக்குத் தெரியாமல் 'ஓடும்' சரஸ்வதி நதி பற்றி புதிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

கங்கை, யமுனை நதிகளுடன் கண்ணுக்குப் புலப்படாமல் ஓடும் சரஸ்வதி நதி வட இந்தியாவில் அலஹபாத்தில் சங்கமமாவதாகக் கூறப்படுகிறது.

இந்த இடம்தான் திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது.

வேதங்களில் குறிப்பிடப்படும் சரஸ்வதி நதி இன்றும் ராஜஸ்தான் பாலைவனத்துக்கு அடியில் கண்ணுக்குப் புலப்படாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

1979 இல் புவியியல் ஆய்வாளர் பிமல்கோஷ் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு சரஸ்வதி நதியின் மார்க்கத்தைக் கண்டு பிடித்தனர். தற்போது அந்த நதி பாயும் படுகை முழுவதையும் கண்டு பிடித்துள்ளனர்.

சரஸ்வதியின் போக்கு ராஜஸ்தானில் முழுவதுமாகக் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் இமயமலைப் பகுதியில் உள்ள பனியாறுகளின் நீர்ப்பிடிப்புப்பகுதிகளுடன் இந்த நதிக்குத் தொடர்பு உண்டு என்று அறிய வந்துள்ளது.

தட்பவெட்ப நிலைக்கு ஏற்பவும் பூமியில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள் காரணமாகவும் சரஸ்வதி நதி, இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பாகிஸ்தான் எல்லை ஓரமாக தனது போக்கைப் பலமுறை மாற்றிக் கொண்டுள்ளது.

சரஸ்வதிநதியின் போக்கைக் கண்டுபிடிக்க விமானத்தில் இருந்து படங்களும் எடுக்கப்பட்டன.

வேதங்களில் குறிப்பிடப்படும் வேறு சில நதிகளும் இந்தப் பகுதியில் ஓடுகின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட நதிகளில் 'அபயா' என்ற நதியும் ஒன்று ஆகும் என்று கூறப்படுகிறது. ★

## குழந்தையைத் தாலாட்ட தாயை எழுப்பும் கடிகாரம்!

★ நள்ளிரவு.........

குழந்தை வீரிட்டு அலறுகிறது.

தாய் அயர்ந்து தூங்குகின்றாள். குழந்தை அழும் சத்தம் தாயின் காதுகளின் விழவில்லை.

செவிப்புலனற்ற தாய் என்றால்......... யாரும் தட்டித் தான் தாயை எழுப்ப வேண்டும்.

மேலை நாட்டினர் இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண சிந்தித்தனர். இறுதியில் ஒரு வழி கண்டு விட்டனர்.

புதிய கைக்கடிகாரம் ஒன்றை மேற்கு ஜேர்மன் தயாரித்துள்ளது.

தாய் இக்கைக்கடிகாரத்தை அணிந்து கொண்டு தூங்கச் செல்லலாம்.

குழந்தை படுத்திருக்கும் தொட்டிலிலோ அல்லது குழந்தையின் உடம்பிலோ பொருத்திக் கொள்கிற மாதிரி ஒரு சிறு கருவியை இந்தக் கடிகாரத்துடன் வழங்குகிறார்கள்.

அந்தக் கருவி குழந்தையின் சிறு சத்தத்தையும் உடனே அந்தக் கடிகாரம் அணிந்திருக்கும் தாயின் உடலில் அதிர்ச்சியாக சமிக்ஞை செய்கிறது.

உடனே தாயின் தூக்கம் கலைகிறது. குழந்தையைக் கவனிக்க தாய் எழுந்து செல்கிறாள்.

செவிப்புலனற்ற தாய்க்கு இந்தக் கடிகாரம் ஒரு வரப்பிரதாசம் என்றே கூறப்படுகிறது. ★

## நகைச்சுவை

நீதிமன்றத்தில் சலசலப்பு நிலவுகிறது.

நீதிபதி: அனைவரும் அமைதியாக இருக்கவேண்டும். இனிச்சத்தம் போடுபவரை நீதிமன்றத்திலிருந்து வெளியேற்றிவிடுவேன்!

எதிரி கூண்டில் நின்றபடி

எதிரி: (பலத்த சத்தத்துடன்) 'அதுதான்சரி, செய்யுங்கள்'

நீதிபதி: (தலையைச்சொறிகிறார்.) ★

## 'ஹரே கிருஷ்ணா' இயக்கத்துக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை!

□ அமெரிக்காவில் உள்ள கிருஷ்ணர் கோயில்களை எல்லாம் ஏலத்தில் விற்பனை செய்யும் அங்குள்ள ஒரு நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

ஐந்து ஊர்களில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள இந்தக் கோயில்கள், ஹரே கிருஷ்ணா இயக்கத்துக்குச் சொந்தமானவை.

இந்த உத்தரவால், இந்த இந்துமத இயக்கத்தை அடியோடு ஒழிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்குக் காரணமான ச்ம்பவம் வருமாறு;

ஒரு 15 வயது அமெரிக்கப் பெண், வீட்டைவிட்டு வெளியேறி, கலிபோர்னியோவில் உள்ள கிருஷ்ணன் கோயிலில் தஞ்சம் புகுந்தாள்.

'எனக்குக் கிருஷ்ணனை மிகவும் பிடிக்கும். உங்கள் கீதங்ககளும் பிடிக்கும். ஆனால் வீட்டில் கிருஷ்ணனைக் கும்பிடவும், கீதம் பாடவும் அப்பா, அம்மா தடுக்கிறார்கள்'— என்று அழுதாள்.

அடுத்தமாதம் பெற்றோர் மகளை அழைத்துச் சென்றனர். மறுநாள் மகள் மீண்டும் கிருஷ்ணர் ஆலயத்துக்கு ஓடினாள். கோயில் நிர்வாகமே அவளை இரண்டாவது முறை வீட்டுக்குத் திருப்பி அனுப்பியது.

உடனே அவள் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தாள்.

அவள் தனது மனுவில்,

'நான் 15 வயது பராயமற்ற பெண். என் பெற்றோர் அனுமதியின்றி ஹரே கிருஷ்ணா இயக்கம் என்னை சட்டவிரோதமாக அடைத்து வைத்து, கிருஷ்ணா பற்றி உபதேசம் செய்து, மூளைச் சலவை (பிரெய்ன் வாஷ்) செய்து புத்தி தடுமாற வைத்து விட்டனர். இதற்காக 50 லட்சம் டாலர் நட்ட ஈடு தர வேண்டும்'— என்று கூறியிருந்தார்.

கலிபோர்னியா நீதிபதி வழக்கை விசாரித்து, பெண்ணின் வாதத்தை ஏற்று நட்ட ஈடு கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

கிருஷ்ணா இயக்கம் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் தீர்ப்பு சரியல்ல என்றும் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்தது.

'பணம் இல்லையா? கிருஷ்ணர் கோயில்களை ஏலத்தில் விட்டு நட்ட ஈட்டைக் கொடுக்கவும்'— இப்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த அறிவிப்பால் அமெரிக்க இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ★

## அகநானூறு ஆராய்ச்சியில் சோவியத் தமிழறிஞர்!

□ சோவியத் அறிஞரான டாக்டர் அலெக்ஸாண்டர் துபியான்ஸ்கி தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்திருக்கிறார்.

பழந்தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்டிருக்கிறார்.

அகநானூறு இலக்கியத்தில் முல்லைத் திணையை ஆய்வுக்காக இவர் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

அத்துடன், தமிழரின் கலாசாரப் பின்னணியுடனும் சடங்குகளுடனும் புராண வாழ்க்கையுடனும் உள்ள தொடர்புகளை ஆய்வுசெய்து இவர் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார்.

அந்தப் புத்தகத்தின் பெயர் 'பழந்தமிழ்ப் பாடல்களில் சடங்கு மற்றும் புராண இலக்கிய வேர்கள்' —என்பதாகும்.

அண்மையில் தமிழ்நாடு சென்றிருந்த இந்த சோவியத் தமிழறிஞர் டாக்டர் துபியான்ஸ்கி, தமிழ்த் தென்றலை சுவாசிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்' —என்றார். ★

## ஆணவ அழுக்கு நீங்க ராமானுஜர் கூறும் வழி

□ ராமானுஜருக்கு. முதுமைக்காலத்தில் நதியில் நீராடச் செல்லும்போது யாராவது ஒருவருடைய தோளைப் பிடித்துக் கொண்டு தான் போய்வர வேண்டியிருந்தது.

நீராடப் போகும் போது பிராமணச் சீடர் ஒருவரின் தோளைப் பிடித்துக்கொண்டு நடந்து செல்வார்.

நீராடி வீட்டுக்குத் திரும்பும் போது செருப்புத் தைக்கும் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சீடனின் தோளைப் பற்றியபடி நடந்து வருவார்.

இதைப் பார்த்த சிலர், ''சாமி நீராடிய பிறகு தாழ்ந்த ஜாதிக்காரர்களைத் தொடுகிறீர்களே நீராடி என்ன பயன்?'' என்று ராமானுஜரிடம் கேட்டனர்.

ராமானுஜர் அதற்குப் பதிலாக —

''அகங்காரமே தலை தூக்காமல் அழிக்க வேண்டும் என்று உபதேசம் செய்கிறவன் தானே அகங்காரம் சிறிதும் இல்லாதவனாக இருக்க வேண்டும். நீராடுவதனால் என் உடம்புஎன்னவோ சுத்தமாகிறது. 'நான் உயர்ந்தவன்' என்ற ஆணவ அழுக்கு உள்ளத்திலிருந்து நீங்குவதற்காகவே இவ்வாறு செய்கிறேன்' என்றார். ★

## ஐந்து ஆண்டுகளாக வானில் வலம் வரும் 'மிர்' விண்கலம்

□ சோவியத் நாட்டின் 'மிர்' விண்வெளி ஆய்வு நிலையம் 1500 நாட்களுக்கு மேலாக விண்வெளியில் சுழன்றவாறு இயங்கிக்கொண்டிருக்கிறது.

அதன் முக்கிய பகுதியின் இயக்கக்கட்டுப்பாட்டு முறையையும், விண்கலப் பெட்டகங்களையும், விண்வெளி வீரர்கள் அனத்தோலி சலவியேவும், அலெக்சாந்தர் பலான்டினும் அண்மையில் சோதனை செய்து பார்த்தனர்.

திட்டப்படி, உடல் உழைப்பின் பளு விண்வெளி வீரர்களின் இதயத்தின் பணியை எவ்விதம் பாதிக்கிறது என்பதைக் கண்டறியும் மருத்துவ சோதனைகளை அவர்கள் நடத்தினார்கள்.

'மிர்' ஆய்வு நிலையத்தின் புதிய இயந்திரங்களைப் பொருத்தியதுடன், அறிவியல் சோதனைகளையும் விண்வெளி வீரர்கள் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இவான்ட்— 2 என்ற விண்வெளிப் பெட்டகத்தின் வெளியே பொருத்தப்பட்டுள்ள பல்வேறு பொருள்களின் பெளதிக பண்புகளின் மீது விண்வெளி செலுத்தும் தாக்கத்தை அறிந்து கொள்வதற்காக அவர்கள் பல அறிவியல் சோதனைகளைச் செய்கிறார்கள்.

காற்று மண்டலத்தின்மேல் பகுதிகளையும், அயன மண்டலத்தையும் அவர்கள் ஆய்வு செய்வார்கள்.

விண்வெளி வீரர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளனர் என்பதை மருத்துவப் பரிசோதனைகள் காட்டுகின்றன. ★

## சாம்பிராணி புகைப்பது இயற்கை வைத்தியமே!

● சாம்பிராணி புகை பிடிப்பது இயற்கை வைத்தியங்களில் ஒன்றாகும்.

சாம்பிராணியில் உள்ள பென்சோயிக்(Benzoic Acid) ஒரு சிறந்த கிருமிநாசினி ஆகும்.

இந்த Trincture Benzoinc தலையில் உள்ள பேன்களைப் போக்குவதுடன், சைனஸ், சளி, நெஞ்சுத்தடிமன் வராமல் தடுக்கிறது.

எல்லா மதத்தினரின் வழிபாட்டுத் தலங்களிலும் சாம்பிராணிப் புகை காட்டப்படுவதன் முக்கிய நோக்கமே சாம்பிராணியில் உள்ள நோய்த்தடுப்பு சக்தியால் தான்.

ஆலயங்களில் கும்பலில் ஏற்படுகிற வியர்வையும் பிராணவாயுக் குறைவும் தலைமுடியை நிச்சயம் பாதிக்கும்.

இவற்றைத் தடுக்க உதவிய சாம்பிராணிப்புகை காட்டும் பழக்கம் இன்று மதச் சடங்குகளில் ஒன்றாகப் பாவிக்கிறோம். காரணத்தை மறந்துவிட்டு காரியத்தை மட்டும் பின்பற்றுகிறோம். ★

## 'காலணி'யாக உதவும் அந்நியமொழி!

□ ஒரு காலத்தில் மூதறிஞர் ராஜாஜி தமிழகத்தில் ஹிந்தி மொழியைப் பரப்ப தீவிரம்காட்டிவந்தார்.

இதனை பலரும் எதிர்க்கத் தொடங்கினர்.

அந்த நிலையில் தமிழறிஞர் ஒருவர் இந்த விஷயத்தில் ராஜாஜி ஏன் அவசரம் காட்டுகிறார் என்பதை அவரிடமே நேரில் பேசி அறியச் சென்றார்.

அச்சந்திப்பு ஒரு பிரமுகரின் இல்லத்தில் இடம்பெற்றது.

[illegible] வேண்டும் என்று வற்புறுத்து கிறீர்களே! [illegible] வுக்கு நமக்குப் பயன் படப் போகிறது?'—

இப்படி அந்தத் தமிழறிஞர் கேட்டார்.

அதற்கு ராஜாஜி—

நாம் வீட்டுக்குள் நடமாடும் போது காலில் செருப்பு அணியத்தேவையில்லை.

ஆனால் வெளியில் செல்லும்போது அவற்றை அணிய அவசியம் ஏற்படுகிறது அல்லவா?

அதேபோல் தமிழகத்தினுள் இருக்கும்போது இந்தியின் பயன்தேவை இல்லை. ஆனால் வெளியே செல்லும் போது அதன் தேவை ஏற்படுகிறது. எனவே நமக்குச் செருப்பாக உதவுகிறது ஹிந்தி என்று எடுத்துக் கொண்டால் என்ன?

இப்படிக் கேட்டார் ராஜாஜி.

விளக்கத்தைக் கேட்ட தமிழறிஞர் வீடுநோக்கி புறப்படலானார்.

வாசல்படிக்கு வந்த தமிழ் அறிஞர் எதையோ தேடினார்.

என்ன தேடுகிறீர்கள்? என்று ராஜாஜி கேட்டார்.

அதற்கு தமிழறிஞர்— 'வேறொன்றுமில்லை. இங்கே நான் கழற்றிப் போட்ட ஹிந்தி மொழியைத் தேடுகிறேன்' — என்றாரே பார்க்கலாம். ★

## 'பிளாஸ்டிக்' பணம்

□ பிளாஸ்டிக் பணம் ஆஸ்திரேலியாவில் வெளியிடப்படவுள்ளது.

காகிதத்தில் பணநோட்டை அச்சிடும் முறைக்கு பிரியாவிடை வழங்க ஆஸி. அரசு முடிவு செய்துவிட்டது.

பரீட்சார்த்தமாக பிளாஸ்டிக் பணத்தை ஆஸி. அரசு வெளியிட்டது.

அது நல்ல பலனை அளித்தது.

எனவே காகிதம் போய் பிளாஸ்டிக் வருகிறது.

'பச்சை' நோட்டு என்ற பெயர் 'பிளாஸ்டிக்'நோட்டு என்றழைக்கப்படும் காலம் வருகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணின் விழிப்புணர்ச்சியில் தான் பெண்ணின் வளர்ச்சி தங்கியுள்ளது

இன்றைய நிலையில் சமூக மாற்றம் என்பது தவிர்க்கமுடியாதது. சமூகத்தில் மாற்றம் ஏற்படவேண்டும் என்றால் மக்கள் மனம் மாறவேண்டும். இல்லை மாற்றப்படவேண்டும்.

அறிந்தோ அறியாமலோ பெண் பல நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளாள். ஆனால் இன்னும் அவள், தான் அடிமை என்பதை உணராமலிருப்பது தான் மிகுந்த வேதனைக்குரிய விஷயம்.

பாரம்பரியம், பண்பாடு என்ற பெயரால் பெண் ஆணுக்கு அடிமையாக இருக்க வேண்டும். அதுதான் இயற்கை நியதி என்று வாதாடும், அப்படி இருப்பதே சமூக வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதும் அர்த்தமற்ற எண்ணங்கள்.

''ஒரு பெண் ஆணைப் போலவே தனித்துவம் வாய்ந்தவள். தனித்திறமை பெற்றவள். அனைத்துப் பணிகளும் செய்வதில் ஆணுக்கு நிகரானவள்''

—இக்கருத்தினை மனிதாபிமானத்துடன் மானுட மேம்பாட்டைக் கருதும் அறிஞர்களும், பெண்ணும் ஆணும் சமத்துவமாக இருந்தால் ஒழிய இச்சமூகத்தில் விமோசனம் இல்லை எனத் தெரிந்து உணர்ந்த சிந்தனையாளர்களும், யாரும் யாரையும் சுரண்டக்கூடாது என்பதைத் தீவிரமாகச் செயற்படுத்த நினைக்கும் முற்போக்காளர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

### மானுடம் வெல்லும்


பெண் இனம் மட்டுமல்ல ஆணினமும் விழிப்புணர்ச்சி பெறவேண்டும். இல்லையேல் ''மானுடம் வெல்லும்'' என்ற சொற்றொடர் அர்த்தமற்றுப்போய் இச்சமூகத்திற்கு விடியல் இல்லை என்றாகிவிடும்.

இச்சமூக பிரச்சினையை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்றால் காரணங்களைக் கண்டறிந்து தீர்வுக்கான செயற்பாடுகளை எண்ணித் துணிவதே நலம் பயக்கும்.

அதற்காக பெண்ணைப்பற்றிய மதிப்பீட்டினைக் கண்டறிவதற்காக மேற்கொண்ட ஆய்வில் சில தகவலாளிகளின் வாயிலாகத் திரட்டப்பட்ட விடயங்களைப் பார்ப்போம்.

பெண் ஒழுக்கமுடையவள், சுமைதாங்கி, தியாகம் செய்பவள், இல்லத்திற்கு பெருமை சேர்ப்பவள், அன்பானவள், பாசம்மிகுந்தவள், இனிய துணைவி, ஆதாரமானவள் போன்ற கருத்துக்களை பெரும்பாலானோர் கூறியுள்ளனர்.

இதன்மூலம் அன்பு, பாசம், பணிவு, பொறுமை, ஒழுக்கம், கற்பு போன்ற பண்புகளை உடையவளாக ஒரு




பெண் இருக்கவேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்பை நாம் புரிந்துகொள்ளலாம்.

பெண் ஆணுக்கு அடங்கியவள், சுதந்திரமாக இயங்க முடியாதவள், சமூகக் காவலுக்குட்பட்டவள்; பலவீனமானவள், பிறரைச் சார்ந்து வாழ்பவள், காப்பாற்றப்பட வேண்டியவள் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பெண் அப்பாவி, கோழை, இரக்கப்படத்தக்கவள், தன் திறமை உணராதவள் என மற்றும் சிலரும்.

பெண் தெய்வம், தெய்வத்திற்கு மேலாக மதிக்கத்தக்கவள், மகாசக்தி மாதவம் செய்தவள், புனிதமானவள், சிறந்த பொக்கிஷம் போன்றவள், உலகின் கண் என இன்னும் சிலரும் போற்றுகிறார்கள்.

பெண் மனித மாண்பற்றவள், மதிப்பற்றவள், காட்சிப்பொருள், ஆடம்பர ஆசை உடையவள், விபச்சாரி, துரோகி என மிகச் சிலரும் தூற்றுகின்றனர்.

### யதார்த்த நிலை

மேற்கண்ட தகவல்களின் படி இன்றைய சமுதாயத்தில் பெண் மிக உயர்ந்த நிலையில் தெய்வமாகவும், தெய்வத்திற்கு மேலாகவும் அதே வேளையில் மிகத் தாழ்ந்த சீரழிந்தவளாக தரம் குறைந்தவளாகவும் மதிப்பிடப்படுகிறாளே தவிர, பெண்ணைப் பெண்ணாக, மனுஷியாகக் காணும் யதார்த்த நிலையை அறியமுடிவதில்லை.

பெண் முன்னேற்றம் பேசி வரும் இன்றைய சமுதாயச் சூழலிலும், கற்றறிந்த அறிஞர்கள், மாணவர்கள், இல்லறமகளிர், அலுவலகமகளிர் போன்ற சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் அங்கம் வகிப்போரிடையேகூட பெண் உரிமை பற்றிய இக்கருத்து மேலோட்டமாகப் பேசப்படுகின்றதேயன்றி, அடிமன உணர்வில் பெண்ணைப் பற்றிய மரபுவழிச் சிந்தனைகளே நிறைந்துள்ளது.

இவர்கள் விழிப்படைவது எப்போது...?

பெண் வீட்டின் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் மட்டும் உரியவள் என்றும், நல்ல தாயாக, நல்ல மனைவியாக அவள் இருந்தால் போதும் என்று நினைக்கிறார்களே தவிர, நாட்டுவளத்துக்கும் வளர்ச்சிக்கும் ஆக்க ரீதியாக தன் பங்கை அளிக்கமுடியும் என்றோ நினைப்பதில்லை.

முற்றுமுழுதுமாக பல நூற்றாண்டு காலமாக அவளை அடிமையாக்கி ஆதிக்கம் செலுத்தப்பட்டது. அதன் பயனைத்தான் இன்னும் நாம் அறுவடை செய்து கொண்டுவருகிறோம். ★

## "தங்கம் என்ற பெயர் வாங்கு"

காலையில் எழுந்திடு தம்பி — அதி
காலையில் எழுந்திடு தம்பி
காலைக்கடன் முடி தம்பி — பின்
கடவுளை வணங்கு நம்பி.
நல்லாடை உடுடா தம்பி — உன்
அன்னை தரவுண் விரும்பி
கல்லூரி செல்வாய் அங்கு — பல்
கலைகள் கற்பாய் நன்கு.
மாலையில் வீடு திரும்பு — துஷ்ட
மாணவர் சேர்க்கை விலக்கு
தங்கம் என்ற பெயர் வாங்கு — பெற்ற
தந்தை தாய் சொற்கிணங்கு.
நல்லவனாய் வாழ்ந்திடு தம்பி — உனை
நம்பியே இருக்குது நாடு!

நகுலராஜா - செந்தூரன்.

# கென்னடியின் வாழ்வில்.....

உலகப் பெருந்தலைவர்களில் மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ். கென்னடியும் ஒருவர்.

இரண்டாவது உலகப் பெரும்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் கென்னடி ஒரு கப்பலுக்கு தலைவனாக இருந்தார். ஓரிரவு, கென்னடியின் கப்பல் கடலைக் கிழித்துச் சென்ற போது ஜப்பானிய நாசகாரிக் கப்பல் ஒன்று அதை ஆழ்கடலிலே தாக்கியது. கென்னடி இருந்த கப்பல் இரண்டாகப் பிளந்தது.

உடனே காப்டன் கென்னடி தன் உயிரைப் பெரிதாகக் கருதாமல் கடல் நீரிலே தத்தளித்த 16 அமெரிக்கர்களுக்கு பாதுகாப்பு அளித்து, அவர்களது உயிர்களை மீட்டார். அவர்களைப் பத்திரமாகக் கரையில் கொண்டு வந்து சேர்த்தார்.

தம்மோடு போர்ப் பணியாற்றியவர்களைகாப்பாற்றுவதற்காக தண்ணீரில் பல மணிநேரம் அலைந்து நீந்தியதால் கென்னடிக்கு களைப்பு மிகுந்தது. இனி நீந்தமுடியாது என்ற நிலை கூடவந்தது.

தமது உயிர் கடல்நீரோடு கலந்தாலும் சரி தம்மோடு பணியாற்றிய 16 உயிர்களைக் காப்பாற்றிவிட்டோம் என்ற திருப்தி அவருக்கு ஏற்பட்டது.

பலநாட்கள் நீரில் நீந்திக் கொண்டே இருந்தார். எதிர்பாராதவகையில் உடைந்து போன கப்பலின் சிதறி விழுந்த ஒரு மரச்சட்டம் கிடைத்தது. அந்தச் சட்டம் தான் கென்னடியின் உயிரைக் காத்து கரைசேர்த்தது. ★




# உலகப் புரட்சிகள்

### இங்கிலாந்துப் புரட்சி (1688)

சுத்தியின்றி, இரத்தமின்றி நடத்தப்பட்ட புரட்சிமூலம் கத்தோலிக்க அரசர்களின் கொடுங்கோல் ஆட்சி அகற்றப்பட்டது. ஆட்சி செய்யப் பாராளுமன்றத்திற்கு முழு உரிமையும் வழங்கப்பட்டது.

### தொழில் புரட்சி (1760 — 1830)

உலகில் முதன் முதலில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் வளர்ச்சியினால் ஐரோப்பிய நாடெங்கும் ஆலைத்தொழில்கள் பெருகின. அதனால் தொழிலாளர் இனம், தொழிலாளர் இயக்கம் ஏற்படவும் வழி ஏற்பட்டது.

### அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் (1775—1783)

அமெரிக்க சுதந்திரப் போர், பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டு வெற்றிபெற வழி வகுத்தது. 1776 இல் பிரிட்டனின் பிடியிலிருந்து அமெரிக்க குடியேற்ற நாடுகள் ஒருங்கிணைந்து தங்களைச் சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்திக்கொண்டன.

அதனால் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே போர் மூண்டது. முடிவில் அமெரிக்கா வென்றது. தோல்விக்குப் பிறகு பிரிட்டன் அமெரிக்காவின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டது.

### பிரெஞ்சுப் புரட்சி (1789 — 1805)

பிரெஞ்சு நாட்டை ஆண்ட 16 ஆம் லூயியை எதிர்த்து, அடிமைகளும் ஏழைகளும் நடத்திய முக்கிய புரட்சியாகும் இது. அவர்கள் அரசர்களையும் பிரபுக்களையும் எதிர்த்து அவர்கள் தங்களிடம் இருந்து பறித்த தங்கள் உடைமைகளையும் உரிமைகளையும் மீட்டார்கள்.

புதிய அரசியலமைப்பைத் தேசிய மன்றம் கொண்டு வந்தது. பிரெஞ்சுக்கு உதவ வந்த பிறநாடுகளின் படைகளும் தோற்கடிக்கப்பட்டன.

அப்போது தளபதியாக இருந்த நெப்போலியன் போனபர்ட் என்னும் மாபெரும் வீரன், 1793 இல் எதிரிப்படைகள் அனைத்தையும் வென்றான்.

அவன் தன்னை பிரெஞ்சுச் சக்கரவர்த்தியாக 1805 இல் முடிசூட்டிக் கொண்டான். பிரெஞ்சு நாட்டையே தன் அறிவாலும், நிருவாகத் திறனாலும் மாற்றி அமைத்தான்.

### விவசாயப் புரட்சி (1760 — 1840)

இதுவும் இங்கிலாந்தில் தோன்றிய புரட்சிதான். இதனால் விவசாயத்திற்குத் தேவையான புதிய கருவிகள், விதைகள், கால்நடைப் பராமரிப்புக்கள், புதியஇன விருத்திகள் தோன்றின. அதனால் வேளாண்மையில் மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டது. இன்று அது உலக அளவில் பரவியுள்ளது,

### சீனப்புரட்சி (1911)

இந்தப் புரட்சி மூலம் சன் யாட்ஸென் என்பவர் சீனாவின் அரசியலையும் பொருளாதாரத்தையும் மாற்றி அமைத்து வளர்ச்சிபெறச் செய்தார்.

இவர் சீனாவில் ஆட்சியிலிருந்த அரச குடும்பத்தை நீக்கி, மக்கள் ஆட்சியை மலரச் செய்தார் இவருக்குப் பின் மாசேதுங் சீனாவைக் கைப்பற்றினார்.

### ரஷ்யப்புரட்சி (1917)

இப்புரட்சி மூலம் ஜார் அரச குடும்பத்தாரின் ஏதேச்சாதிகார ஆட்சி கவிழ்க்கப்பட்டது. பொது உடைமைக் கொள்கை வெற்றிபெற்று நடைமுறைக்கு வந்தது.

எல்லோரும் உழைக்கவேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும் என்னும் தத்துவம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

டால்ஸ்டாய், காரல் மார்க்ஸ், லெனின், மார்க்ஸிம் கார்க்கி, ஸ்டாலின் போன்றோர் இப்புரட்சிக்குக் காரணகர்த்தாக்கள் ஆவார்கள். ★

# யாழ்ப்பாண இந்துக்கட்டடக் கலையை அறிய உதவும் மண்ணித்தலை சிவாலயம்!

ப. புஷ்பரட்ணம் எம். ஏ.
வரலாற்றுத்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

முழுக்க முழுக்க செங்கட்டிகளையும் சுதையையும் கொண்டு கட்டப்பட்ட வெளிப்புற விமானத்தின் உட்புறம் (உச்சியிலுள்ள மூன்றாவது தளத்தைத் தவிர) வட்டமாகவே அமைந்துள்ளது. வெளிப்புறமாக உள்ள இருதளங்களும் சதுரமாகவே காணப்படுகின்றன. உட்புறம் சதுரமாக அமைந்த மூன்றாவது தளத்தின் பகுதி வெளியே வட்டமாகக் கட்டப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் கவனிக்கத் தக்கது.

மூன்று தளங்களையுடைய இவ்விமானத்தின் முதலாவது தளத்தின் உபபீடம் ஏறத்தாழ 11.' 4'' நீள அகலத்தைக் கொண்டது. வளைவான செங்கட்டிகளைக் கொண்டு கீழ் நோக்கிக் கட்டப்பட்டுள்ள இதன் பாகம் ஒவ்வொன்றிலும் வளர்ச்சியடையாத நிலையில் உள்ள ஐந்து கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய இரு விமானத்தளங்களையும் விட இதில்தான் கூடுதலான அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இதில் காணப்படும் குதம், சாலை பஞ்சரம் ஆகிய மூன்று அலங்கார அம்சங்களைத் தமிழ் நாட்டுத் திராவிடக் கலை மரபில் சிறப்பாகக் காணலாம்.

விமானத்தின் கரையோரங்களில் அமைந்துள்ள குதங்களின் கீழ்ப்பாகம் சதுர வடிவிலும், மேற்பாகம் ஸ்தூபி வடிவிலும், இதை அடுத்துக் காணப்படும் ஐந்து சுருள்களையுடைய பஞ்சரங்கள் நட்சத்திர வடிவிலும், நடுவில் அமைந்த சாலை கீழ்ப்புறம் சதுர வடிவிலும் மேற்புறம் முக்கோண வடிவிலும் உள்ளன. குதத்தில் சிறிய தேவகோஷ்டமும் உள்ளன. இதன் சிறிய தூண்கள் கபோத வடிவில் அமைந்துள்ளன.

இதன் இரண்டாவது தளம் 6' அகலத்தையும் 3' உயரத்தையும் உடையன. முதலாவது தளத்திலிருந்து இரண்டாவது தளத்தைப் பிரிக்கும் யாளமட்டம் வளைவான செங்கட்டிகள் கொண்டு கீழ் நோக்கிக் கட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டாவது தளத்தில் அலங்கார வேலைப்பாடுகள் அதிகம் காணப்படவில்லை. ஆயிரம் ஸ்தூபிக்கு கீழே நான்கு பக்கங்களிலும் சிறிய தேவ கோஷ்டங்கள் காணப்படுகின்றன. இதன் மேல் அமைந்த மூன்றாவது தளம் முற்றாகச் சிதைவடைந்து விட்டது. ஆயினும் இரண்டாவது தளத்துக்கு மேலமைந்த மாடந்தாங்கிக் கற்கள் (செங்கட்டிகள்) வட்ட வடிவில் கட்டப்பட்டிருப்பதைக் கொண்டு இதன் ஸ்தூபி வட்ட வடிவில் அமைந்திருந்ததென்பதை நிச்சயப்படுத்தலாம்.

விமானத்தின் கிழக்கு நோக்கிய முன்பக்கம் மேலிருந்து கீழ்ப்பகுதிவரை பெருமளவு சிதைவடைந்திருந்தாலும் எஞ்சியுள்ள ஏனைய பாகங்களில் மேற்கூறப்பட்ட அம்சங்கள் தெளிவாகத் தெரிவதனால் முற்பக்கத்திலும் இவ்வாறான அம்சங்களே இருந்திருக்கவேண்டும் எனக் கருத இடமுண்டு.

மண்ணித்தலை சிவாலய வரலாறு 2

### ஆலயத்தின் தோற்ற காலம்

இதுவரை வெளிவந்த எந்த நூலிலும் இவ்வாலயம் பற்றிக் குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயினும் பொதுப்பட இவ்வாலயத்தின் அமைப்பு, கட்டுவதற்குப் பின்பற்றப்பட்டதொழில்நுட்பம், கலைப்பாணி என்பவற்றை நோக்கும்போது இது மிகப்பழைமையான ஆலயம் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

1882 இல் ஆங்கிலேயர் ஆட்சியில் குறிப்பிடப்பட்ட ஆலயப் பதிவேட்டில் மண்ணித்தலைக்குத் தெற்கே கௌதாரிமுனையில் ஒரு புராதன பிள்ளையார் ஆலயம் 1890 இல் புதிதாகக் கட்டப்பட்டது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு ஆலயங்களுக்கும் இடைப்பட்ட மண்ணித்தலைச் சிவாலயம் பற்றி இதில் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் இக்காலத்தில் இவ்வாலயம் மக்களால் வழிபடப்படாது இடிந்த நிலையில் இருந்ததெனக் கூறலாம்.

அவ்வூர் வயோதிபர்கள் சிலரிடம் இருந்து பெற்ற தகவல்களின்படி இற்றைக்கு நான்கு தலைமுறைக்கு முன்னரும் இவ்வாலயம் இடிந்து போன நிலையில் இருந்ததாக அறிய முடிகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னர் கட்டப்பட்டதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

மணல் மேடுகள் நிறைந்த மண்ணித்தலைப் பிரதேசத்தில் கிடைக்கப்பெறாத முருகைக்கல்லையும் செங்கட்டியையும் கொண்டு இவ்வாலயம் கட்டப்பட்டதை நோக்கும் போது இதற்கான மூலப்பொருட்களும் தொழில்நுட்ப அறிவும் பிறஇடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவை என்று தெரிகின்றது.

### 19 ஆம் நூற்றாண்டில்

பூநகரியுடனான வன்னிப் பிராந்தியத் தொடர்பு இக்கிராமத்துக்கு இருந்தாலும் அங்குள்ள கருங்கற்கள் இவ்வாலயத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்துடனான கடல்வழித் தொடர்பால் அங்குள்ள கற்களை இங்குகொண்டு வந்து 19 ஆம் நூற்றாண்டில் சில ஆலயங்கள் கட்டப்பட்டதற்கு ஆதாரங்களுண்டு. இத[illegible]பும் அவ்வாறு கொ[illegible] பட்டிருக்கலாம் எனவும் கருதஇடமுண்டு.

ஆயினும் இவ்வாலயத்தின் கலைப்பாணி, தமிழ்நாட்டுத் திராவிடக் கலைமரபை அப்படியே பிரதிபலித்து நிற்பதினால் ஆலயம் கட்டுவதற்கான மூலப்பொருட்கள் யாழ்ப்பாணத்திலிருந்தோ அல்லது தமிழ்நாட்டிலிருந்தோ கொண்டு வரப்பட்டிருந்தாலும் இது தமிழ் நாட்டை அக்காலத்தில் ஆட்சி செய்த அரச வம்சத்தின் செல்வாக்கால் கட்டப்பட்ட ஆலயம் என்பது தெரிகின்றது. ஆயினும் இவ்வாலயம் தொடர்பான சாசனமோ அல்லது உறுதியான வேறு ஆதாரங்களோ இதுவரை முழுமையாகக் கிடைக்கப் பெறாத நிலையில் இதன்


ஆலயத்தில் உள்ள சிவலிங்கம்

தோற்ற காலத்தினைத் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கின்றது.

இதனால் இதன் கலைமரபைக் கொண்டும் அக்காலத்தில் [illegible] தொடர்பு கொண்டி[illegible] களுக்குரிய ஆதாரங்களைக் கொண்டும் பொதுவானதொரு முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

இலங்கையில் கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் பின்னரே அழியாப் பொருட்களைக் கொண்டு இந்து ஆலயங்களை அமைக்கும் மரபு வளர்ச்சி பெற்றது. இதற்கு தமிழ் நாட்டுத் தொடர்பே முக்கிய காரணமாயிருந்தது. இந்நூற்றாண்டிலிருந்து பல்லவ, பாண்டியர் ஆட்சியில் அங்கு ஏற்பட்ட பக்தி இயக்கம் இந்துப்பண்பாட்டில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. இதன் விளைவால் மலைகளைக் குடைந்தும், செதுக்கியும் கற்களை அறுத்தும் பல கோவில்கள் கட்டப்பட்டன.

இக்கட்டத்தில் இரு பிராந்தியங்களுக்கும் இடையே நெருங்கிய அரசியல், வர்த்தகத் தொடர்புகள் இருந்ததினால் முற்பட்ட காலங்களை விட தமிழர்களின் குடியேற்றங்கள் இங்கு அதிகரித்தது. இவ்வாறு குடியேறியோர் தமிழ்நாட்டுப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததினால் இலங்கையில் பௌத்த - சிங்கள கலாச்சாரத்துடன் இணையாது தனித்து வாழ முற்பட்டனர். இதன் காரணமாக துறைமுகங்களிலும் முக்கிய நகரங்களிலும் அவர்களின் வழிபாட்டிற்காக சிறிய பல கோயில்கள் பல்லவர் பாணியில் அமைக்கப்பட்டன.

அவற்றுள் அனுராதபுரம், தெவிநுவர, நாலந்தா போன்ற இடங்களில் கட்டப்பட்ட இந்து ஆலயங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர மாந்தை, திருகோணமலை போன்ற இடங்களிலும் இவ்வாறான ஆலயங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

### பல்லவர் ஆட்சி

பல்லவர் ஆட்சியைத் தொடர்ந்து 10 ஆம் நூற்றாண்டில் சோழர், தமிழ் நாட்டில் எழுச்சியடைந்த போது இருநாடுகளுக்கும் இடையிலான உறவு முன்னரிலும் பார்க்க அதிகரித்தது. இந்நூற்றாண்டில் இருந்து இலங்கை மன்னர்கள் பலரும் சோழருக்கு எதிராக நடந்து கொண்டதினால் தென்னிந்திய வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னரும் சோழர் இலங்கை மீது படையெடுத்தனர். இத்தகைய ஒரு பின்னணியிற்றான் முதலாம் பராந்தகன் (கி. பி. 907 – 955), சுந்தர சோழன் (கி.பி. 956 – 973), முதலாம் இராசராசன் (கி. பி. 985 – 1016), முதலாம் இராஜேந்திரன் (கி. பி. 1012 – 1044) ஆகியோரின் ஆட்சியில் படையெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராஜராஜன், இராஜேந்திரன் ஆகியோரின் காலத்தில் அனுராதபுர அரசு கைப்பற்றப்பட்டு தலைநகர் ஜனநாதமங்களம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டு சோழ நிர்வாகத்தில் 77 ஆண்டுகள் மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயருடன் ஆளப்பட்டது.

இதனால் பல்லவர் காலத்தைவிட இவர்கள் ஆட்சியில் சோழநிர்வாகிகள், படைவீரர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிராமணர்கள் போன்ற பல்வேறு பிரிவினர்கள் இலங்கையின் முக்கிய பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு குடியேறியோர் பல்லவர் காலத்தை விடக் கூடுதலாகத் தமது வழிபாட்டுக்கு சிறிய பல ஆலயங்களை அரச ஆதரவுடன் அமைத்தனர்.

அவ்வாறு அமைக்கப்பட்ட ஆலயங்களுள் இன்றும் அடையாளம் காணக்கூடிய பொலநறுவையிலுள்ள 2 ஆம், 5 ஆம், 6 ஆம் சிவதேவாலயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள்இரண்டாம் சிவ தேவாலயத்தைத் தவிர ஏனைய இரண்டும் பெருமளவுக்குசெங்கட்டிகளையும், கருங்கற்களையும் கொண்டு கட்டப்பட்டவையாகும்.

### தொல்லியல் சான்றுகள்

இவ்வாலயங்களைத் தவிர பதவியா, திருகோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களிலும் சோழர் கால ஆலயங்கள் இருந்தமையைச் சாசனங்கள் உறுதி செய்கின்றன. எனினும் இதற்குரிய தொல்லியல் சான்றுகளை இன்னும் சரிவர இனங்காண முடியவில்லை எனலாம்.

சமகாலத்தில் யாழ்ப்பாண தீபகற்பத்திலும் சோழர்கால அரசியல், வர்த்தக, பண்பாட்டுச் செல்வாக்குகள் அதிகரித்திருந்தமைக்கான ஆதாரங்கள் உண்டு. நாரந்தனை, கமால் வீதி போன்ற இடங்களில் கிடைத்த சோழர் காலச் சிற்பங்களும், யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இராஜேந்திர சோழன் காலக் கல்வெட்டும் இங்கும் சோழர் காலச் சமய நடவடிக்கைகள் ஏற்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துகின்றன.

இதனால் யாழ்ப்பாண தீபகற்பத்திலும் சோழர் கால ஆலயங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்தாகும். ஆயினும் அத்தகைய ஆலயங்கள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவை பிற்காலத்தில் உள்நாட்டு அரசியல் மாற்றங்களினால் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டதென்பதிலும் பார்க்க ஐரோப்பியர் ஆட்சியில் அழிக்கப்பட்டதெனக் கூறுவதே பெருமளவுக்குப் பொருத்தமாகும்.

இத்தகைய ஒரு நிலைக்கு மண்ணித்தலைச் சிவாலயமும் உட்பட்டிருந்தாலும் அழிந்த நிலையிலும் அதன் சில பாகங்கள் எஞ்சியிருப்பது யாழ்ப்பாணக் குடாநாட்டு இந்துக் கட்டடக் கலைப் பாரம்பரியத்தை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மணம் பரப்பும் செய்திப் படங்கள்!

திரைப்படத்துறை வளர்ச்சியில் செய்திப்படங்களும் (டொக்குமென்டரி) குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன.

மேலை நாடுகளில் செய்திப்படங்கள் ஏராளமாகத் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்த் திரைப்படத்துறையில் செய்திப்படங்கள் அவ்வளவாகத் தயாரிக்கப்படுவதில்லை.

அரசின் சார்பில் தயாரிக்கப்படும் செய்திப்படங்கள் மக்களின் உண்மை நிலையைப் பிரதிபலிப்பனவாக அமையவில்லை.

செய்திப்படங்கள் எப்படி அமைய வேண்டும்?

''நாம் வாழும் உலகத்தைத் தெளிவாகப் பார்க்க டொக்குமென்டரிப் படங்கள் உதவுகின்றன. சமுதாயக் கொடுமைகளை ஏற்க மறுக்கும் ஒரு முயற்சிதான் டொக்குமென்டரிப் படங்கள். பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்காக நியாயம் கேட்டுக் குரல் எழுப்ப வகை செய்யும் சாதனம் அது. மற்றும் அது மண்ணின் மணம் கமழ்வது''—

இப்படி செய்திப்படங்கள் பற்றிக் கூறப்படுகிறது.

ஆனால் இப்போது வெளியாகும் செய்திப்படங்கள் அன்றாட வாழ்வில் பங்குகொள்பவையாக, சுக துக்கங்களை பகிர்ந்து கொள்பவையாக இருப்பதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

செய்திப்படத் தயாரிப்பில் மேற்கு ஜேர்மனி முன்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஜேர்மனி தயாரித்த சில படங்கள் உப்புச்சப்பற்ற செய்திக்கோவை அல்ல. இரத்தமும், சதையுமான மனிதநாடகம் என்று விமர்சகர்கள் வர்ணித்திருக்கிறார்கள்.

மேற்கு ஜேர்மன் செய்திப்படங்களில் உதாரணத்துக்கு இரண்டு படங்கள் பற்றிய விமர்சனம் இங்கு தரப்படுகிறது.

### மரம் அறுத்தல்

மரம் அறுத்தல் என்று ஒரு செய்திப்படம். காட்டில் மரம் வெட்டுவோர் பற்றியது.

வெட்டப்பட்ட நெடிய மரத்தைக் கோடாரியால் சிறு துண்டங்களாகப் பிளக்கிறார் தொழிலாளி.

இது மிகவும் கஷ்டமான வேலை இல்லையா என்று கேட்கிறார் செய்தியாளர்.

''வெட்டும்போது எதிரிகளை நினைத்துக் கொள்வேன்''— என்கிறார் தொழிலாளி.

பக்கத்தில் புதிதாக வேலை கற்றுக்கொள்ளும் ஓர் இளைஞன்.

'இவனையும்' அப்படி நினைத்துக்கொண்டு மரம் பிளக்கச் சொன்னேன். ஆனால் எனக்கு எதிரிகள் என்று யாருமே இல்லை என்கிறான் இந்தப் பையன்'— என்று அந்த இளைஞனைக் காட்டிச் சிரிக்கிறார் அத்தொழிலாளி.

'சரித்திர சங்கம்' என்று ஒரு படம்.

சாதாரணமாக ஒரு முக்கியத்துவம் இல்லாத கிராமம்.

அங்கு ஒரு புல்டோசர் ஒருநாள் கற்காலத்தைச் சேர்ந்த ஒரு படிமானத்தைப் புரட்டி வெளிக்கொண்டு வருகிறது.

உடனே கிராமவாசிகள் தங்கள் இருப்பிடத்தை ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உணர்ந்து, மேற்கொண்டு ஆராயவும், விவாதிக்கவும் ஒரு சரித்திரசங்கத்தை அமைக்கிறார்கள்.

இதில் பள்ளி ஆசிரியரோடு சாதாரணத் தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் குடும்பப்பெண்கள் பங்கேற்கிறார்கள். ★

# 'நான் துறவி அல்ல'; ஷபனா ஆஸ்மி பேட்டி!

ஷபனா ஆஸ்மி, இந்திப்படவுலகில் குணசித்ர நடிகை என்று பெயர் பெற்றவர்.

'அர்த்' என்ற படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கம்யூனிஸ கொள்கையில் ஈடுபாடு கொண்ட ஷபனா ஆஸ்மி, வட இந்தியாவின் எளிய மக்களின் நல்வாழ்வுக்காகவும் போராடிவருகிறார்.

பம்பாயில் அமைதியான பங்களா ஒன்றில் வாழ்ந்துவரும் இவர் பேட்டி ஒன்றின்போது தெரிவித்த கருத்துக்கள் இதோ!

எப்போதும் ஒரு நடிகையாகவே இருக்கவிரும்புகிறீர்களா?

—இல்லை. என்னுள்ளும் நடிப்பிலும் நான் ஒரு 'காலி இடம்' என்று நினைக்கிறேன். ஆனால் மேடையிலோ, சினிமாவிலோ அந்த வெற்றிடத்தை நிரப்பி விடுவேன். நான் நடிகையாக வந்திருக்காவிட்டால் நான் ஒரு மனநோயாளியாகத்தான் இருந்திருப்பேன்.

உங்கள் வெற்றிக்குக் காரணம் என்ன?

— நான் விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையுள்ளவள் என்பதுதான். மக்கள் என்னை மதிக்கவேண்டும் என்று நினைப்பவள். ஏனென்றால் நான் மக்களை மதிக்கின்றேன். மக்கள் என்னைவெறுத்தாலும் அதைப் பெருந்தன்மையுடன் நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். எனக்குத் தெரிந்த வரையில் ஆண், பெண், குழந்தைகள் யாராவது தவறுசெய்தால்கூட அவர்களிடம் நாடகமாடித் திருத்திவிடுவேன்.

நான் துறவி அல்ல — இப்படிச் சொல்கிறார் ஷபனா ஆஸ்மி. இந்திய குழந்தைகள் திரைப்படக் கழகத் தலைமைப்பதவியில் ஷபனாஆஸ்மியை இந்திய மத்திய அரசு நியமித்திருக்கின்றது. ★

வெள்ளித்திரையில்

# ஏழிசை மன்னர் பாகவதர் வாழ்விலே ஒருநாள்...

தமிழ்த்திரையுலகின் முதல் சூப்பர் ஸ்டார் எம். கே. தியாகராஜ பாகவதர்தான்.

இவர்தான் அடுத்த தலைமுறை சூப்பர் ஸ்டாராகத் திகழ்ந்த எம்.ஜி. ஆரின் மானசிக முன்னோடியாக இருந்தார்.

பாகவதரின் அழகு, ஆற்றல், இமேஜ் இவைகளை மனதிற்கொண்டே தனது எதிர்காலம்பற்றி கனவுகண்டதாக எம். ஜி. ஆரே குறிப்பிட்டிருக்கிறார்.

பாகவதர் வாழ்வில் ஒரு சம்பவம்..

ஒரு சமயம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் ஒரு கலைவிழா நடக்க ஏற்பாடாகி இருந்தது.

அந்த விழாவில் எம். ஜி. ஆர், சிவாஜி ஆகிய நடிகர்கள் கலந்து கொள்வதாக இருந்தது.

கலைவாணருக்கோ, அவ்விழாவில் பாகவதரும் கலந்துகொண்டால் சிறப்பாக இருக்கும் என தோன்றியது.

எனவே அவர் பாகவதருக்கும் அழைப்புவிடுத்தார்.

ஆனால் பாகவதரோ அந்த அழைப்பை ஏற்க இயலாது இருப்பதாகக் கூறிவிட்டார்.

அவர் சொன்ன காரணம்:

'நான் ஒரு நேரத்தில் புகழின் உச்சியில் இருந்தது என்பது உண்மையே. ஆயினும் இன்றைய இளைய தலைமுறை ரசிகர்களுக்கு என்னைத் தெரியாது' — என்று கூறினார்.

கலைவாணர் விடவில்லை. வரத்தான்வேண்டும் என்று பாகவதரிடம் கூறிவிட்டார்.

மாலை விழா ஆரம்பித்தது. எம். ஜி. ஆர், சிவாஜி எல்லாரும் வந்துவிட்டனர்.

திடீரென்று ஒருவர் கலைவாணர் காதில் ஏதோகூற, சிவாஜி, எம். ஜி. ஆர் உட்பட அனைவரும் வாசலுக்கு ஓடினர்.

பாகவதர் கம்பீரமாக உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்.

'மன்னன் வாழ்விலோர் திருநாள்' என்று குதிரையில் பாடியபடி படத்தில் வந்த அந்த ஏழிசை மன்னரை, கலைவாணர், எம். ஜி. ஆர், சிவாஜி ஆகியவர்கள் அழைத்துகொண்டுவந்த காட்சி... அன்றைய சூப்பர் ஸ்டாரின் புகழை எடுத்துரைத்தது. ★

"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்

★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி விதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | . | 17% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. க. கருணாரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண.
A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட கல்வி முன்னேற்றத்துக்கு பாடசாலை - தனியார் நிறுவனங்களின் பங்கு!

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அளப்பரிய பங்கை தனியார் கல்வி நிறுவனங்கள் இன்று வகிக்கின்றன.

ஆரம்பகாலங்களில் 'பாடசாலைகளில் விளங்கிக்கொள்ளும் ஆற்றல் குறைந்த மாணவர்களின்' கல்வி நிலையைச் சீராக்க சிறு அளவில் வீடுகளில் தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவை இன்று தவிர்க்க முடியாத அளவுக்கு பரந்து விரிந்து வளர்ந்துள்ளன.

இதற்கான காரணிகள் வருமாறு:

- பாடசாலை ஆசிரியர்கள் மாணவரின் மனநிலைகள், ஆற்றல்கள் ஆகியவற்றை விளங்கிக்கொண்டு அதற்கேற்ப முறையாகப் பாடங்களை புகட்டத் தவறியமை.
- பாடசாலை ஆசிரியர்கள் பாடங்களைப் பொருத்தமான முறையில் தயார் செய்யாமை.
- தனிப்பட்ட முறையில் வருமானத்தை ஈட்டும் நோக்குடன் பாடசாலை ஆசியர்கள் நடந்துகொள்வது.
- போதியளவு வசதிகளையும் திறமையும் ஆர்வம் மிக்க நிர்வாகத்தை பாடசாலைகள் கொண்டிராமை.
- சிறப்பான நிர்வாகம் உற்சாகமும் ஆற்றலும் கொண்ட மாணவர்களைக் கற்பித்தல் முறை போன்றவற்றை தனியார் நிறுவனங்கள் கொண்டிருப்பது.

மேற்கூறிய காரணிகளே தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவு அளித்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

இத்தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பகாலப் பகுதிகளில் அனுகூலங்களை உடையனவாக இருந்தன.

எனினும் பின்னர் சில பாதிப்புக்களையும் அவை ஏற்படுத்தின என்பதை எவரும் மறுக்கமுடியாது.

தனியார் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்களை பின்வருமாறு நிரற்படுத்தலாம்;

- வெறுமனே பணம் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக்கொண்டு சில நிறுவனங்கள் செயற்படுதல்.
- மாணவரின் சுய ஆற்றல், வினைத்திறன் பாதிக்கப்படல்.

மாணவருக்குக் கிடைக்கக் கூடிய முழுநேரத்தையும் பாடவேளைகளாகப் பயன்படுத்துதல். இதனால் மாண



வர் ஏனைய கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஈடுபடமுடியாமையால் அவர்களது ஆற்றல், ஆளுமை வளர்ச்சிகள் தடைப்படல். இதனால் மாணவர் தேகாரோக்கியம் குன்றி இயந்திர வாழ்க்கைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

- மாணவர் ஆசிரியருக்குக் கீழ்ப்படியாத நிலை ஏற்படல். மாணவருக்கு பாடசாலைகளில் விசுவாசம் குன்றுதல்.

இப்பாதிப்புக்களின் மத்தியிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் பின்வரும் பணிகளை ஆற்றி தமிழ் சமுாயத்ின் வளர்ச்சியில் பங்கு கொண்டு உள்ளன என்பதையும் நன்றியுடன் நினைவுகூரவேண்டும்.

- இராணுவக் கெடுபிடிகளுக்கு இடையில் பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில் மாணவர்களுக்கு உரிய பாட நெறிகளைப் போதித்தமை. இதனால் தமிழ் இனத்தின் கல்விப் பாரம்பரியம் பேணப்பட்டது.
- இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கூட உயிரைத் துச்சம் என மதித்து தனியார் கல்வி நிறுவனங்கள் ஆற்றிய பணி பணத்தினால் ஈடுசெய்யக் கூடியவை அல்ல.

இக்காரணங்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் தவிர்க்கப்படக் கூடியவை அல்ல. அவை மாணவருக்கு பக்கபலமாக இருப்பதுடன் பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகின்றன.

ஆகையால் தனியார் கல்வி நிறுவனங்கள் சமுதாய நலனைப் பேணக்கூடிய விதத்தில் செயற்பட வைக்கவும் சடுதியான பாதிப்புக்களை தவிர்க்கவும் பின்வரும் செயற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

- தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளைத் தேவைக்கு ஏற்ப கட்டுப்படுத்துதல்.
- தனியார் கல்வி நிறுவனத்தின் ஆதிக்கத்தைக் குறைப்பதில் காட்டும் வேகத்தைவிட பாடசாலை வளர்ச்சியின் வேகத்தை துரிதப்படுத்துதல்.

தனியார் கல்வி நிறுவனங்களை சமுதாய நலன் கொண்ட அமைப்புக்களாக மாற்ற எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் வருமாறு;

- இந்த நிறுவனங்கள் இயங்கும் நாட்கள், நேரம் ஆகியன மாணவர் ஏனைய துறைகளில் பங்கு எடுக்கவும் ஓய்வு பெறக்கூடிய விதத்திலும் வரையறுக்கப்படவேண்டும்.
- நியாயமான கட்டணம் அறவிடப்படுதல்.
- ஒரு வகுப்பில் உள்ளடக்கப்படக்கூடிய மாணவரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தல்.
- ஆசிரியர், மாணவர் தொடர்பான ஒழுக்கவிதி தயாரித்தல். அதை மீறுவோர் மீது நடவடிக்கை எடுத்தல்.
- பாடசாலை ஆசிரியர், அரச ஊழியர்கள் கடமை நேரத்தில் தனியார் நிறுவனங்களில் கற்பிப்பதைத் தடைசெய்தல்.
- காலத்துக்குக் காலம் கண்காணிப்பு செய்தல்.

**பாடசாலைகள்**

இதே வேளை பாடசாலைகளின் செயற்பாடுகளையும் துரிதப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:

- பாடசாலைகளில் வினைத் திறனும் ஆர்வமும் உள்ள நிர்வாகத்தை ஏற்படுத்துதல்.
- மாணவருக்கு ஏற்ற விதத்தில் கற்பித்தலை ஒழுங்காக நடத்துவதை உறுதி செய்தல்.
- பல்வேறு மூலங்களில் இருந்து மாணவருக்குப் பொருத்தமான முறையில் பாடங்களைத் தயாரிக்க ஆசிரியர்களை ஊக்குவித்தல் இதற்கு நூலக வசதிகள், கருத்தரங்கு முதலியவற்றை ஒழுங்கு செய்தல்.
- பரீட்சையின் அடிப்படையில் கல்வியில் குறைவான மாணவர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல்.
- மாணவரின் நலன் பேணும் விதத்தில் பாடசாலை நிர்வாகம் உண்மையாக உழைக்கின்றது என்ற எண்ணத்தை மாணவர், பெற்றோர் மனதில் ஏற்படுத்தல்.

இவற்றைச் செயற்படுத்துவதன்மூலம் மாணவரும் பெற்றோரும் தனியார் கல்வி நிறுவனங்களைச் சார்ந்து இருக்கும் நிலைமையை போக்கிக்கொள்ள முடியும்.

தனியார் கல்வி நிறுவனங்களை கட்டுப்படுத்தும் அதே நேரத்தில் பாடசாலை வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் துரிதப்படுத்த வேண்டும். இதுவே உடனடித் தேவையாகும்.

இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொண்டு செயல்படவேண்டும். ★

- பிரபு -

## நகைச்சுவை

ஒருவர்: நீங்கள் தானே குளத்தில் மூழ்க இருந்த எனது மகனைக் காப்பாற்றியது?

மற்றவர்: நான் தான். எதற்காக கேட்கிறீர்கள்? உதவிசெய்தேன். அவ்வளவு தான். அதை மறந்துவிடுங்கள்.

முதலாமவர்: எப்படி மறந்துவிடுவது? மகனின் தலையில் இருந்த தொப்பிக்கு என்ன நடந்தது கிடைக்குமா? ★

பெண்: இப்படம் எனக்கு வேண்டாம். படத்தில் எனது கணவன் கோமாளி போன்று தெரிகிறாரே!

புகைப்படப்பிடிப்பாளர்: அம்மணி! அதற்கு நான் என்ன செய்வது? நீங்கள் தானே அவரைக் கணவனாகத் தெரிந்தெடுத்தீர்கள்.

★

நாடக மேடை......

மனேஜர்: மூன்றாவது காட்சிக்கு பதில் முதலாவது காட்சியிலேயே நீர் கொல்லப்படுவதான கட்டம் வருகிறது.

நடிகர்: ஏன் இந்த மாற்றம்?

மனேஜர்: முதலாவது காட்சியில் நீர் கொல்லப்படுவதாக வராவிட்டால் மூன்றாவது காட்சியில் உம்மை ரசிகர்கள் நிச்சயமாக நிஜமாகவே கொன்றுவிடுவார்கள் என்று அச்சப்படுகின்றேன்.

★

ரயில் ஒன்றின் நேரசூசி மாற்றப்பட்டது.

2.02 மணிக்கு போகவேண்டிய ரயில் புதிய நேரசூசியின் படி 1.58க்கு புறப்படும்.

இதை ரயில்வே ஸ்டேஷனில் பின்வருமாறு அறிவித்தனர்:

ரயில் இனிமேல் 2.02 க்குப் பதிலாக 2 க்கு 2 நிமிடங்கள் இருக்கும்போது புறப்படும்.

★

உளவியல் நிபுணர்:

உமது ஏமாற்றங்களுக்கு முடிவு காணப்பட்டுவிட்டது.

மனநோயாளி: அப்படி என்றால்... நேற்று நான் நெப்போலியனாக இருந்தேன். இன்று நான் ஒருவருமாக இல்லையே!

★



## தாவீது

1\. எந்தன் ஜெபத்தை வேண்டுதலை
கேட்டு நல்ல விடையதனை
இறைவன் எனக்குத் தந்ததனால்
அவரில் அன்பு கொண்டவன் நான்

2\. இறைவன் கேட்டார் என்குறையை
அதனால் அந்த விண்இறையை
வாழ்நாள் முழுதும் நான்தொழுவேன்
இறுதி மூச்சு வரைதொழுவேன்

3\. மரணம் என்னை முறைத்திட்டது
வெறித்து வெறித்துப் பார்த்திட்டது
நானோ பயந்தேன் துன்புற்றேன்

4\. இறைவன் இடத்தே முறையிட்டேன்
'இறைவா என்னைக் காப்பாயே'
என்றேன் அழுகைக் குரலாலே

5\. இறைவன் என்றும் நல்லவராம்
நல்லா தரவு உள்ளவராம்
நீதி கிருபை கொண்டவரை
அவரே எங்கள் ஆண்டவராம்

6\. குழந்தை உள்ளம் கொண்டவராம்
கபடம் சூது அற்றவரை
எளிமை யாக வாழ்பவரை
இறைவன் காப்பார் இறுதிவரை

7\. சாவின் வாயில் இருந்தென்னை
இறைவன் காத்தார் இதுஉண்மை
எனக்கு என்று உலகினிலே
மறக்க முடியா விதத்தினிலே
இறைவன் செய்த அற்புதத்தை
உலகின் புதுமை அதிசயத்தை
நன்றாய் அறிந்தேன் ஆதலினால்
ஆறி அமர்ந்து வாழ்வன்நான்

8\. மரணம் என்னும் பிடியதனில்
இருந்து காத்தார் எனையுலகில்
கண்ணீர் வடித்து வீழாதென்
கண்ணைக் காத்தார் பார்மீதில்
எந்தன் கால்கள் இடறாமல்
காத்தார் அவற்றைத் தவறாமல்

9\. எனவே ஜீவன் உள்ளோர்கள்
ஆன அந்த நல்லோர்கள்
வாழும் நல்ல உலகத்தில்
வாழ்வேன் இறையின் சமுகத்தில்

10\. உடலின் சுகத்தை இழந்திங்கு
இருந்தேன் அந்தப் பொழுதன்று
இறைவன் எனக்குச் சுகந்தருவார்
சுகமாய் வாழும் பலன்தருவார்!

— வேதாகம சங்கீதம்

தமிழ்வடிவம்: நவாலியூர் சி. என். செல்லத்துரை

## தர்மம் செய்க!

அன்னை உம்முஸல்மா (றலி) அன்ஹா அவர்களுக்கு ஒரு சிறிது மாமிசம் சன்மானமாக அனுப்பப்பட்டது.

மாமிசம் என்றாலே நபிகள் நாயகத்திற்கு மிகவும் விருப்பமாக இருக்குமே எனக் கருதி அவர்களுக்காகவே அதனை வீட்டில் பத்திரப்படுத்தி வைக்கும்படி, அவர் தம் பணியாளரைப் பணித்தார்கள்.

பணியாளர் அதனை வீட்டின் மாடக்குழி ஒன்றில் பத்திரமாக வைத்துவிட்டார். அதே சமயம் ஒரு யாசகர் அன்னை அவர்களின் வீட்டு வாசலில் நின்று,

'அல்லாஹ் உங்கள்பால் கருணை செய்வானாக .. தர்மம் ஏதும் செய்யுங்கள்' —என்று வேண்டி நின்றான்.

'அல்லாஹ் உங்கள் மீது கருணை செய்வாராக... தர்மம் ஏதும் இல்லை...' என்று வீட்டில் உள்ளவர்கள் பதில் உரைத்தனர். அது கேட்டு வாசலில் நின்ற யாசகர் திரும்பிச் சென்றுவிட்டார்.

பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டுக்கு வந்து,

'உம்மு சல்மாவே, உணவு ஏதும் உண்டா...?' என்று கேட்டார்.

'ஆம்' எனக்கூறி அவர்களுக்காக பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த மாமிசத்தை எடுத்துவரும்படி அவர்கள் தம் பணியாளரைப் பணித்தார்.

பணியாள்தான் பத்திரமாக வைத்திருந்த அந்த மாமிசத்தை எடுப்பதற்காகக் கைவைத்தபோது அங்கு வெண்ணிறமுள்ள கல் ஒன்று இருப்பதைக்கண்டு வியப்படைந்தார்கள்.

நடந்தவைகளை தீர விசாரித்து அறிந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,


'நீங்கள் யாசகருக்கு ஈயாததினால் அந்த மாமிசம் வெண்ணிறக் கல்லாக மாறி விட்டது என்றார்.

★



- தொகுப்பு: எம். எம். அபூபக்கர் -

## சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 113
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம் ..............................................
..............................................

## போட்டி இல: 113

**இடமிருந்து வலம்:**

1\. பத்து அவதாரங்கள் 5. உயிர்ச்சத்துக்களில் ஒன்று 6. திருத்தலம் 7. குரங்கு 8. மிகச்சிறியது (குழம்பியுள்ளது) 9. கொடுமை 11. நுரையீரல் வியாதிக்கு இதுவும் ஒரு காரணி 13. இடமாறியுள்ள இது, அலையாமல் இருந்தால் நிம்மதி உண்டு. 14. ஓர் உவம உருபு 17. பாகமாகக் கொண்டவன் 18. மீதி 19. அஃறிணை – ஒருமைப்பெயர் 21. கடைசி 22. வீட்டிற்குப் பெரியவர்.

**மேலிருந்து கீழ்:**

1\. தயிர்ச்சாதம் 2. சார்ந்த எனப்பொருள்படும் 3. சிக்கவைப்பது 4. கடவுள் குழம்பியுள்ளது 5. சக்கரவர்த்திகளில் ஒருவர் 7. தானியங்களில் ஒன்று 8. நோய் பரப்பும் கிருமிகளை இப்படியும் அழைப்பர் 10. அடுத்தது தலைகீழ் 12. ஒப்படைப்பு 15. பிள்ளை 16. மன்னர் குழம்பியிருக்கிறார் 17. அன்பு 18. பருந்து 20. அணங்கு தலைகீழாக நிற்கிறாள்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 09 - 05 - 1990

## படித்தவள்

**குறுக்கதை**

'ஆனா ஆவன்னாப் படிப்பிக்கிற சின்னப் பள்ளிக்கூட ரீச்சருக்கு, என்ன தெரியும்' தேவியக்கா கேலியாகவும் ஆத்திரத்தோடும் பேசிக்கொண்டிருந்தாள்.

அவளின் கதையைக் கேட்பது பாதி, கேளாதது பாதியாகத் தான் கொண்டு வந்திருந்த மிளகாயை அரைத்துத் திரும்பும் வேலையில் ஈடுபட்டிருந்தாள் அயல்வீட்டு ருக்மணி.

தேவியோ தொடர்ந்தும் பேசினாள்.

'நான் யாரிட்டக் கடன் வாங்கினால் இவளுக்கென்ன? அவளா கொடுக்கப் போகிறாள், இந்தா பார், ருக்கு என்னிட விசயமென்றால் இவயள் நல்லாக் கதைப்பினம், தங்கட விஷயமென்றால் மறைச்சுப் போடுவினம்' உள்ளம் கனக்க உரத்த குரலில் உரப்பிக் கொண்டே வாசலுக்கு வந்தாள்.

வாசலில் அவளது நிழலையும், குரலையும் கண்டு, – கேட்டு முற்றத்தில் நின்ற கணவர். 'என்ன காலமையே தொடங்கிவிட்டாய்...' என்று இழுத்தார்.

'எல்லாம் உங்கட தங்கச்சியின்ர கதைதான், அவவுக்குச் சும்மா இருக்க ஏலாதாம்.' என்று சொல்லிக் கொண்டே கணவனையும் முறைத்துப் பார்த்தாள்.

அவருக்கோ உடனடியாகப் பதிலெதுவும் சொல்ல வாய் எழவில்லை அவரது ஒரே தங்கச்சிபடித்தவள், ஆசிரியையாகத்தொழில் புரிகிறாள். தனது மனைவிக்கு அவள் தோழி தான். ஒன்றாகவே பாடசாலையிற் படித்தவர்கள். ஆனாலும் என்னவோ தெரியவில்லை. எந்தத் தொழிலுமே தேவிக்குக் கிடைக்கவில்லை.

இந்த இயலாமை தேவியின் மனத்துக்குப் பெரும் வேதனையாக; எந்த வகையில் மைத்துனிக்கும், தனக்குமிடையே குரோதம் தொடர்ந்தாலும், தனக்குக் கிடைக்காத – மைத்துனிக்குக் கிடைத்த ஆசிரியத் தொழில் குறித்தும் குறை கூறுவது வழக்கமாகிவிட்டது.

தன் தங்கையைக் குறித்துக் கணவன் பெருமை கொள்ளும் போதெல்லாம், அவற்றுள் குறைகண்டு குமுறி எழுவதுடன், ஆசிரியையாக மைத்துனி ஆற்றும் தொழிலைக் குறைத்து எடைபோட்டு ஏசித் தணிவதும் தேவியின் வேலையாகி விட்டது.

'ஆனா ஆவன்னாச் சொல்லிக் கொடுக்கிற சின்னப் பள்ளிக் கூட ரீச்சருக்கு என்ன தெரியும்?' இது தேவியின் அன்றைய பாராயணம்; கணவனால் தேவியின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மீண்டும் மீண்டும் தன் தங்கையையும் ஆசிரியத் தொழிலையும், குறைத்து மதிப்பிட்டுக் குறை கூறும் தேவியை ஒரு முறை திரும்பிப் பார்த்தான். அவளது கடினமுகம் அவரை என்னவோ செய்தது.

இருப்பினும் துணிவை வரவழைத்துக் கொண்டார்.

'ஆனா ஆவன்னா படிப்பிக்கிற சின்னப் பள்ளிக்கூட ரீச்சருக்கு ஒண்ணும் தெரியாதெண்டால் ஒண்ணுமே படிப்பிக்காத உனக்கு என்னதான் தெரியப் போகுதோ?' என்றார்.

தேவிக்கு முகம் கறுத்து விட்டது. கணவரின் அந்தக் கேள்வியை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

தன்னைத்தானே அக்கேள்வியால் ஆய்வு நடத்தினாள். அவள் மனம் வெட்கம் அடைந்தது. கணவரின் முகத்தைக் காண, உள்ளம் குறுகினாள். அவள் இப்பொழுதுதான் படித்தவளானாள்.

யாவும் கற்பனை)

- நெடுந்தீவு மகேஷ் -

## நெடுங்காதல்...!

கரும்பிலே காதல்
எறும்பிற்கு நல்ல
கட்டழகி மீது
காளையர்க்குக் காதல்
பெரும்பணத்தில் காதல்
மானிடர்க்கு என்றும்
பரம்பொருளில் காதல்
பக்தர்க்கு உலகினிலே!

பாமீது காதல்
புலவர்க்கு பிள்ளைப்
பாசமெனும் காதல்
பெற்றவர்க்கு தேன்சிந்தும்
பூமீது காதல்
வண்டுக்கு இந்தப்
புவிமீது காதல்
வல்லரசுக்கு உலகினிலே!

அருள்மீது காதல்
அறவோர்க்கு ஞான்றும்
இருள்மீது காதல்
திருடர்க்கு உப்புக்
கடல்மீது காதல்
மீனுக்கு எங்கள்
உயிர்மீது காதல்
எமனுக்கு என்றிடுவோம்.

மலைமீது காதல்
முகிலுக்குப் பொங்கும்
அலைமீது காதல்
படகிற்கு அழகுச்
சிலைமீது காதல்
சிற்பி அவனுக்கு
நிலையில்லா வாழ்வினிலே
நமக்கோ நெடுங்காதல்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி 'சூப்'ஐ விரும்பும் 'திறொசேறா'

# தாவரங்களிலும் ஊனுண்ணிகள்!

விலங்குகளிடையே தாவர உண்ணிகள், ஊனுண்ணிகள், அனைத்துமுண்ணிகள் என்ற வேறுபாடுகள் உண்டு.

மனிதர்கள் அனைத்துமுண்ணிகளாகவிருந்தாலும், பழக்கவழக்கத்தில் இவர்களிடையேயும் சைவ, அசைவ உணவு கொள்பவர்கள் என்ற வேறுபாடு உண்டு.


இதேபோல தாவரங்களிடையேயும் ஊனுண்ணிகள் உண்டு என்று கூறும்போது நம்பமுடியவில்லை அல்லவா!

ஆயினும் இது உண்மை. இவற்றிடையேயும் ஊனுண்ணிகள் உண்டு. சதுப்புத்தன்மையான, அல்லது மணற்பாங்கான நிலங்களில் வாழும் தாவரங்களுக்கு நைதரசன் பற்றாக்குறை ஏற்படுவது உண்டு.

நைதறேற்றுக்கள் எளிதில் கரைந்து வடிந்துபோகக்கூடியவை. அதனால் மண்ணில் இவற்றின் பற்றாக்குறை ஏற்படும்.

சில தாவரங்கள் பலதரப்பட்ட பொறிகள் மூலம் பூச்சிகளைப் பிடித்து அவற்றை உணவாகக்கொள்வதன்மூலம் தமது நைதரசன் பற்றாக்குறையை நிவர்த்தித்துக்கொள்ளும்.

இவை ஊனுண்ணுந் தாவரங்கள் அல்லது பூச்சியுண்ணுந் தாவரங்கள் என அழைக்கப்படும். இவை பற்றியதொரு வர்ணணையை இங்கு எடுத்துக்கொள்வோம்.



## நெப்பெந்திசு

நெப்பெந்திசு [Nepenthes] என்ற கெண்டித்தாவரம் இலங்கையில் ஈரவலயப் பிரதேசங்களிற் காணப்படும். சிலாபம், நீர்கொழும்பு, ஹுனுமுல்லைப்பகுதிகளில் சாதாரணமாகக் காணப்படும் சிங்கராசவனத்திலும் உண்டு.

நெப்பெந்திசு அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் மணப்பந்தல், மற்றும் சிறப்புப் பந்தல்களை அலங்கரிப்பதற்கு பந்தற்கால்களில் கட்டுவதன் மூலம் இதனைப் பயன்படுத்துவார்கள். [இப்பழக்கம் மாறவேண்டும், அல்லது இந்த இனம் அருகி மறைந்துவிடக்கூடும்].

நெப்பெந்திசு பற்றியின் துணைகொண்டு ஆதாரங்களில் ஏறிப்படரும் ஒரு கொடி. இதன் திரிபு தொடர்பாக இரு விளக்கங்கள் உண்டு.

இலையின் அடியிலுள்ள தட்டையான பகுதி இலைப் பரப்பென்றும், பற்றியாகவுள்ள பகுதி நீட்டப்பட்ட நடுநரம்பெனவும், நடுநரம்பின் முனை கெண்டியாக விருத்தியடையும் என்பது ஒரு விளக்கம்.

இலையின் அடியிலுள்ள தட்டையான பகுதி இலையடியெனவும், இது ஒளித்தொகுப்பிற்கு உதவும் வகையில் தட்டையாக இலை போன்று விருத்தியடைந்துள்ளதெனவும் [இலைபுரைக் காம்பு] பற்றியாகத் திரிபடைந்துள்ள பகுதி இலைக் காம்பெனவும், இலைப் பரப்பு கெண்டியாகத் திரிபடைந்துள்ளது எனவும் கொள்வது இரண்டாவது விளக்கம். இதில் எது சரி என்று அறுதியிட்டுக்கூற முடியாவிட்டாலும், முதலாவது விளக்கமே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் விளக்கமாகும்.


ஆயினும், இலையடியில் மாத்திரமல்ல, கெண்டியிலும் நரம்புகள் இருப்பது கவனிக்கற்பாலது; நரம்புகளிருப்பது இலைப்பரப்பிற்குரிய அம்சம்.

கெண்டிக்கென ஒரு மூடியுண்டு. கெண்டி இளசாகவிருக்கும்போது மூடி மூடிய நிலையிலிருக்கும். கெண்டி பூரண வளர்ச்சி அடைந்ததும் மூடி திறந்து கொள்ளும். திறந்தமூடி பின் மூடிக்கொள்வதில்லை. கெண்டியின் வாய் அழுத்தமானது, நிறமுள்ளது, கவர்ச்சியானது. கெண்டியினுள் மழைநீர் தேங்கியிருக்கும். இதில் பற்றீரியங்களுண்டு. கெண்டியின் உட்சுவரில் உள்நோக்கிய [கீழ்நோக்கிய] மயிர்களுண்டு.

- விஞ்ஞானம் -

கெண்டியின் விளிம்பில் அலைந்து ஆராயும் எறும்பு போன்ற பூச்சிகள் வழுக்கி உள்ளே விழுந்துவிடும். இவை வெளியேறாது மயிர்கள் தடுக்கும். கெண்டியிலுள்ள திரவத்தில் இவை அமிழ்ந்தி இறந்துவிடும். பற்றீரியங்களின் தாக்கத்தினால் பூச்சிகள் பிரிந்தழியும். கெண்டியின் சுவரிலுள்ள சுரப்பிகளினால் திருச்சின் நொதியம் சுரக்கப்படும். இது புரதச் சமிபாட்டிற்கு உதவும்.

பிரிந்தழியும் பூச்சிகள் பற்றீரியங்களுக்கு உணவாகப் பயன்படும். நெப்பெந்திசுவிற்கும் நைதறேற்றுக்கள் கிடைக்கும்.



## சரசினியா

சரசினியா [Sarracenia] என்பது மற்றொரு கெண்டித்தாவரம். இது மெக்சிக்கோவில் ஏரிக்கரைகளிற் காணப்படும். நில மட்டத்தில் வாழும். இலையுடன் தொடர்பாகப்பற்றி இல்லை.

கெண்டியின் அமைப்பும் தொழிற்பாடும் நெப்பெந்திசுவிற்கு ஒப்பானது. ஆயினும் இங்கு கெண்டி நொதியங்கள் எதையும் சுரப்பதில்லை. பூச்சிகளின் பிரிந்தழிதலுக்கு முழுக்கமுழுக்க பற்றீரியங்களே உதவும். பற்றீரியங்களுக்கு உணவு கிடைக்கும், சரசினியாவிற்கு நைதறேற்றுக்கள் கிடைக்கும்.

## திறொசேறா


திறொசேறா [Drosera] என்ற கதிர்ப்பனிப்பூண்டு மற்றொரு ஊனுண்ணும் தாவரம். இதன் இலைகளில் சுரப்பி மயிர்களுண்டு. இவற்றின் சுரப்புக்கள் சூரிய ஒளிபட்டுப் பிரகாசிக்கும். இதனால் கவரப்பட்டு பூச்சிகள் வந்து இலையின் மேல் அமர மயிர்கள் உணர் கொம்புகளாகத் தொழிற்பட்டு வளைந்து பூச்சியைப் பிடித்துக்கொள்ளும். பூச்சி தப்ப முயற்சிக்கும்போது மேலும் பரிசக் கொம்புகள் வளைந்து பூச்சியை தப்பவிடாது தடுக்கும். இலையும் வளைந்து பூச்சியை நன்றாகப் பிடித்துக்கொள்ளும்.

தொடர்ந்து இலையின் மேற்பரப்பிலுள்ள சுரப்பிகளினால் பைப்சின் ஐதறோக்குளோறிக்கமிலம் சுரக்கப்பட்டு பூச்சியிலுள்ள புரதப் பகுதிகள் சமிபாடடைந்து அகத்துறிஞ்சப்படும். பின் இலை விரிந்து மீண்டும் பூச்சிகளைப் பிடிக்கத் தயார் நிலையிலிருக்கும். திறொசேறாவில் இரண்டு இனங்களுண்டு.

திறொசேறா பேர்மானி (Drosera Burmanii) என்ற இனம் இலங்கை முழுவதும் பரவலாக உண்டு. இதன் இலைகள் கரண்டி அல்லது துடுப்புப்போன்றவை, நெருக்கமாக ரோஜாவுருவில் வைக்கப்பட்டிருக்கும். இந்த இனம் கூடுதலாகக் குளக்கரைகளிலும், வயல் வரம்புகளிலும் காணப்படும்.

திறோசேறா இன்டிக்கா (DroseraIndica) என்ற இனம் இலங்கையின் ஈரவலயத்திற்குரியது, சிறப்பாக மலைநாட்டிற்கு. இதன் இலைகள் ஒடுக்கமாக நீளமாக இருப்பதுடன் ஐதாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும்.

திறோசேறாவின் இலையில் கவர்ச்சியான பரிசோதனைகளைச் செய்யமுடியும். திறோசேறாவின் பரிசக் கொம்புகள் புரதப் பொருட்களுக்கு மாத்திரம் உணர்ச்சியுடையவை. அதனால், இலையின்மேல் புரதம் அல்



திறொசேறா பேர்மானி



திறொசேறா இன்டிக்கா

லாத் வேறு எப்பொருளை இட்டாலும் பரிசக்கொம்புகள் எதுவித இயக்கத்தையும் காட்டுவதில்லை. ஆனால் ஏதாவது புரதப்பொருளை இட்டால், உதாரணமாக ஒரு துளி கோழி சூப், உடனடியாகப் பரிசக் கொம்புகள் வளைந்து அதைப் பற்றிக் கொள்ளும். மனிதர்களுக்கு மாத்திரம்தான் கோழி சூப் அருமை தெரியுமா?

## ஏட்டிகுலோரியா

ஏட்டிக்குலோரியா Utricularia என்ற சவ்வுப்பையுருப்பூண்டு நன்னீரில் அமிழ்ந்திய நிலையில் மிதந்து வாழும் தாவரம்: இலங்கையிலுள்ள நிலையான நன்நீர் நிலைகளில் இது பொதுவாகக் காணப்படும்.

இதன் இலைகள் துண்டு பட்டவையாக, அதாவது துண்டு துண்டாக வெட்டப்



பட்டு மயிர்போலவிருக்கும். பூந்துணர் நீருக்கு வெளியே நீட்டப்பட்டு, பூக்கள் வளிக்குரியவையாகவிருக்கும், பூச்சிகளின் உதவியால் மகரந்தச் சேர்க்கை நிகழும். பொதுவாக, சகல பூச்சியுண்ணுந் தாவரங்களிலும், பூச்சிகளின் உதவியினாலேயே மகரந்தச் சேர்க்கை நிகழும்.

ஏட்டிகுலேரியாவில் சில இலைத் துண்டுகள் சவ்வுப்பைகளாகத் திரிபடைந்திருக்கும். சவ்வுப்பையின் ஒரு பக்கமாக ஒரு வாசலும், இதனுடன் தொடர்பாக உட்பக்கமாகத் திறக்கின்ற ஒரு பொறிக்கதவுமுண்டு. வாசலில் வெளிப்பக்கமாக உணர்ச்சி மயிர்களுண்டு, இவை பொறிமயிர்களாகவும் தொழிற்படும். சவ்வுப்பையின் உட்சுவரில் சுரப்பிகள் கூட்டங்களாக உண்டு. சவ்வுப்பைகள் நீரில் துடித்துக்கொண்டேயிருக்கும். இதயத் துடிப்பிற்கு ஒப்பாக துடிப்பின்போது, பை சுருங்கும்போது நீர் வெளியேறும். தளரும்போது நீர் உட்செல்லும். உட்செல்லும் நீரில் ஏதாவது ஜந்துகள் இருந்தால், அவை முட்டுவதனால் உணர்ச்சி மயிர்கள் உறுத்தப்பட்டு, பொறிக்கதவு மூடிக்கொள்ளும். பெப்சின் ஐதறோக்குளோறிக்கமிலம் சுரக்கப்பட்டு பூச்சி சமிபாடடைந்து அகத்துறிஞ்சப்படும். தொடர்ந்து பொறிக்கதவு திறந்து கொள்ள, மீண்டும் பொறிவைப்பதற்காக சவ்வுப்பை துடிக்கவாரம்பிக்கும்.



## டயோனியா

டயோனியா (Dionaea) என்ற வினசின் ஈப்பொறி மெக்சிக்கோ நாட்டின் ஏரிக்கரைகளுக்குரிய ஒரு தாவரம். இது நிலமட்டத்திற்குரியது.

இதன் இலையடி அகலமானது. இலைப்பரப்பின் இரு பாதிகளும் நடுநரம்பை ஒரு பிணைச்சலாகக் கொண்டு இயங்கக்கூடியவை. இலைப் பரப்பின் மேற்பரப்பில், ஒரு பாதிக்கு மூன்றாக, ஆறு உணர்ச்சி மயிர்களைக் கொண்ட திட்டுக்களுண்டு. இலை விளிம்பில் முட்களுண்டு. இலைமூடும் பொழுது விளிம்பிலுள்ள எதிர்ப்பக்கங்களுக்குரிய முட்கள் ஒன்றுடன் ஒன்று கொழுவுப்படுவதனால் உறுதியான இறுக்கமான பொறி தோற்றுவிக்கப்படும்.

இலையின் மேற்பரப்பில் ஈ அல்லது பிற பூச்சிகள் அலையும்போது உணர்ச்சி மயிர்கள் உறுத்தப்பட்டால் இலை மிக வேகமாக மூடிக்கொள்ளும். ஈக்கோ, பிறபூச்சிக்கோ, தப்ப வாய்ப்புக் கிடைப்பதில்லை. தொடர்ந்து பெப்சின் ஐதரோக்குளோரிக்கமிலம் சுரக்கப்பட்டு பூச்சியின் புரதப் பகுதிகள் சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சப்படும். பின் மீண்டும் பொறியாகப் பயன்படுவதற்கு இலை திறந்து கொள்ளும்.





## அல்றொவன்டா

அல்றொவன்டா [Allrovanda] வினசின் ஈப்பொறிக்கு ஒப்பானது. வட இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் ஏரிகளில் மிதந்து வாழும் இத்தாவரம். நன்றாகக் கிளைத்து கொடி போலப் படர்ந்திருக்கும்.

பூச்சிகளைப் பிடிப்பதற்குரிய பொறிமுறை டயோனியாவிற்கு ஒப்பானது. ஆயினும் இதில் இலைகள் சிறியவை, உணர்ச்சி மேடுகளுக்குப் பதில் கிளையெறிந்த உணர்ச்சி மயிர்கள் காணப்படும், இலையின் ஒரு பாதிக்கு மூன்றாக மொத்தம் ஆறு மயிர்கள் காணப்படும்.

## பின்குயிகுலா

பின்குயிகுலா [Pinguicula] என்ற வெண்ணெயுருப்பூண்டு இமயமலைச்சாரலுக்குரியது.

இதன் இலைகள் நிலமட்டத்தில் ரோஜாவுருவில் வைக்கப்பட்டிருக்கும். இலைகளின் மேற்பரப்பில் வெண்ணெய் போன்ற பொருள் சுரக்கப்படுவதனால் ஒட்டுத்தன்மை உடையதாகவிருக்கும். இலையின் மேல் வந்து அமரும் பூச்சிகள் ஒட்டிக் கொள்ள இலை சுருண்டு அவற்றைக் கைப்பற்றிக் கொள்ளும். தொடர்ந்து பெப்சின் ஐதரோக்குளோரிக்கமிலம் சுரக்கப்பட்டு பூச்சிகளிலுள்ள



புரதப் பொருட்கள் சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சப் படும். பின் இலை திறந்து கொள்ளும்.



## பங்கசுவின் வட்டப்புழுப்பொறி

மண்ணில் பலதரப்பட்ட பங்கசுக்கள் உண்டு. இவற்றுள் சில வட்டப்புழுக்களைப் பொறி வைத்துப் பிடித்து உணவாகக் கொள்ளும் என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பங்கசுக்கள் தமது இழைகளிலிருந்து தடம் போன்ற அமைப்புக்களைத் தோற்றுவிக்கும். இவற்றுள் வட்டப் புழுக்கள் [நெமெற்றோட்டுக்கள்] அகப்பட, தடங்கள் இறுகி வட்டப்புழுக்களைத் தப்பவிடாது தடுக்கும்.

தொடர்ந்து பூஞ்சண வலையிலிருந்து கிளைகள்தோன்றி, வட்டப்புழுவை ஊடுருவி, அதனை உணவாகக் கொள்ளும். சில இன வட்டப்புழுக்கள் தாவரங்களில் ஒட்டுண்ணியாக அமைந்து அவற்றிற்குப் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுண்டு.

மண்ணிலுள்ள வட்டப் புழுக்களைக் சட்டுப்படுத்துவதில் பங்கசுக்களும் பங்கு கொள்ளுகின்றன எனக் கொள்ளலாம். பங்கசுக்களினால் தாவரங்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுவதுண்டு; அதுவேறு விடயம்.

இங்ஙனம் பலதரப்பட்ட அங்கிகள் பலதரப்பட்ட இசைவாக்கங்களைக் கொண்டு சூழலில் வெற்றி காணுகின்றன. வெற்றி காண முடியாத அங்கிகள் அழிந்து சூழலிலிருந்து மறைந்துவிடும் ★

- கே. எஸ். குகதாசன் எம். எஸ்ஸி -

# உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில்

# 1980இல் இடம்பெற்ற சாதனைகள்!

1980 தசாப்தத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டு பெரும் புதிய சாதனைகள் ஏற்படுத்தப் பட்டன.

டெஸ்ட் கிரிக்கெட் சரித்திரத்தில் முந்திய தசாப்தங்களிலும்பார்க்க கடந்த தசாப்தத்தில்தான்(1980)அதிக ஓட்டங்கள் எடுக்கப்பட்டும் அதிக விக்கட்டுகளைக் கைப்பற்றப்பட்டும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

## சென்ற தசாப்தத்தில்

அதிக ஓட்டங்களை எடுத்தவர் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் அலன்போர்டர் அவர் எடுத்த ஓட்டங்களின் மொத்த எண்ணிக்கை 7,386 ஆகும்.

அதிக விக்கட்டுக்களைக் கைப்பற்றியவர் மேற்கிந்திய பந்துவீச்சாளரான மல்கம் மார்ஷல். அவர் கைப்பற்றிய விக்கட்டுக்களின் எண்ணிக்கை 323 ஆகும்.

1980 தசாப்தத்தில் அதிக ஓட்டங்களை எடுத்த வீரர்கள் பட்டியல் கீழே தரப்படுகிறது. (2 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்தவர்கள் மட்டும்)

## ஓட்டங்கள்

அலன் போடர் (ஆஸி.)- 7396, டேவிட்கவர் (இங்.) - 6,196, ஜவாட் மியன்டாட் (பாக்.)- 5,642, விவியன் ரிச்சர்ட்ஸ்(மே. இ.)- 5,113, கிறீனிட்ஜ் (மே. இ.) - 5,103. ஹெய்ன்ஸ் (மே. இ.)-5,083, வெங்சாகார் (இந்.)- 4,501, கவாஸ்கர் (இந்.) - 4,475,



அலன் போர்டர்

இயன்போத்தம் (இங்.)-4,051 கிரகாம் கூச் (இங்.) - 3,970, மைக் காட்டிங் (இங்.) - 3,859, கபில்தேவ் (இந்.) - 3,353, முதாஸர் நாஸா (பாக்.) - 3,328, ரிச்சி ரிச்சர்ட்ஸன் (மே. இ.)- 3,320, ஜே. ரைட் (நியூஸ்) - 3,271. டி. குரோவ் (நியூஸ்.) - 3,127, டி. சி. பூண் (ஆஸி.) 3,119, அலன் லாம்ப் (இங்.- - 3,098, ரவி சாஸ்திரி (இந்.) 3,036.

ஹ்யூஜ்ஸ் (ஆஸி.) - 3,026, அமர்நாத் (இந்.) - 2,912, ஜெவ்டுஜோன் (மே. இ.) - 2,884, லொயிட் (மே. இ.) - 2,881, கிறேக் சப்பல் (ஆஸி.) - 2, 712.

சாலிம் மாலிக் (பாக்) - 2,642, கோம்ஸ் (மே. இ.) - 2,490, ஸஹீர் அப்பாஸ் (பாக்.) - 2,460, இம்ரான் கான் (பாக்.) - 2, 430, மோஷின் கான் (பாக்) - 2,427.

டி. எம். ஜோன்ஸ் (ஆஸி.) - 2,370, ஜே. வி கோனி (நியூஸ்) - 2,303, எம். அஸாருதீன் (இந்.) - 2,224, ரிச்சர்ட் ஹட்லி (நியூஸ்)-2,040. ஜி. ஆர். மார்ஷ் (ஆஸி.) - 2,017.

## விக்கட்டுகள்

1980 களில் [illegible] 60க்குமேல் [illegible]கள் பட்டியல் கீழே தரப்படுகிறது;

மல்கம் மார்ஷல் (மே. இ) - 323, ரிச்சர்ட் ஹட்லி (நியூஸ்.) - 289, கபில்தேவ் (இந்.) - 272, இயன் போத்



விவியன் ரிச்சர்ட்ஸ்

தம் (இங்.) - 258, இம்ரான் கான் (பாக்.) - 256, அப்துல் காதிர் (பாக்.) - 216.

ஜே. கார்னர் (மே. இ.) - 212, மைக்கல். ஹோல்டிங் (மே. இ.) - 185, ஜி. எப். லோசன் (ஆஸி.) - 180, [illegible] 171, [illegible] வில்லிஸ் (இங்.)- 143.

ரவி சாஸ்திரி (இந்.) - 143, ரி.எம். அல்டர்மன (ஆஸி.)- 135, ஜி. ஆர். டில்லி( இங்.)- 135, இக்பால்காசிம் (பாக்.)- 131, சி. ஏ. வோல்ஷ் (மே. இ.) - 122.

ஜே. இ. எம்புரே (இங்.)- 120, இ. ஜே. சாட்வீல்ட் (நியூஸ்.) - 115), பி. எல். கயர்ன்ஸ் (நியூஸ்.) - 101, வாஸிம் அக்ரம் (பாக்.) - 94, பி. யார்ட்லி (ஆஸி.) - 89. என். ஏ. பொஸ்டர் (இங்.) - 88, சிப் அஹ்மத் (பாக்.) - 87, ஜே. ஜி. பிரேஸ்வெல் (நியூஸ்.) - 82, மணிந்தர் சிங் (இந்.) . 81, சி.ஜே. மக்டெமர்ட் (ஆஸி.)- 80.

பி. எச். எட்மொண்ட்ஸ் (இங்.) - 76, கொலின். குறொப்ட் (மே. இ.) - 75, டி. ஆர். டோஷி (இந்) - 74, எம். ஜி. ஹ்யூஜ்ஸ் (ஆஸி.) - 72, என.எஸ். யாதவ் (இந்.)- 70, அன்டி. ரொபர்ட்ஸ் யமே. இ.) - 64.

1980 களில் அதிக காட்சுகளைப் பிடித்த (60 க்கு கூடுதலாக) வீரர்கள் விபரம்;

அலன் போடர் (ஆஸ்.) - 115, விவியன் றிச்சட்ஸ் (மே. இ.) - 84, இயன் பொதம் (இங்.) - 79, கோடன் கிறினிஜ் (மே. இ.)- 66. டேவிட் கவா(இங்.) -65, இவட் மியான்டாட்(பாக்.)- 63.

1980 களில் அதிக ஆட்டமிழப்புகளை ஏற்படுத்திய விக்கெட் காப்பாளர்கள் (100க்கு மேல்) ஜெவ்டுஜோன் (மே.இ.) - 206, (201 காட்சுகள், 4 ஸ்டம்பிங்குகள்) சிமித் (நியூஸ்.) - 135 (128 காட்சுகள், 7ஸ்டம்பிங்குகள்) கிர்மாணி (இந்.) - 107 (92 காட்சுகள், 15 ஸ்டம்பிங்குகள்). ★

# மீண்டும் மோதுகிறார் மைக் டைஸன்!

மீண்டும் கோதாவில் மைக் டைஸன் இறங்குகிறார்.

கடந்த பெப்ரவரியில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜேம்ஸ் டக்ளஸா எதிர்பாராத விதமாகத் தோற்கடிக்கப்பட்டார்.

அத்துடன் அவர் அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை இழந்தார்.

37 மோதல்களில் வென்று ஒரு மோதலில் தோற்ற மைக் டைஸன் எதிர்வரும் ஜூன் 16 ஆம் திகதி மீண்டும் மோதுகிறார்.

டைஸனுக்கு இது 39 ஆவது மோதல். அமெரிக்கா, லாஸ் வேகஸில் உள்ள சீஸர்ஸ் மாளிகையில் இது இடம்பெறும்.

பரிசுப்பணம் எவ்வளவு என்பதை டைஸன் வெளியிடவில்லை.

இம்முறை டைஸனுடன் மோதப்போகிறவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஹென்றி ரில்மன் ஆவார்.

ரில்மனுடன் பத்துச்சுற்றுக்களிலும் மோதப்போவதாக டைஸன் அறிவித்திருக்கிறார்.

ரில்மனுக்கு இது 25ஆவது மோதல் ஆகும். 20 போட்டிகளில் வெற்றியீட்டினார்: 4 போட்டிகளில் தோற்றார்.

தொழில் முறையான குத்துச் சண்டைப்போட்டிகளில் இறங்குவதற்கு முன்னர் அமெச்சூர் வீரர்களாக டைஸனும் ரில்மனும் பல தடவைகள் மோதியிருக்கின்றனர்.

அந்த மோதல்களில் டைஸனை ரில்மன் இரண்டு தடவைகள் தோற்கடித்தார்.

ஜூன் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள மோதலின் முடிவைப் பொறுத்தே, ஜேம்ஸ் டக்ளஸுடன் டைஸன் மோதுவதுபற்றி தீர்மானிக்கப்படும் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளியாகியுள்ளது
**விஞ்ஞானம்**
(மீட்டல் பயிற்சி)
ஆக்கம்:
**J. R. சூரி**
ஆண்டு 11 'இயற்கை சமநிலை'
ஆண்டு 10 'ஆவர்த்தன இயல்புகள்' 'குருதிச் சுற்றோட்டம்'
ஆண்டு 9 'வலி', 'மண்'

சஞ்சீவி
# சஞ்சிகை
05 - 05 - 1990 சனிக்கிழமை

**டெல்ரா கல்வி நிலையம்**
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
ஆண்டு 11, 10, 9 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R. சூரி |
| கணிதம் | — திரு. செல்வா, மதி |
| ஆங்கிலம் | — திரு. பிறிட்டோ |
| தமிழ் / சமயம் | — திரு. கணேஷ், ஈசன் |
| சமூகக்கல்வி | — திரு. திருக்குமார் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |

# இந்தியாவையும் பாகிஸ்தானையும் மற்றொரு யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் காஷ்மீர் பிரச்சினை

கடந்த 40 ஆண்டு காலமாக சர்வதேச அரங்கில் அமைதியை அடிக்கடி குறைத்துவரும் பிரச்சினைகள் இரண்டு.

ஒன்று மத்தியகிழக்குப் பிரச்சினை. 1949 ஆம் ஆண்டு இஸ்ரவேல் சுதந்திர பிரகடனத்துடன் இது ஆரம்பமானது. அரபு நாடுகளும் இஸ்ரவேலும் இதுவரை 3 யுத்தக்களை நடத்தி விட்டன. பிரச்சினை இன்றும் தீர்ந்தபாடில்லை. அமெரிக்க சமாதானத் திட்டத்தை இஸ்ரவேல் தவிர்ந்த ஏனைய தரப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளதால் தற்போதுதான் ஓரளவு முன்னேற்றகரமான அறிகுறிகள் அங்கு தென்படுகின்றன.

மற்றது காஷ்மீர் பிரச்சினை. இது இந்தியாவுக்கும்



வி. பி. சிங்

பாகிஸ்தானுக்கும் இடையிலானது. இரு நாடுகளும் இதுவரை 3 யுத்தக்களை நடத்திவிட்டன. இவ்யுத்தங்கள் (1948–1965) நேரடியாக காஷ்மீருடன் தொடர்புடையனவாக 1971 ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானில் [இப்போது பங்களாதேஷ்] இடம்பெற்ற 3 ஆவது யுத்தம் காஷ்மீருடன் தொடர்புடையவை. அல்ல. ஆனால் காஷ்மீர் பிரச்சினை உருவாக்கிய கசப்புணர்வுதான் இந்த இரு நாடுகளையும் யுத்தத்துக்கு இட்டுச் சென்றிருந்தது.

தற்போது உபகண்டம் 4 ஆவது யுத்தம் ஒன்றை நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறது.

ஜம்மு – காஷ்மீரில் (Jammu Kashmir) சுமார் 2 லட்சம் இந்தியத் துருப்புக்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. பாகிஸ்தான் எல்லையில் இருந்து சுமார் 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் இந்தியாவின் 9 இராணுவ அணிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மறுபுறம் அஸாத் காஷ்மீரில் (Azad Kashmir) பாகிஸ்தான் என்றுமில்லாதவாறு படைகளைக் குவித்துவருகிறது.

இந்தப் படைக் குவிப்பும், கலவரங்களும் ஜம்மு – காஷ்மீரில் குடிமக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி வருகின்றன.

ஜம்முவில் உள்ள இந்துக்கள் ஏற்கனவே தமது இல்லங்களைவிட்டு வெளியேறி அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். சுமார் ஒரு லட்சம் இந்துக்களும் சீக்கியர்களும் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். அதேசமயம் ஜம்முவில் உள்ள முஸ்லிம்கள் இந்துக்களுக்கு அஞ்சி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள அஸாத் காஷ்மீருக்குள் சென்றுகொண்டிருக்கின்றனர்.

தலைநகர் ஸ்ரீநகரை, உள்ளடக்கிய காஷ்மீர் பள்ளத்தாக்கையும் ஜம்மு நகரையும் கொண்டதுதான் ஜம்மு – காஷ்மீர்.

### பிரிவினைவாத கிளர்ச்சி

இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது மீண்டும் போர் விளிம்பில் வந்து நிற்பதற்கு ஜம்மு – காஷ்மீரில் கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்றுவரும் பிரிவினைவாதக் கிளர்ச்சிகளே காரணமாகும். இந்தியாவிடம் இருந்து ஜம்மு – காஷ்மீருக்கு சுதந்திரம் கோரி முஸ்லிம்கள் இந்தக் கிளர்ச்சியை நடத்திவருகின்றனர். இந்தக் கிளர்ச்சி ஆரம்பமான நாளில் இருந்து இதுவரை 300 க்கும் அதிகமானோர் ஜம்மு–காஷ்மீரில் கொல்லப்பட்டுள்ளனர். இந்திய பரா இராணுவம் ஜம்மு–காஷ்மீர் முஸ்லிம்களுக்கு எதிராக பெரும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருப்பதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டிவருகிறது. இந்திய சமஷ்டி அமைப்பில் இருந்து ஜம்மு – காஷ்மீரை துண்டிக்கும் நோக்கத்துடன் பாகிஸ்தானால் தூண்டப்பட்ட கிளர்ச்சி என்று தற்போதைய கிளர்ச்சி குறித்து இந்தியா கருதுகிறது.

ஜம்மு – காஷ்மீர் மக்கள் தமது எதிர்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கும் உறுதிமொழி நிறைவேற்றப்படாத பட்சத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தில் இருந்துவிடுபட போராடுகிறார்கள் என்பது பாகிஸ்தானின் கருத்து.

### இந்து மகாராஜா

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு–காஷ்மீரும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள அஸாத் காஷ்மீரும் 1948 ஆம் ஆண்டுவரை ஒரே காஷ்மீராக இந்து மகாராஜா ஒருவரின் கீழ் இருந்தன. காஸ்மீரின் எல்லைகள் 1846 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் வகுக்கப்பட்டவை. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவில் இருந்து பிரிந்து பாகிஸ்தான் தனி நாடாக உருவாக்கப்பட்டது. அப்போது காஷ்மீர் மகாராஜா காஷ்மீரைத் தொடர்ந்து சுதந்திர அரசாக வைத்திருப்பதற்கு முயற்சித்தார். ஆனால் இந்தியா–பாக் பிரிவினை ஏற்பட்டு இரண்டு மாதங்களில் நிலைமை மாறியது. பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் இருந்து (North West Frontier) திடீர்படையெடுப்பு இடம்பெற்றது. படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு காஷ்மீர் மகாராஜாவிடம் போதிய படைப்பலம் இருக்கவில்லை. அவர் இந்தியாவுடன் காஷ்மீரை இணைத்துக்கொண்டு இந்திய இராணுவ உதவியை நாடினார்,

இந்தியாவும் உடனடியாகப் படைகளை அனுப்பியது. பாகிஸ்தானில் இருந்து வந்த படையை இந்திய இராணுவம் காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் இருந்து சிறிது தூரத்தில் வைத்து தடுத்து நிறுத்தியது. காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட முதலாவது யுத்தம் இதுதான். ஐ.நா. வின் தலையீட்டால் போர் நிறுத்தம் உருவானது. காஷ்மீரில் பாகிஸ்தான் பிடித்த இடத்தில் எல்லை (De Facto Line) வகுக்கப்பட்டது. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வஜன வாக்கெடுப்புஒன்றின்மூலம் தீர்க்கவேண்டும் என்பதில் இந்தியாவும் பாகிஸ்தானும் அப்போது இணக்கம் கண்டிருந்தன.

பாகிஸ்தான் கைப்பற்றிய பகுதியே பின்பு அஸாத் காஷ்மீர் என்று அழைக்கப்பட்டது. அஸாத் என்றால் சுதந்திரம் என்று அர்த்தம். அஸாத் காஷ்மீர் முழு காஷ்மீரிலும் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டது.

பாகிஸ்தான் அஸாத் காஷ்மீரில் தனியான தேசியசபை [ஆட்சிமன்றம்] ஒன்றை உருவாக்கி முதலமைச்சர் ஒருவரையும் நியமித்தது இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி ஜம்மு — காஷ்மீர் என்று அழைக்கப்படுகிறது.

### குஜ்ரால் - யாகுப்கான் சந்திப்பு

காஷ்மீர் தொடர்பாக தற்போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உருவாகி வரும் நெருக்கடி நிலையைத் தளர்த்தும் முயற்சியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் குமார் குஜ்ராலும் [Kumar Gujral] பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் யாகுப்கானும் [Yagab Khan] ஈடுபட்டுள்ளனர். இருவரும் கடந்த ஜனவரியில் புதுடில்லியில் சந்தித்தனர். தற்போது மீண்டும் நியூயோர்க்கில் சந்தித்து சுமார் இரண்டரை மணி நேரம் பேச்சு நடத்தி உள்ளனர்.

பொருளாதார ஒத்துழைப்புக்கான ஐ. நா. பொதுச் சபையின் விசேஷக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற இடத்தில் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பேச்சுவார்த்தையும் ஆக்கபூர்வமான பலனை அளிக்கவில்லை என்றே கூறப்படுகிறது.

### சிம்லா ஒப்பந்த அடிப்படையில்

காஷ்மீர் பிரச்சினை சிம்லா ஒப்பந்த அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும் என்று இந்தியா தற்போது கோரி வருகிறத.

சிம்லா ஒப்பந்தம் 1972ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் சுல்பி ஹார் அலி பூட்டோவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டது.

1971 பங்களாதேஷ் யுத்தத்தின் பின் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகள் பரஸ்பர புரிந்துணர்வு மூலம் தீர்க்கப்படவேண்டும் என்று சிம்லா ஒப்பந்தம் தெரிவிக்கிறது.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக சர்வஜனவாக்கெடுப்பு நடத்தக் கோருவது காலம் கடந்த ஒரு கோரிக்கை என்று இந்தியா கருதுகிறது. சிம்லா ஒப்பந்தத்தினால் இந்த சர்வஜனவாக்கெடுப்புக் கோரிக்கை மறைக்கப்பட்டுவிட்டதாகவும் இந்தியா கருதுகிறது.

மறுபுறத்தில் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ [Benazir Bhutto] காஷ்மீருக்காக ஆயிரம் வருடங்கள் யுத்தம் செய்யவும் பாகிஸ்தான் தயார் என்ற தமது தந்தை சுல்பி ஹார் அலி பூட்டோவின் கூற்றை கடந்த வாரம் மீண்டும் நினைவுபடுத்தி இருக்கிறார்.

### இரு நாடுகளிலும் அரசியல்ஸ்திரமின்மை

தற்போதைய நெருக்கடியில் இந்தியா விட்டுக் கொடுக்கக் கூடாது என்று இந்து தீவிரவாதிகளின் பாரதிய ஜனதாக்கட்சி பிரதமர் விஸ்வநாத் பிரதாப்சிங்கை வலியுறுத்தி வருகிறது. லோக் சபையில் இக்கட்சிக்கு 88 ஆசனங்கள் உள்ளன. பாரதிய ஜனதாக் கட்சியின் தயவிலேயே விஸ்வநாத் பிரதாப்சிங்கின் ஆட்சி நீடித்துக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோவின் நிலையும் இதேதான். சமீபத்தித் நம்பிக்கை இல்லாத் தீர்மான வாக்கெடுப்பில் தப்பிப் பிழைத்த பெனாஸிர் பூட்டோவின் மக்கள் கட்சி அரசு, சிந்து மாகாணம் தவிர்ந்த ஏனைய மூன்று மாகாணங்களிலும் வலுவிழந்த நிலையில் இருந்து வருகிறது.

### டில்லியின் நேரடி ஆட்சியில்

ஜம்மு – காஷ்மீர் தற்போது டில்லியின் நேரடி ஆட்சியில் அதாவது கவனர் ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது. 62 வயது நிரம்பிய ஜெக்மோகன் கடந்த ஜனவரி 20 ஆம் திகதி முதல் கவனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் டில்லியின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படுவது குறித்து தம்மிடம் கலந்தாலோசிக்கப்படாததைக் காரணம் காட்டி முதலமைச்சர் பாரூக் அப்துல்லா பதவி விலகிக்கொண்டுள்ளார்.

முன்னாள் காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் மகன் பாரூக் அப்துல்லா.

இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேருவின் நண்பரான ஷேக்



பெனாஸிர் பூட்டோ

அப்துல்லா 1948 ஆம் ஆண்டு ஜம்மு – காஷ்மீரின் முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக இவர் 1953 ஆம் ஆண்டு காவலில் வைக்கப்பட்டார். 1982 ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லா மரணமாக 1983 இல் அவரது மகன் பாரூக் அப்துல்லா முதலமைச்சரானார். பாரூக் அப்துல்லா 1984 இல் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது மைத்துனர் குலாம் மொஹமட் ஷா முதலமைச்சரானார். 1986 இல் இவரது பதவியும் பறிபோனது.

1987 தேர்தலில் இந்திரா காங்கிரஸின் ஆதரவுடன் பாருக் அப்துல்லா மீண்டும் முதலமைச்சர் பதவியை ஏற்றிருந்தார். கடந்த ஜனவரியில் இவர் பதவி விலகும் வரை இப்பதவியை வகித்து வந்தார்.

### தேசிய விடுதலை முன்னணி

ஜம்மு – காஷ்மீரில் இந்திய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் முஸ்லிம்களின் பிரதான கிளர்ச்சிக்குழு ஜம்மு – காஷ்மீர் தேசிய விடுதலை முன்னணி ஆகும். [Jammu Kashmir National Liberation Front] இதன் தலைவர் அமனுல்லாகான் [Amanullahkhan] ராவல் பிண்டியில் இவரது பிரதான தலைமையகம் அமைந்துள்ளது.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த முஸ்லிம் கெரில்லாக்களுக்கு ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன் கெரில்லாக் குழுக்கள் ஆயுதப் பயிற்சி அளித்து வருகின்றன என்று கூறப்படுகிறது.

மூஸ்லிம் கிளர்ச்சிக்காரர்கள் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள அஸாத் காஷ்மீரில் ஆயுதப்பயிற்சி பெற்றபின் ஜம்மு – காஷ்மீருக்குள் வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சில மாதங்களுக்கு முன் இந்திய மத்திய உள்துறை அமைச்சர் மப்தி மொகமட் சையீதின் மகளைக் கடத்தியது இந்த இயக்கம்தான்.

முஸ்லிம்களின் பிரிவினைவாதக் கிளர்ச்சியுடன் இம்முறை காஷ்மீர் நெருக்கடி உருவாகி இருப்பது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் பெரும் சோதனை ஆகும்.

**உலக உலா**
என்.பி.சீலன்

# பத்திரிகை அதிபரின் மனைவி நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதி!

அனுதாப அலையில் நாட்டின் உயர்பதவிகளைப் பிடித்து விடுவது இப்போது ஜனநாயக நாடுகளில் சர்வசாதாரணமாக நடக்கிறது.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். மகன் ராஜீவ் பிரதமரானார்.

பாகிஸ்தான் பிரதர் ஸுல்பிகார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார். மகள் பெனாசிர் பிரதமரானார்.

பிலிப்பீன்ஸில் தலைவர் அக்யுனோ கொல்லப்பட்டார்; மனைவி கொரஸோன் ஜனாதிபதியானார்.

இலங்கையில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொல்லப்பட்டார். மனைவி சிறிமாவோ பிரதமரானார்.

ஒரு தினசரிப் பத்திரிகையின் பதிப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த அனுதாப அலையில் அவருடைய மனைவி நாட்டின் அதிபர் பதவியைப் பிடித்த நிகழ்ச்சி நிக்கரகுவாவில் சென்றமாதம் இடம்பெற்றது.

அவர்தான் 60 வயதான திருமதி வயலெட்டா சமாறொ.

வயலெட்டா சமாறொ. நிக்கரகுவா நாட்டில் வெளியாகும் 'லா பிரென்சா' என்ற நாளிதழின் பதிப்பாளரும், தேசிய எதிர்க்கட்சி யூனியனின் தலைவரும் ஆவார்.

சாதாரண பத்திரிகை எழுத்தாளராக இருந்து வந்த வயலெட்டா சமாரோவை, நாட்டுக்கே அதிபராக உயர்த்தியதற்குப் பின்னணியில் இருப்பது அவருடைய கணவரின் கொலைதான்.

வயலெட்டா சமாறொவின் கணவர் பெட்ரோ ஜோகின் சமாறொ 'லா பிரென்சா' நாளிதழின் பதிப்பாளராக இருந்து வந்தார்.

1978 ஆம் ஆண்டில், நிக்கரகுவாவின் அதிபராக இருந்த சொமோசாவைத் தாக்கி எழுதியதால், சொமோசாவின் ஆட்கள் சமாறொவைச் சுட்டுக்கொன்றனர்.

ஆனால் இந்தக் கொலை வெறிச்செயலுக்கு சற்றும் அஞ்சாத அவருடைய மனைவி வயலெட்டா சமாறொ, தனது கணவனின் எழுத்துப்பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

அதிபர் சொமோசாவின்



வயலெட்டா சமாறொ

அட்டூழியங்களைத் தயங்காமல் தனது நாளிதழில் எழுதி வந்தார்.

தற்பொழுது அதிபர் பதவியில் தோல்வி அடைந்திருக்கும் டானியல் ஒற்றேகா தலைமையில் முன்பு எதிர்க்கட்சியாக இருந்து செயல்பட்டு வந்த சான்டிஸ்டா இயக்கத்தை ஆதரித்து வயலெட்டா சமாறொ எழுதி வந்தார்.

சான்டினிஸ்டா இயக்கம் நடத்திய புரட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், ஆளுங் கட்சியைக் கடுமையாகக் கண்டனம் செய்தும் சமாறொ எழுதினார்.

இறுதியில் சான்டினிஸ்டா படைக்கும், அரசு படைக்கும் 1979 இல் நடந்த பயங்கர சண்டையில் 10 ஆயிரம் பேருக்கு மேல் உயிர் இழந்தனர். பல நகரங்களும், கிராமங்களும் அழிந்தன. சான்டிஸ்டா படை வெற்றி பெற்றது. அதிபர் சோமோஸை கைது செய்து நாடு கடத்தியது.

ஒரு வருடம் கழித்து பராகுவேயில் சொமோசா கொல்லப்பட்டார்.

1979 இல் ஆட்சியைக் கைப்பற்றிய டானியல் ஒற்றேகா ஆட்சியை அமைத்ததும் போராட்டங்களில் தனக்கு ஆதரவாக இருந்து வந்த வயலெட்டா சமாறொவையும் மந்திரி சபையில் வந்து சேரும்படி அழைத்தார். சமாறொவும் அதை ஏற்றுக்கொண்டு, மந்திரிசபையில் சேர்ந்தார்.

ஆனால், டானியல் ஒற்றேகாவின் அரசியல் கொள்கைகள் அனைத்தும் ரஷ்யாவையே எதிர்பார்த்து இருந்ததை சமாறொ கண்டித்து மந்திரிசபையை விட்டுவிலகி விட்டார். அதிலிருந்து டானியல் ஒற்றேகாவுக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து வந்தார்.

தற்போது கடந்தமாத இறுதியில் நடந்த அதிபர் தேர்தலில் டானியல் ஒற்றேகாவுக்கு எதிராக நின்று, வெற்றி பெற்று இருக்கிறார் சமாறொ. 14 கட்சி கூட்டணியின் ஆதரவோடும், அமெரிக்க அரசின் துணையோடும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். சென்ற மாதம் 25 ஆம் திகதி அதிபர் பதவியை ஏற்றார். ★

# மன்னரைக் கிண்டல் செய்தவர் நேபாளத்தின் பிரதம மந்திரியானார்

நேபாளத்தில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுள்ளது.

புதிய பிரதமராக கிருஷ்ண பிரசாத் பத்தாரி பதவி ஏற்றுள்ளார்.

பெயரளவுக்கு மட்டுமே மன்னர் இருக்கவேண்டும்; நாட்டை நிர்வாகம் செய்யும் உரிமை மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசுக்கு வழங்கவேண்டும் — இப்படிக் கூறும் புதிய அரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டு வரப் போவதாகப் பிரதமர் பத்தாரி அறிவித்திருக்கிறார்.

இவர் மீது நேபாள நீதி மன்றத்தில் இன்றும் ஒரு வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.

இவ்வழக்கில் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு என்ன தெரியுமா?

நேபாளத்தின் தற்போதைய மன்னரான பிரேந்திராவின் தந்தையாரான வீரேந்திரர் ஆட்சி நடத்திய சமயம், அவரைக் கிண்டல் பண்ணி 'ஜோக்' ஒன்றைச் சொன்னார் என்பதே அக்குற்றச்சாட்டாகும்.

மன்னர் பிரேந்திராவால் பிரதமராக நியமிக்கப்பட்ட போது, திரு. பத்தாரி தன்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம் அந்த 'ஜோக்' கைக் கூறினார்.

அந்த 'ஜோக்' வருமாறு:

ஒரு முறை உச்சிமாநாடு நடந்தபோது கடும் பணிகளுக்குப் பிறகு அமெரிக்க வெள்ளைமாளிகையில் அதிபர் றேகனும் சோவியத் அதிபர் கோர்பச்சேவும் ஒன்றாக அமர்ந்து விஸ்கி அருந்திக் கொண்டிருந்தனர்.

எப்படியோ நம் மன்னர் வீரேந்திரர் வெள்ளை மாளிகைக்குள் புகுந்து அங்கு சென்றுவிட்டார்.

மன்னருக்கும் அவர்கள் விஸ்கி ஊற்றிக் கொடுத்தனர்.

மன்னரும் இரண்டு 'பெக்' குடித்தார்.

அப்போது பகவான் பசுபதி நாதர் அங்கு தோன்றினார்.

அவரிடம் றேகன், 'ரஷ்யாவை நாங்கள் எப்போது வெல்ல முடியும்?' — என்று கேட்டார்.

'அது உங்கள் வாழ்நாளிலேயே முடியாத காரியம்' — என்றார் பசுபதிநாதர்.

உடனே கோர்பச்சேவ், 'அமெரிக்காவைப் போல் நாம் எப்போது பெரிய நாடாக வரமுடியும்?' –என்று கேட்டார்.

அதற்குப் பசுபதிநாதர், 'உங்கள் வாழ்நாளில் அது முடியாத காரியம்' — என்றார்.

அடுத்து மன்னர் வீரேந்திரர் கேட்டார்.

'என் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் 15 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதாக நான் வாக்களித்திருக்கின்றேன். இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. என் வாக்குறுதி எப்போது நிறைவேறும்?'

பசுபதிநாதர்: 'என் வாழ்நாளில் கூட அது சாத்தியப்படாது மன்னா?'—

பிரதமர் பத்தாரி இந்த 'ஜோக்' கைக் கூறியதும் செய்தியாளர் மாநாடு கலகலத்தது.

மன்னருக்கு 'ஜோக்' அடித்தவர் பிரதமமந்திரியாகி விட்டார்.

பிரதமரான பின்னரும் அவர் மீதான வழக்கு இன்னமும் விலக்கிக் கொள்ளப்படவில்லை. ★

## பொது அறிவுப் போட்டி: 38

**பரிசு பெற்றவர்கள் விபரம்**

**முதலாவது பரிசு:**
திருமதி. சிறீரஞ்சனி சுந்தரமூர்த்தி,
அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.

**இரண்டாவது பரிசு:**
த. நவரட்னவேல்,
நகரசபை, சாவகச்சேரி.

**மூன்றாவது பரிசு:**
சி. சிவதேவி, துவாரகை,
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

**பொது அறிவுப் போட்டி இல: 38 சரியான விடைகள்**

1. கியூபா – அமெரிக்கா 2. பாங்கொக் 3. அலெக்சாந்தர் 4. ரூபிள் 5. கேரளா 6. அலை 7. மாணிக்கம் 8. இளஞ்சிவப்பு 9. நேருஜி 10. கொசு 11. தியாகராஜ பாகவதர் 12. அமெரிக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org